2011-2021

# வல்லகி

## பேத்தாழை பொதுநூலகத்தின் பத்தாண்டு நிறைவு சிறப்புமலர்



2011 – 2021

# வல்லகி

பேத்தாழை பொது நூலகத்தின் பத்தாண்டு நிறைவு சிறப்புமலர்

## இதழ் ஆசிரியர் குழு

திரு. மரகதம் பிரகாஷ்
திருமதி. தாரணி தங்கத்துரை
திரு. சிவஞானசெல்வரெட்ணம் குகதீசன்

MEDIA UNIT
PETHALAI PUBLIC LIBRARY

வெளியீட்டுப் பிரிவு,
பேத்தாழை பொதுநூலகம்,
கல்குடா வீதி, பேத்தாழை,
வாழைச்சேனை.
தொலைபேசி: 065 2258317
E-mail: pethalailibrary2011@gmail.com
Website: www.pplib.blogspot.com

# நூல் பதிப்புத் தரவுகள்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | வல்லகி 2011-2021 |
| **வகை** | : | நூலக ஆண்டு மலர் |
| **இதழ்** | : | 01 |
| **இதழ் ஆசிரியர் குழு** | : | திரு. மரகதம் பிரகாஷ்<br>திருமதி. தாரணி தங்கத்துரை<br>திரு.எஸ்.குகதீசன் |
| **மலர்க் குழு** | : | திரு.எஸ்.மோகனராசா<br>திருமதி. புனிதா ஈவெரா<br>திருமதி.க.கங்கா<br>திருமதி. புஸ்பா தயாளன்<br>திருமதி. சசிகலா அருள்ராஜா<br>திருமதி. துவாரதி யுசந்தன்<br>திருமதி. பரமானந்தினி கௌரிகாந்த் |
| **இதழ் வடிவமைப்பு** | : | எஸ்.ஏ.ஸ்ரீதர் |
| **வெளியீட்டு ஆண்டு** | : | 2021, டிசம்பர் |
| **பக்கங்கள்** | : | **xxxiii** + 85 |
| **பிரதிகள்** | : | 300 |
| **மலர் பதிப்பு** | : | அமரர். திருமதி. சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை<br>குடும்பத்தினர் (அவுஸ்திரேலியா) |
| **வெளியீடு** | : | வெளியீட்டுப் பிரிவு, பொது நூலகம், பேத்தாழை. |
| **மலர் அச்சு** | : | அனாமிகா பிரிண்டர்ஸ், களுதாவளை. |

# நன்றி நவில்கின்றோம்



மலர் வெளியீட்டிற்கு மனமுவந்து நிதியுதவி வழங்கிய
வாழைச்சேனை புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த
அமரர். திருமதி. சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை (அதிபர்)
அவர்களின் குடும்பத்தினருக்கு (அவுஸ்திரேலியா)
நூலக உத்தியோகத்தர்கள், வாசகர் வட்டம் மற்றும் நூலக
ஆலோசனைக்குழு, கோறளைப்பற்று பிரதேச சபை சார்பில்
மேலான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

– மலர்க்குழு-

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய! வாழியவே!
வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

(வாழ்க தமிழ்மொழி)

ஏழ்கடல் வைப்பினுந் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

(வாழ்க தமிழ்மொழி)

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



சி. சுப்பிரமணிய பாரதி

# நூலக கீதம்

**கவி வரிகள்:**

**கவிஞர். அமரர். மூனாகானா (மு. கணபதிப்பிள்ளை)**
**கறுவாக்கேணி முத்துமாதவன், வன்னியூர் ரமேஸ், ஆ.தனேஸ்வரன்**

அறிவொளி வீசும் நூலகமே! அகவிருள் போக்கும் ஆதவனே!
மதியீர்ப்பால் உதயமாகி என்றும் மயக்கம் தீர்க்கும் மருந்தே!
இரு மொழி மூவின நால்மதத்தாரும் கூடும் தாழையூர் நூலகமே

(அறிவொளி வீசும்...)

ஆயகலை நூல்கள் தூய வழித்துணைகள் தொடரும்
ஐயம் விலகும்
ஊரும் முழு உலகும் அறிஞர் பலர் வாழ உயர்த்தும்
உனை அணைக்கும்
அலையெழும் காற்றில் தாழம்பூ மலரும்
வாசம் தேசம் தாண்டும்
இணைய வழிவந்து புதுமை பல சேர்க்கும்
செயலே எழிலாகும்

அறிஞர்கள் பலர் இங்கு நூலாக வாழும்
பேரறிவாலயம் நீயாகும்
மாணவர் வந்தாலும் மேதைகள் வந்தாலும்
தேவை தீர்க்கும் பணி உனதாகும்
பார் முழுதும் புகழ் கொண்டு
பல்லாண்டு நீ வாழ்கவே!

அறிவொளி வீசும் நூலகமே!
அக விருள் போக்கும் ஆதவனே!

மதியீர்ப்பால் உதயமாகி – என்றும்

மயக்கம் தீர்க்கும் மருந்தே!

# வாழ்த்துச் செய்தி




## திரு. என். மணிவண்ணன்

ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம்,
கிழக்கு மாகாணசபை, திருகோணமலை.


தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு, கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுள் ஒன்றான கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்ற தரம்-2 நூலகமான பேத்தாழை பொது நூலகத்தினால் வெளியிடப்படுகின்ற "வல்லகி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உள்ளூராட்சி ஆணையாளர் என்கின்ற வகையில், கிழக்கு மாகாணத்தில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் கீழும் செயற்படுகின்ற பொதுநூலகங்களின் செயற்பாடுகள் உயர்நிலையினை எட்ட வேண்டும் என்பதும், இதுபோன்ற பணிகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பதும் எனது அவாவும் வேண்டுகோளுமாக காணப்படுகின்றது. கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் அவர்களால் 2011ஆம் வருடம் நவீன தொழினுட்ப வசதிகளுடன் உருவாக்கப்பட்டு, பொதுமக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டு 10 வருடங்கள் நிறைவடைந்துள்ள செய்தியும், அதன் வெளிப்பாடாக தேசிய வாசிப்பு மாதம், நூலகத்தின் பத்தாண்டு பூர்த்தி என இரு நிகழ்வுகளின் வெளிப்பாடாக அமையும் இந்தச் சிறப்பு மலர் வெளியீடானது மென்மேலும் தொடர்ந்து ஆண்டு தோறும் வெளிவந்து பிரதேசத்தினதும், உள்ளூர் படைப்பாளிகள், வாசகர்களின் படைப்புக்களோடும் ஆதரவோடும் இப்பணி முன்னேற வேண்டும் எனவும் எதிர் பார்க்கின்றேன்.

தற்கால இலத்திரனியல் சூழலில் நூலகங்களுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கை குறைவடைந்தும், வாசிப்பு மட்டம் குறைவடைந்து செல்வதாக கணிப்புக்கள் தெரிவித்தாலும், இலத்திரனியல் தொழினுட்பத்தினைப் பயன்படுத்தியே நூலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடத்தி வருகின்ற பேத்தாழை பொது நூலகத்தின் ஊழியர்களுக்கும், இதனை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் பிரதேச சபைக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் கால்கோளாய் அமைவன பாடசாலைகளும், பொதுநூலகங்களும் ஆகும். அவ்வகையில், பொதுநூலகங்களின் செயற்பாடுகள் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும். பொதுநூலகங்களின் வளர்ச்சிக்காய் உள்ளூராட்சி மன்றங்களினால் வரவு செலவுத் திட்டத்தில்

பொருத்தமான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். நூலகங்களில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களுக்கு சமகால தொழினுட்ப யுகத்திற்கேற்ற வாறான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன் மூலம் வினைத்திறன் மிக்கதான கட்டமைப்புக்களையும், செயற்றிட்டங்களையும் வகுத்து நூலகங்களின் சேவைகளை விஸ்தரித்து சமூகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக மாற்ற முடியும். இது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

பேத்தாழை பொது நூலகத்தின் பணிகள் குறித்து அறிந்து பெருமிதம் கொள்கின்ற அதேவேளை இந்நூலகத்தின் வளர்ச்சியில் கைகோர்த்து நிற்கும் வாசகர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது மனம் கனிந்த நன்றியோடு கூடிய பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் குறித்த இம்மலர் சிறப்பாக வெளிவர தொடர்ந்து உழைத்து வரும் அனைவருக்கும் குறிப்பாக மலர்க் குழுவினருக்கும், விழாக்குழுவினருக்கும் எனது மனமார்ந்து வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் உவகை கொள்கின்றேன்.

# வாழ்த்துச் செய்தி




## சி.பிரகாஸ் (SLAS)

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கல்லடி, மட்டக்களப்பு


ஒரு மனிதன் தன்னை மட்டுமன்றி தனது சமூகத்தைப் பற்றியும் என்று சிந்திக்கத் தொடங்குகின்றானோ அப்பொழுது அவன் வரலாறுகளில் பதியப்படும் நபராக மாற்றமடைகின்றான். இவ்வாறு ஒரு மனிதனை உருவாக்குவதில் பெரும் பங்கு வாசிப்பிற்கு இருக்கின்றது என்றால் அது மிகையல்ல. இதனை அடிப்படையாக கொண்டு உள்ளூராட்சி மன்றங்களால் பொதுநூலக சேவை மிக அத்தியாவசியமான சேவையாக பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றது.

மனிதனை அறிவு பூர்வமாக ஆற்றுப்படுத்தும் மையங்களாக நூலகங்கள் திகழ்கின்றன. தேசிய அளவில் வாசிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டு அதன் பலவீனங்களை களைந்து பலமிக்கதாக மாற்றி வாசிப்பை மேலோங்கச் செய்யும் செயற்பாடுகளிற்கு கால்கோளாக தேசிய வாசிப்பு மாதம் அமைகின்றது. நான் உள்ளூராட்சியில் கடமையைப் பொறுப்பேற்றதும் இவ்வாறானதோர் வாசிப்பு மாதத்திலேயாகும். அவ்வகையில் உள்ளூராட்சியில் கடமையைப் பொறுப்பேற்று அகவை மூன்று கடக்கையில் மீண்டுமோர் வாசிப்பு மாதம் ஆக அமைவதானது மனதை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றது. இந்நிலையில் அனைத்து நூலகங்களும் தங்களது சேவையை விரிவாக்கி **"தக்கன பிழைத்தல்…"** என்பதற்கேற்ப தங்களைத் தகவமைத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்நிலையில் கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொதுநூலகங்களும் ஆண்டு தோறும் தேசிய வாசிப்பு மாதத்தினை சிறப்பாக அனுசரிப்பதும் அதன் ஒரு அலகாக பல்துறை விடயங்களை உள்ளடக்கி **'சஞ்சிகை'** வெளியிடுவதும் பாராட்டத்தக்கதாக மட்டுமின்றி மனதிற்கு நிறைவைத் தரும் விடயமாகவும் அமைகின்றது.

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு". (396)**

என்னும் வள்ளுவன் வாக்கிற்கேற்ப மக்களது அறிவுவிருத்தியை தூண்டும் வகையில் பொது நூலகங்கள் தங்களது சேவைகளை மென்மேலும் வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வகையில் கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ்வருகின்ற **பேத்தாழைப் பொதுநூலகமும்** அப்பகுதி மக்களது அறிவுப் பசிக்கு நல்லமுதூட்டி இன்று தனது பத்தாவது அகவையை இனிதே பூர்த்தி செய்து பதினோராவது அகவையில் வெற்றிகரமாகத் தடம் பதிக்கின்றது. இவ்வகையில் இந்நூலகத்தின் சேவையைப் பாராட்டி **'வல்லகி'** எனும் பெயரில் நூல் வெளியீட்டை மேற்கொள்வது இந்நூலகத்திற்கு செய்யும் நல்லதோர் கைங்கரியமாகவே அமையும்.

இவ்வகையில் இவ்வருடம் இந்நூலை வெளியிட முன்னின்று உழைத்த கோறளைப்பற்று பிரதேச சபையினர், சபையின் கீழ் வரும் பேத்தாழை நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் வாசகர் வட்டத்தினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

# வாழ்த்துச் செய்தி




## சிவநேசதுரை சந்திரகாந்தன்

பாராளுமன்ற உறுப்பினர்,
இணைத்தலைவர், மாவட்ட அபிவிருத்திக்குழு,
மட்டக்களப்பு மாவட்டம். தலைவர்- த.ம.வி.பு. கட்சி


***"தொட்டனைத் தூறும் மணற்கேணி – மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" - திருக்குறள்***

**அ**றிவுத் தேடலின் ஒரு அகராதியாய் திகழ்ந்து கொண்டிருக்கும் பேத்தாழை பொது நூலகம் தனது பத்தாண்டு பூர்த்தியை மிகவும் சிறப்பாகக் கொண்டாடும் இத்தருணத்தில், இவ் அறிவுக் கருவூலம் தனது வரலாற்றுப் பயணம் மற்றும் சாதனைகள் மேலும் தன் வாசகர்களின் படைப்புக்கள் என பல அம்சங்களுடன் புதுப்பொலிவு பெறும் 'வல்லகி' எனும் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துரைப்பதில் உளம் மகிழ்கின்றேன்.

நான் கிழக்கு மாகாணத்தின் முதல் முதலமைச்சராக பதவி வகித்தபோது இந்நூலகமானது 2011.12.10 அன்று அறிவுத் தேடலின் புரட்சிக்காய் வித்திடப்பட்டது. எனது அரசியல் பிரவேசத்தில் அடைய முடியா இலக்குகளை அடைய நான் முயற்சிக்கவில்லை. மாறாக அறிவு, திறன், ஆற்றல் என்பவற்றிற்கு ஏற்றாற்போல் சமூகத்தின் நிலையான இருப்பைப் பாதுகாக்கும் செயற்றிட்டங்களையே எனது அடையக் கூடிய இலக்குகளாக நான் கொண்டிருந்தேன். இதற்கான எடுத்துக்காட்டுகள் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பாகங்களிலும் சான்று பகிர்கின்றன.

சமூகம் வலுப்பெறும் செயற்பாட்டிலே 'கல்வி' எனது குறிக்கோள்களிலே முதன்மையானது. அதனடிப்படையில் எனது சொந்த மண்ணான பேத்தாழையில் இதற்கான வித்திட்டமை எண்ணி நான் பேருவகை கொள்கின்றேன். இன்றைய நவீன உலகில் எதிர்மறையான எண்ணங்களின் வெளிப்பாட்டின் பயனால் வாசிப்பில் ஆர்வமற்றவர்களாக மாணவர்களும் இளைஞர் யுவதிகளும் காணப்படுகின்றார்கள். ஆளுமைமிக்க சமூகத்தின் தோற்றப்பாட்டின் அடிப்படை, வாசிப்பு என்பதை உணர்ந்து அதன் பிரதிபலிப்பாகவே இந்நூலகத்தினை அமைக்க திடசங்கற்பம் பூண்டேன்.

வாழ்க்கையே ஓர் தேடல்தான்... இவ்வாறான சூழலில் வாசிப்பிலிருந்து தூரப்படுத்தப் பட்டிருக்கும் எமது எதிர்கால சந்ததியினரை வாசிப்போடு மையப்படுத்த வேண்டிய கட்டாயம் சமூகத்தை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் உரியது.

அதற்கேற்றாற் போலவே எனது அணுகுமுறையும் அமைந்திருந்தது. ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தக தலைப்புக்களைக் கொண்ட ஓர் நூலகமாகத் திகழ வைப்பதே எனது இலக்கு. தற்போது சுமார் இருபத்தையாயிரம் புத்தகங்களைக் கொண்டிருந்தாலும் தேசிய அளவில் இணைய அணுகல் சேவையை நடைமுறைப்படுத்திய முதலாவது நூலகமாகத் திகழ்வது பெருமைக்குரியது.

“வீட்டிற்குள் ஓர் புத்தகசாலை அமைத்திடுதல் வேண்டும்” எனும் அறிஞர் அண்ணாவின் கருத்திற்கு இசைந்தாற் போல, “வீட்டிற்கு ஓர் பட்டதாரி உருவாக்குவதே எனது இலக்கு” அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்நூலகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் சிறப்பாக உள்ளதோடு எதிர்காலத்திலும் மென்மேலும் இச்செயற்பாடுகள் மேலோங்க வேண்டும் என வாழ்த்துரைத்து மகிழ்கின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



## திரு. நாகலிங்கம் திரவியம்

(முன்னாள் உறுப்பினர், கிழக்கு மாகாண சபை
முன்னாள் உறுப்பினர்,
கோறளைப்பற்று பிரதேச சபை)
பேத்தாழை, வாழைச்சேனை.

*ஒரு மனிதன் வாசிப்பதனாலேயே பூரண நிலையை அடைகின்றான். அந்த வகையில் ஒரு மனிதனின் அறிவுப் பசிக்கு விருந்தளிக்கும் ஒரே இடம் நூலகம் ஆகும். அவ்வாறான ஒரு நூலகம் எமது பேத்தாழை மண்ணில் கிழக்கு மாகாண முதல் முதலமைச்சரான சி.சந்திரகாந்தன் அவர்களினால் 2011-12-10 அன்று மிகவும் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த வரலாற்றுச் சம்பவம் இப்பிரதேசம் பெற்ற பெரும்பாக்கியம் ஆகும். இதனை 50,000 புத்தகத் தலைப்புக்களுடன் கூடியதொரு பெரும் நூலகமாக உருவாக்க வேண்டும் என்பதே அவரது அவா.*

*இந்நூலகமானது தற்போது சுமார் 25,000 நூல்களையும், சுமார் 2800க்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுடனும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தற்பொழுது பேத்தாழை பொது நூலகம் ஆரம்பிக்கப்பட்டு பத்து வருடங்கள் நிறைவடைந்துள்ளமையும் அதனையொட்டி பத்தாண்டு நிறைவு விழாவும் 'வல்லகி' எனும் பெயரில் சிறப்பு மலர் வெளியீடும் நடைபெறவிருப்பது இந்நூலகத்தின் வளர்ச்சியின் ஒரு படியாகவே அமைகின்றது. இந்நூலகமானது எமது பிரதேசத்திற்கு மட்டுமல்லாது எமது பிரதேசம் தாண்டி பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் பயனளித்து வருகின்றது.*

*அத்தோடு, தற்போது நாடு 'கொரோனா' சூழல் காரணமாக முடக்க நிலையில் இருந்த போதும் நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி 'நிலா முற்றம்' என்கின்ற பெயரில் Zoom ஊடாக இலக்கியக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதானது பொது நூலக வரலாற்றில் புதியதொரு ஏற்றமிகு செயலாகும்.*

சமூகத்தில் வாசிப்பின் முக்கியத்துவத்தினை விளக்குகின்ற வகையில் பல்வேறு போட்டிகள், கண்காட்சிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் மூலம் தனது பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது.

இந்த வகையில் எமது பேத்தாழை பொது நூலகமானது 'ஒரு தசாப்த நிறைவினை முன்னிட்டு வெளியிடுகின்ற 'வல்லகி' சிறப்பு மலருக்கும், நூலகத்தின் வளர்ச்சிக்காக அயராது பணி புரிந்து வருகின்ற நூலகப் பணியாளர்கள் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்ற பிரதேச சபைக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# வாழ்த்துச் செய்தி




**எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்**

*எழுத்தாளர்,*
*சமூக, கலை, இலக்கிய, அரசியல்*
*செயற்பாட்டாளர்*
*பிரான்ஸ்.*


*அப்போதுதான் மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. கிழக்கிலங்கையில் மெல்லமெல்ல அமைதி திரும்பிக் கொண்டிருந்தது. மக்கள் அச்சமின்றி இயல்பு வாழ்க்கை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர்.*

*ஆனாலும் அந்த கொடிய யுத்தம் விட்டுச்சென்ற உயிரிழப்புகளும் அழிவுகளும் மக்களின் எதிர்காலம் மீது பாரிய கேள்விகளை எழுப்பி நின்றன. கல்வி, பொருளாதார மற்றும் உள்கட்டுமான வசதிகள் அனைத்தும் சீர்குலைக்கப்பட்டும் சின்னாபின்னமாக்கப்பட்டும் நலிவடைந்து கிடந்தன.*

*இந்நிலையில்தான் அரசாங்கம் கிழக்கு மாகாண சபைக்காக முதலாவது தேர்தலை அறிவித்தது. கிழக்கின் முதலாவது முதலமைச்சராக சி.சந்திரகாந்தன் அவர்கள் பொறுப்பேற்றார். ஆம் அதனை பதவி என்பதை விட பெரும் சுமைமிக்க பொறுப்பாகவே வரலாறு அவரிடம் கையளித்தது எனலாம்.*

*கிழக்கு மாகாண சபையின் செயலூக்கம் மிக்க பணிகள் காரணமாக சிந்தனை, வாசிப்பு, எழுத்து, விமரிசனம், வாதப் பிரதிவாதங்கள், கருத்துருவாக்கம் என்கின்ற அறிவுப் பாரம்பரியத்தின் அனைத்து வாசல்களும் மீண்டும் திறக்கப்படலாயின. முதலமைச்சரின் பணிகள் கல்விப்புலம் சார்ந்த புத்துருவாக்கம் ஒன்றுக்காய் முடுக்கி விடப் பட்டன. சில பாடசாலைகள் மீள கட்டியமைக்கப்பட்டன. பல பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டு வசதி வாய்ப்புக்கள் அதிகரிக்கப் பட்டன. புதிய கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டன. ஊர்கள் தோறும் நூல்நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப் பட்டது.*

*அவ்வேளையில் தான் தன்னை வளர்த்து உருவாக்கிய வாழைச்சேனை மண்ணுக்கு மிகப்பெரிய நூல் நிலையம் ஒன்றை உருவாக்கித்*

தரவேண்டும் என்கின்ற தீப்பொறி ஒன்று முதல்வரின் மனதிலே தோன்றுகின்றது.

மாகாணத்தின் முதல்வரல்லவா? இடத்தெரிவு, திட்டமிடல், நிதி ஒதுக்கீடு, அடிக்கல் நாட்டு விழா என்று ஒன்றன்பின் ஒன்றாக நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக என்பார்களே அப்படி பேத்தாழை மண்ணிலே நூலகக் கட்டடம் நாளுக்கு நாள் வளரத் தொடங்கியது. நூலகம் முழுமையடைவதற்கு நூல்கள் மட்டுமல்ல அவை நல்ல நூல்களாகவும் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தவராக என்னை அழைத்துப் பேசினார் முதல்வர்.

யாரிடம் எந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்பது அவருக்கு கைவந்த கலை. அவ்வேளையில் நான் கிழக்கு மாகாண இன நல்லுறவுப் பணிப்பாளராக செயற்பட்டுக் கொண்டிருந்த காலம். தொடர்ச்சியான வேலைப்பழுக்கள். காலமும் நேரமும் எங்களை முந்தி ஓடிக் கொண்டேயிருந்தது. ஆனாலும் அத்தனைக்கும் மத்தியில் இந்தியா சென்று நல்ல நூல்களை தெரிவு செய்தல் வேண்டும் என்று முதல்வர் என்னைப் பணித்தார்.

இந்தியாவுக்கான எனது ஐந்தே நாள் பயணம் உறுதியானது. நாள்தோறும் சுமார் பத்துமணிநேரம் சென்னை பெருநகரத்து மூலை முடுக்குகள் எங்கும் அலைந்து அலைந்து அத்தனை பதிப்பகங்களையும் அணுகி நூல்களை தெரிவு செய்வதில் களைப்பே தெரியவில்லை. கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? ஒரு வாசகனாய், எழுத்தாளனாய் வாழ் நாளெல்லாம் பயணிக்கும் எனக்கு எமது மக்களுக்கான ஒரு நூலகத்துக்கு நூல்களை தெரிவு செய்யும் கடமையில் எப்படி களைப்பு ஏற்படும்? எனது இந்த களப்பணியில் தங்களது எவ்வித சோர்வினையும் வெளிக்காட்டிக் கொள்ளாது அத்தனை நாட்களும் என்னோடிணைந்து எம் கடன் பணிசெய்து கிடப்பதே என்று ஓயாது உழைத்த திராவிட தோழமைகள் நீலகண்டன் மற்றும் அமுதா போன்றவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள்.

சைவ சித்தாந்தம் முதல் பின்நவீனத்துவம் வரையும் கண்ணதாசனில் இருந்து மார்க்ஸிம் கார்க்கி ஈறாகவும் டார்வினில் தொடங்கி பெரியார், அம்பேத்கார் என்று மார்க்சிசம், பெண்ணியம், இலக்கியம், அரசியல், வரலாறு, பொருளாதாரம் என்று பல்வேறுபட்ட எழுத்துக்களையும் பேத்தாழை நூலகத்தில் கொண்டு குவிக்க முடிந்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

2011ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் திறந்து வைக்கப்பட்ட இந்த நூலகம் இன்றோடு பத்து வருடங்களை பூர்த்திசெய்து தன் பணியினை

செவ்வனே ஆற்றி வருவதையிட்டு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமன்றி தேசிய அளவில் இணையவழி சேவையை நடைமுறைப்படுத்திய முதலாவது நூலகமாக இது இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இன்று வரை சுமார் இருபதாயிரம் நூல்களை கொண்டியங்கும் இந்நூலகம் எதிர்காலத்தில் ஒரு லட்ஷம் நூற்களையாவது கொண்ட ஒரு நூலகமாக வளர்ச்சி காண வேண்டும்.

கார்ல் மார்க்ஸ் என்னும் உலக மகா மேதையை உருவாக்கிய ஒரு லண்டன் நூலகம் போல், அண்ணாத்துரையை அறிஞராக்கிய ஒரு கன்னிமரா நூலகம் போல் எமது பேத்தாழை நூலகமும் எதிர்காலத்தில் தன்பெயர் சொல்லும் பேரறிஞர்களை உருவாக்கும் வண்ணம் வளர்ச்சி பெற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்நூலக உருவாக்கத்துக்கு அத்திவாரமிட்ட கிழக்கின் மைந்தன் கௌரவ. சந்திரகாந்தன் பா.உ அவர்களுக்கும் அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைத்து வரும் நூலகர்கள், உத்தியோகஸ்தர்கள், பிரதேச சபையின் தவிசாளர்கள், நிர்வாகத்தினர், மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் அக மகிழ்கின்றேன்.



# வாழ்த்துச் செய்தி



## திரு. தா.உதயஜீவதாஸ்

(முன்னாள் தவிசாளர்,
கோறளைப்பற்று பிரதேச சபை)
சந்திவெளி.

*எமது நாட்டில் மிக நீண்ட காலமாக இன முரண்பாட்டின் காரணமாக கடந்த முப்பது வருடங்களாக யுத்த சூழ்நிலை காணப்பட்டு வந்தது. தற்போது அது முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.*

*அதன் பின்னரான இன்றைய கால கட்டத்தில் ஓர் சமாதானமான சூழல் உருவாகி உள்ளது. இந்தக் காலப்பகுதியில் எமது பிரதேசத்து தமிழ் மக்களுக்காக ஒரு நூலகத்தின் தேவை அத்தியாவசியம் என உணரப்பட்டது. காரணம் யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டு நலிவடைந்த எமது மக்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்பாக கல்வி மட்டுமே காணப்படுகிறது.*

*எமது நாட்டில் அனைவருக்கும் சமமான இலவசக் கல்விமுறை பக்க பலமாக இருக்கும் போது, அதனுடன் சேர்ந்து எமது பிரதேச மாணவர்களின் கல்வித்திறனை மேலும் வழிப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு கோறளைப்பற்று பிரதேச சபையினால், கிழக்கு மாகாணசபையின் முதல் முதலமைச்சர் கௌரவ. திரு.சி.சந்திரகாந்தன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் இந்த நூலகம் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டது.*

*இதன் மூலம் பிரதேசத்தில் உள்ள அனைத்து மாணவர்களும் எழுத்தாளர்களும் வாசகர்களும் பயனடைகின்றனர் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இக்காலப்பகுதியில் நான் கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராகக் கடமையாற்றியதை இட்டும் மன மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*இன்று, கோறளைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் மிகவும் சிறந்த வசதிகளுடன் கூடிய பெரும் நூலகமாக விளங்கி வருகின்றது. 10 ஆண்டுகளை கடந்து சிறப்பான செயற்பாடுகளுடன் இந்த நூலகம் நடைபோடுவதனை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நூலகத்தினை திறம்பட வழிநடத்தும் நூலகர்கள், ஊழியர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.*

*மேலும், எமது மாவட்டத்தில் சிறந்த நூலகமாக பேத்தாழை நூலகம் உருவாகி எமது இளைய சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியில் எப்போதும் துணை நிற்கும் என்று நம்புகிறேன். பத்தாம் ஆண்டு நிறைவினை கடந்து செல்லும் இந்த நூலகத்தின் பத்தாண்டு நிறைவு சிறப்பு மலரான 'வல்லகி' இதழ் வெளியீட்டுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

# வாழ்த்துச் செய்தி




**எம். என். ரவிகுமார்**
உபதலைவர் - இலங்கை நூலகச் சங்கம்
சிரேஷ்ட உதவி நூலகர்,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
இலங்கை


வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வரும் பேத்தாழை பொதுநூலகத்துக்கும் எனக்குமான தொடர்பு ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. நான் இந்நூலகத்தை தரம் 2 நூலகமாக தரம் உயர்த்துவதற்காக அதனை மதிப்பீடு செய்யும் நோக்குடன் தேசிய நூலகத்தினால் பணிக்கப்பட்டிருந்தேன்.

அவ்வேளை முதன் முறையாக இந்நூலகத்தை பார்வையிடச் சென்ற போது பேத்தாழை பொதுநூலகத்தின் தோற்றமும் அதன் கட்டமைப்பும் அது வழங்கிவரும் சேவைகளும் என்னை பிரமிக்க வைத்தது. அன்று முதல் இன்றுவரை பேத்தாழை பொதுநூலகத்தின் செயற்பாடுகளில் எனக்கும் சிறிய தொடர்பு உள்ளது எனக்கூறுவதில் நான் பெருமை அடைகின்றேன். இந்நூலகமானது கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களால் அவர் பிறந்த மண்ணிலேயே உருவாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் ஏறக்குறைய ஐம்பதாயிரம் புத்தக தலைப்புகளைக் கொண்ட நூலகமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்டு இன்றுவரை அந்நோக்கிலிருந்து விலகாமல் முன்னேறிச் செல்வதை என்னால் அவதானிக்க முடிகிறது.

வாசகர்களின் தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப தனது சேவைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல் கால ஓட்டத்திற்கு ஏற்ப தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கும் அமைவாக புதிய தகவல் வளங்களையும் சேவைகளையும் நவீன முறையில் வாசகர்களுக்கு வழங்க வேண்டியது நூலகங்களின் கடமையாகும். அதிலும் பொது நூலகங்கள் பலதரப்பட்ட வகையினைச் சேர்ந்த வாசகர்களினது தேவைகளை இனம்கண்டு அவரவர் தேவைக்கேற்ப தகவல்களை வழங்குவதோடு நவீன தொழில்நுட்பங்களை உள்வாங்கி எமது இளம் சமூகத்திற்கு ஏற்ப தகவல்களையும் சேவைகளையும் வழங்குவதும் இந்நாட்களில் அவசியமாகிறது.

இதை நன்கு அறிந்து கொண்ட பேத்தாழை பொதுநூலகம் இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னரே நூலகத்தை நவீனமயப்படுத்தும் நோக்குடன் நூலக தன்னியக்கமாக்கல் செயற்பாட்டை ஆரம்பித்து தற்போது இலத்திரனியல் நூலக செயற்பாடுகளை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல் கிழக்கிலங்கையில் முதன் முறையாக நூலகச் செயற்பாடுகளை தன்னியக்கமாக்கிய நூலகம் என்ற பெருமையை பெறுவதுடன் இலங்கையிலேயே முதன்முதலாக இணையவழி நூல்பட்டியலை இணையத்தில் வெளியீடு செய்து நூலகத்திற்கு வெளியே இருந்தும் நூலகத்தை அணுகக்கூடிய வாய்ப்பினை வாசர்களுக்கு வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிகழ்வுகள் வாசகர்களுக்கான பயிற்சிநெறிகள் கலந்துரையாடல்கள் போன்ற பல செயற்பாடுகளை இந்நூலகம் நிகழ்த்தி வருகிறது. நூலகத்திற்கான தேசியகீதம், நூலகத்துக்கான கொடி போன்ற புதிய விடயங்களை அறிமுகம் செய்து ஏனைய பொது நூலகங்களுக்கு ஒரு முன்னோடியாக இருப்பது இந்நூலகத்தின் சிறப்பம்சமாகும்.

மேலும் முகநூலின் ஊடாக இந்நூலகம் ஆற்றிவரும் சேவைகளும் சமூகத்திற்கு வழங்கி வரும் தகவல்களும் அளப்பெரியது. குறிப்பாக கோவிட் தொற்று காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் நூலகங்களை வாசகர்கள் அணுக முடியாத சந்தர்ப்பத்திலும் கூட நிகழ்நிலை மூலம் புதிய சேவைகளை இந்நூலகம் வழங்கி வருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். அதில் ”நிலா முற்றம்” என்ற இலக்கிய ஒன்றுகூடலை நிகழ்நிலையில் ஆரம்பித்து எமது பிரதேசத்தின் இலக்கியப் படைப்பாளிகளை ஊக்குவிப்பதும் அவர்களது ஆக்கங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதும் இந்நூலகத்தின் பாராட்டிற்குரிய சமூகம் சார்ந்த பணியாகும்.

அந்த வகையில் “வல்லகி (தளிர், வீணை, பூங்கொத்து)” என்ற படைப்பு இந்நூலகத்தின் இன்னோர் மைல்கல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பேத்தாழை பொதுநூலகத்தின் மனித வளமே அதன் பெரிய பலமாகும். நூலக ஊழியர்களின் அர்ப்பணிப்பும் ஈடுபாடுமின்றி மேற்கண்ட சாதனைகளை நூலகம் எட்ட முடியாது. ஆக்கப்பூர்வமாக செயல்படும் நூலகர் மற்றும் நூலக ஊழியர்கள் நூலகத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



**கலாநிதி. துரையப்பா பிரதீபன் PhD**
சிரேஸ்ட உதவி நூலகர்
ஊவா வெல்லஸப் பல்கலைக்கழகம்.

*பண்பட்ட சமுதாயத்தின் அடையாளமாகவும், பேத்தாழைக் கிராமத்தின் பொக்கிஷங்களில் ஒன்றாகவும் திகழ்ந்து கொண்டிருக்கும் கோறளைப்பற்று வாழைச்சேனை உள்ளூராட்சி மன்றத்தின் ஆளுகைக்குள் இயங்கி வருகின்ற பேத்தாழைப் பொது நூலகம் ஒரு தசாப்தம் கடந்து தனது சேவையினைச் செய்து வருகின்றது.*

*தசாப்தம் தாண்டிய தனது பயணத்தினை மேலும் உத்வேகத்துடன் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் நூலகத்தின் சேவைக்கான அங்கீகாரம் தேசிய ரீதியில் வியாபித்து விரிவடைந்துள்ளமையானது நூலகப் பணியாளர்களுக்கும் அதன் ஸ்தாபகரான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் கிடைத்த நற்சான்று என்பேன். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பழமையானதும் பிரசித்தி பெற்றதுமான பல்கலைக்கழகங்களுள் ஒன்றான களனிப் பல்கலைக்கழக நூலகத் தகவல்துறை சிரேஸ்ட பேராசிரியரான வை.ஏ.வீரசூரிய அவர்கள் இந்நூலகத்தின் கட்டமைப்பு, சேவைமுறைகள், திட்டமிடல்கள் பற்றி வியந்து பேசியதோடல்லாமல் முன் மாதிரி நூலகங்களுள் ஒன்றாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளமையானது நூலகத்திற்கும் பணியாளர்களுக்கும் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமென்பேன்.*

*இந்த நூலக உருவாக்கத்தில் ஆரம்பம் முதலே உடன் இருந்தவன் என்கின்ற வகையில் 10 ஆண்டுகள் நிறைவு விழாவுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*நான் தமிழ்நாடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகவியல் முதுமாணி கற்கை நெறியினை மேற்கொண்டு முடித்ததும், பல்கலைக்கழக நூலகங்கள், அண்ணா நூற்றாண்டு நூலகம் போன்றவற்றினை நேரடியாக தரிசித்திருந்த காரணத்தினாலும் இலங்கையில் பொது நூலகங்களில் நிலவுகின்ற பௌதீக மற்றும் நூல், ஆவண குறைபாடுகள், தொழினுட்ப வசதிகள் இன்மை போன்றவற்றினை நேரடியாக அறிய முடிந்தது. அவ்வேளையில் அப்போது கிழக்கு மாகாண முதலமைச்சராக பணிபுரிந்த சி.சந்திரகாந்தன் அவர்கள் பேத்தாழை பொது நூலக உருவாக்கத்தில் என்னுடைய ஆலோசனைகளையும் மேற்பார்வையினையும் வேண்டிய*

போது எவ்வித குறைபாடுகளும் இல்லாத பொதுநூலகம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தேன்.

என்னுடைய நூலக கல்வி அறிவு, அனுபவங்களைக் கொண்டு இந்த நூலக உருவாக்கத்திற்கு என்னுடைய பங்களிப்பினை வழங்கியுள்ளேன். அக்காலத்தில் முதலமைச்சரின் பிரதம செயலாளராக இருந்த கலாநிதி. அமலநாதன் அவர்கள் தான் முதலமைச்சரிடம் என்னை அறிமுகப் படுத்தினார் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

பணி நிமித்தம் தொலைதூரத்தில், இருந்தாலும் பேத்தாழை பொது நூலகத்தின் வளர்ச்சியினை அவதானித்த வண்ணமே உள்ளேன். குறிப்பாக நூலகப் பணியாளர்களான பிரகாஸ் மற்றும் ஸ்ரீதர் முதலானோரின் உத்வேகமிக்க செயற்பாடுகள், சேவை விஸ்தரிப்பு தந்திரோபாயங்கள், தொழினுட்பத்துடன் இணைந்த நூலக சேவை, எல்லாவற்றிற்கும் மேலாக அர்ப்பணிப்பு என்பன ஆச்சரியத்தை ஊட்டுவனவாய் உள்ளன. நூலகத்தின் வினைத்திறன்மிகு சேவைக்கு அடிப்படை மனித வளங்களே. அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த தூரநோக்குச் சிந்தனையூடாக நூலகத்திற்கான ஆளணியினையும் முதலமைச்சர் அவர்கள் புதிதாகவும் பயனுள்ளதாகவும் தேர்ந்து எடுத்துள்ளார் என்பதனை நூலகத்தின் செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

உலகில் வல்லரசு நாடுகளாகவும், பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்தும் காணப்படும் நாடுகள் அனைத்தும் நூலகத்துறைக்கு மிகுந்த முக்கியத்துவமும் கௌரவமும் வழங்குகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் நூலகத்துறை வளர்ச்சியில் மேலோங்கி உள்ளன. ஆனால், உலக நூலகவியல் அறிஞர்களுக்கு சமமான எஸ்.ஆர்.ரங்கநாதன் போன்ற அறிஞர்களைக் கொண்டு விளங்குகின்ற இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் பொது நூலகத்துறை வளர்ச்சியில் அடைந்துள்ள மாற்றங்கள் போதாததாகவே உள்ளது.

ஆனால், பேத்தாழை பொதுநூலகமானது ஏனைய நூலகங்களில் இருந்து மாறுபட்டு சமூகத்துக்கு மிகவும் பயனுள்ள விடயங்களை முன்னெடுத்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. ஹொஹா மென்பொருள் பயன்பாடு, இணையவழி நூலகத் தகவல் அணுகல் சேவை, Zoom, You Tube, Face book போன்ற இணைய தொழினுட்ப பயன்பாடுகள் போன்றவற்றில் மற்ற பொதுநூலகங்களுக்கு முன்னோடியாக விளங்குகின்றது.

பேத்தாழை பொது நூலகத்தின் பணிகள் மென்மேலும் வளர வேண்டும். இதன் வளர்ச்சியில் இன்று போல் என்றும் திரு.சி.சந்திரகாந்தன் அவர்களும், வாழைச்சேனை பிரதேச சபையும், நூலக உத்தியோகத்தர்களும் பங்களிப்புச் செய்ய வேண்டும் எனவும் கேட்டு, வல்லகி சிறப்பு மலர் வெளியீட்டுக்கும், விழாக் குழுவுக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி!



# வாழ்த்துச் செய்தி

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர், கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.

***"அறிவொளி வீசும் நூலகமே! அகவிருள் போக்கும் ஆதவனே"*** *என்கின்ற நூலக கீதத்தின் வரிகளுக்கொப்ப தன் பணிகளிலும் நாளுக்கு நாள் புதியன பூண்டு, வளர்ச்சிநடை போட்டுக் கொண்டிருக்கும் எமது பேத்தாழை பொதுநூலகம் நவீன தொழினுட்ப வசதிகளுடன் பிரம்மாண்டமான முறையில் திறந்து வைக்கப்பட்டு **2021-12-10**இல் அன்றுடன் **10** ஆண்டுகள் நிறைவடை வதனையிட்டும் அதன் நினைவாய்* ***'வல்லகி'*** *நானும் நாமத்துடன் சிறப்பு மலர் வெளியீடு ஒன்று நடைபெறுவதனையிட்டும் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு வாசகியாய் நூலகத்துடன் ஆரம்பித்த எனது உறவு, வாசகர் வட்ட உறுப்பினராய், நூலக ஆலோசனைக்குழு உறுப்பினராய்த் தொடர்ந்து இன்று சபையின் தவிசாளர் என்கின்ற நிலையிலும் நூலகத்துடன் மிக நெருங்கிய தொடர்பில் இருந்தாலும், இந்நூலகத்தினைப் பொறுத்தவரை நூலகத்தின் வாசகி என்கின்ற பெருமிதம் அளவில்லாதது. அதன் ஒவ்வொரு பணிகளிலும் தொடர்ந்து பயணித்து வருகின்றேன்.*

***2011**ஆம் வருடம் இதே நாளில்! கிழக்கிலங்கையில் என்றுமில்லாத வாறு ஒரு அறிவுக் கொண்டாட்டம் நிகழ்ந்தது பேத்தாழையில்! எமது கட்சியின் தலைவரும் அப்போது கிழக்கு மாகாணத்தின் முதல் முதலமைச்சராய் பதவி வகித்த கௌரவ.சிவ.சந்திரகாந்தன் அவர்களது கனவு வடிவம் பெற்று மக்கள் பாவனைக்காய் வழங்கிய ஒப்பற்ற தினம் அது. மாகாணசபையின் ஆளுநர் அமைச்சர் பெருமக்களுடன் பிரதேசத்தின் பொதுமக்களும் ஏராளமாகத் திரண்டு இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.*

*கிழக்கு மண்ணின் மக்கள் மீதும், அவர்கள் வளர்ச்சியின் மீதும் நீங்காப்பற்றுக் கொண்ட எமது தலைவர் மக்களின் அறிவுப் புரட்சிக்கான வித்தினை தன் மண்ணிலேயே ஆரம்பித்து வைத்த தருணம் அது. இன்று அது நல்விருட்சமாய் வளர்ந்து பல்லாயிரம் மக்களின் அறிவுப்பசி தீர்க்கும் அருங்கனியாய் சுவை தந்து கொண்டிருக்கின்றது.*

*இன்று பத்தாண்டு நிறைவு கொண்டாடும் தருணத்தில் எம் தலைவரின் ஐம்பதாயிரம் புத்தகத் தலைப்புக்கள் என்கின்ற இலக்கு எட்டப்பட்டிருக்க வேண்டும் ஆனாலும், இடையில் எம் தலைவர் சிறைப்படுத்தப்பட்டிருந்த காலத்தினால் இது சற்றுத் தாமதமானாலும் இந்த இடைவேளையிலும் ஹொஹா மென்பொருள், பார்கோட்*

பாவனை, இணைய வழிச்சேவை என இலத்திரனியல் வழியே தன்னுடைய தொழினுட்ப வசதிகளை விருத்தி செய்து கொண்டு வளர்ச்சியடைந்தது.

எமது கட்சியின் கௌரவ பிரதித் தலைவரும், கோறளைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான திரு.நா.திரவியம் அவர்களும் தன்னுடைய மாகாணசபை நிதி மூலம் எமது பொதுநூலகத்திற்கு நூல்களை பெற்றுக் கொடுத்துள்ளதோடு, நாமும் எமது சபையின் மூலம் ஒவ்வொரு வருடமும் பொது நூலகத்திற்கான நூல்களை கொள்வனவு செய்து வழங்குவதோடு, நூலகத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு சபையின் மூலம் முழுப் பங்களிப்பினையும் வழங்கி வருகின்றோம். நாடு முழுவதிலும் இருந்து பல நலன்விரும்பி களும் எமது நூலகத்துடன் இணைந்து நூல்களை அன்பளிப்புச் செய்து வருகின்றனர்.

அத்தோடு, பேத்தாழை பொது நூலகத்தினால் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட **'நிலாமுற்றம்'** எனும் இலக்கியக் கருத்தாடல் நிகழ்வானது வேறெந்தப் பொது நூலகங்களிலும் நிகழாததொரு அற்புத நிகழ்வு. முதலாவது 'நிலா முற்ற' நிகழ்வின் பின் கொரோனா அபாயச் சூழல் காரணமாக நூலகங்கள் மூடப்பட்ட போதும், தொழினுட்பத்தின் வழியே இணைய நேரலையில் Zoom மூலம் தொடர்ச்சியாக மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தற்கால தகவல் தொழினுட்ப யுகத்திற்கேற்றவாறு இணையத்தளம், முகநூல், யுடியூப் போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் வழியாகவும் தன்னுடைய சேவையினையும், நூலகப் பணியினையும் வழங்கி வருகின்ற எமது பேத்தாழை பொதுநூலகத்தின் மூலம் பிரதேச படைப்பாளிகளின் நூல்கள் மின்னுருவாக்கப்பட்டு படைப்பாளி களின் சம்மதத்துடன், இலங்கைத்தமிழ் நூல்களை ஆவணப் படுத்துகின்ற www.noolaham.org எனும் இணையத்தளத்தில் பதிவேற்றுகின்ற பணியும் மேற்கொள்ளப்படுகின்றது.

எமது முன்னோர், ஏட்டுச் சுவடிகளில் தொடங்கி வைத்த கலை, இலக்கிய அறிவுப் பரிமாற்ற பொக்கிசங்களை இன்றைய யுகத்திற்கேற்றவாறு இலத்திரனியல் ஊடகங்கள் மூலமும் பெற்றுக் கொள்ளும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற பேத்தாழை பொதுநூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'வல்லகி' சிறப்பு மலரினை வெளியிடுவதற்காக உழைத்த நூலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், மற்றும் இந்த சிறப்பு மலர் வெளியீட்டிற்கு நிதி உதவி வழங்கிச் சிறப்பித்துள்ள வாழைச்சேனைப் பிரதேசத்தின் மூத்த பெண் படைப்பாளியும், கல்வியாளர் மற்றும் சமூக சேவகியுமாகத் திகழ்ந்த **அமரர். திருமதி. சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை** அவர்களின் குடும்பத்தினருக்கும் நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



**திரு.தர்மலிங்கம் யசோதரன்**

(கௌரவ உபதவிசாளர்,
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை)

*எமது கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்ற பேத்தாழை பொதுநூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவடைந்துள்ள செய்தியும், அதனை நினைவுபடுத்துமுகமாக நூலக உத்தியோகத்தர்களாலும், வாசகர் வட்டம், ஆலோசனைக் குழுவினால் சிறப்புமிகு விழா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளமையினை இட்டு விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கு என்னுடைய உளமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*சிறந்த தொழினுட்ப வசதிகளைக் கொண்டு நமது பிராந்தியத்திலே பல முன்னோடிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும், பேத்தாழை பொது நூலகத்தின் கட்டமைப்பு, நூற்சேகரிப்புக்களைப் பார்த்து வியந்திருக்கின்றேன். எங்களது சிறு பராயத்தில் எமக்குக் கிடைத்திராத சந்தர்ப்பம் தற்பொழுதுள்ள மாணவர்களுக்குக் கிடைத்துள்ளது. எனவே, மாணவர்களும் பொதுமக்களும் இந்த நூலகத்தினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*“அறிவு ஒன்றே அழிவில்லாதது” நமது சமூகத்தின் ஆணிவேராக அதுவே இருந்து வருகின்றது. அதற்காகவே, எமது சபையின் மூலமும் நூலகம் தொடர்பான அபிவிருத்தி விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றோம். நமது சபையின் கீழ் தற்பொழுது இயங்கி வருகின்ற பொது நூலகங்களை அபிவிருத்தி செய்வதோடு, நமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 32 கிராமங்களிலும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு சிறுசிறு நூலகங்களும் வாசிகசாலைகளும் புதிதாக உருவாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. சமகாலத்தில் நமது பொது நூலகங்கள் வருடந்தோறும், தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு, நடமாடும் நூலக சேவைகளை நூலகங்கள் இல்லாத கிராமப் பகுதிகளில் ஒருநாள் நூலக சேவையினை வழங்கி வருகின்றனர்.*

*பேத்தாழை பொது நூலகம் போன்ற பெரிய நூலகங்கள் இதுபோன்ற சேவைகளை தொடர்ச்சியாக வழங்க வேண்டும். நூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் தேசிய வாசிப்பு மாத விழாவும் சிறப்புறவும், நூல் வெளியீடு தொடர்ந்து நடைபெறவேண்டும் எனவும் வாழ்த்துவதோடு உங்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*



# வாழ்த்துச் செய்தி

**திரு.சண்முகநாதன் நவநீதன்**
செயலாளர், கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.

**கோ**றளைப்பற்று பிரதேச சபையின் செயலாளராக இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில் பொறுப்பேற்றுக் கொண்ட நாள் முதல் தொடர்ச்சியாக கொரோனா சூழல் நிலவி வருகின்றதன் காரணத்தினாலும், நாடு அடிக்கடி முடக்கப்பட்டதன் காரணமாகவும் சபையின் பொது நூலகங்களை நேரடியாகப் பார்வையிடவோ, நூலக உத்தியோகத்தர்களை நேரடியாக சந்தித்துக் கலந்துரையாடவோ சந்தர்ப்பம் கிட்டாமல் இருந்தது. மிக அண்மையில் தான் தேசிய வாசிப்பு மாத ஆரம்ப கலந்துரையாடலில் நூலக உத்தியோகத்தர்களை நேரடியாக சந்திக்க முடிந்தது. ஆனாலும், நான் சபைக்கு வருமுன்னரே பேத்தாழை பொது நூலகம் குறித்தும், அதன் பணிகள் பற்றியும் அறிந்திருக்கிறேன். ஏனெனில், சமகால தொழினுட்ப வசதிகளைப் பயன்படுத்தி வாசகர்களும் பொதுமக்களும் இலகுவாக நூலகத் தேவைகளை அறிந்து கொள்ளவும், தமது நூல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமாக பேத்தாழை பொது நூலகமானது இணையத்தள வசதிகள் உட்பட சமூக வலைத்தளங்கள் மூலமும் தனது சேவையினை விஸ்தரித்திருந்ததே அதன் காரணம்.

இவ்வாறு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பலரும் வியந்து பாராட்டுகின்ற பேத்தாழை பொது நூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தப் படுகின்ற நிறைவு மற்றும் 'வல்லகி' எனும் சிறப்பு மலர் வெளியிடும் தருணத்தில் நானும் இதில் பங்குகொள்வதனையிட்டு மிகவும் மகிழ்கின்றேன். நமது சபையும் அதன் செயற்பாடுகளும் பொதுமக்களுக்கு எவ்வகையிலாயினும் பயன்பட வேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாய் உள்ளேன். அவ்வகையில் பேத்தாழை பொது நூலகமும் அதன் சேவைகளும் பாராட்டுக்குரியன.

தற்பொழுது நூலகத்தின் பொறுப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.மரகதம் பிரகாஸ் அவர்கள் நூலகத்தின் மீது மிகுந்த பற்றும், பல்வேறு முன்னோடியான செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்ற திறமையும் கொண்டவர். அவரோடு இணைந்து நூலகத்தில் பணியாற்றுகின்ற ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் இவ்விடத்தில் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு கடந்த ஒரு வருட காலத்திற்கு முன்னரே இவ்விதழ் வெளியீட்டுக்காய் உழைத்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், இந்நூல் வெளியீட்டுக்கு நிதியுதவி வழங்கிய நலன்விரும்பிகளுக்கும், விழாவினை சிறப்புற ஏற்பாடு செய்துள்ள நூலகத்தின் 'விபுலானந்தா வாசகர் வட்டத்தினருக்கும், நூலக ஆலோசனைக் குழுவினருக்கும்' வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இப்பணி தொடர்ந்தும் நடைபெற அனைவரும் என்றும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

# வாழ்த்துச் செய்தி




**ஜனாப். அ.ஹாரூன்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
மட்டக்களப்பு.


**கோ**றளைப்பற்று வாழைச்சேனைப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பேத்தாழை பொது நூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி இவ்வாண்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் வெளியிடப்படும் 'வல்லகி' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகையானது பிரதேசத்தில் வளர்ந்து வரும் எழுத்தாளர்கள், மாணவர்கள் மற்றும் வாசகர்களின் ஆக்கங்களைத் தாங்கி தனது கன்னி வெளியீட்டை வெளியிடுவது இந்நூலக வரலாற்றின் ஒரு மைல் கல்லாகும். இலத்திரனியல் சாதனங்களின் ஊடுருவலினால் வாசிப்புத் திறனும், எழுத்தாற்றலும் குறைந்து செல்லும் காலப்பகுதியில் தடங்கல்களையும் சவால்களையும் தாண்டி பிரதேச எழுத்தாளர்களையும் வாசகர்களையும் ஊக்குவிக்கும் வகையில் பயனள்ள பல படைப்புக்களைத் தன்னகத்தே சுமந்து நிற்கும் வல்லகி வெளியீடானது அதன் வல்லமையை எடுத்துக் காட்டுகின்றது.

நூலகத்தின் ஆளணித் தேவை மேலோங்கிக் காணப்பட்டாலும் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி கொவிட் தொற்று பீதிக்கும் மத்தியிலும் வாசகர்களின் வாசிப்புத் தாகத்தை நிறைவேற்றும் வகையில் வெளிவரும் 'வல்லகி'யின் மலர்வு சோர்வுற்றிருக்கும் வாசகர்களுக்கு உற்சாகத்தை வழங்கி வாசிப்பின் மோகத்தை மேலும் ஒருபடி உயர்த்தும் என நம்புகிறேன்.

இப்பணி தொடர வேண்டும் என ஊக்கப்படுத்துவதோடு, இம்முயற்சியில் தமது அர்ப்பணிப்புடனான பங்களிப்பினை நல்கி சிறந்த முறையில் உள்ளடக்கங்களை உருவாக்கிக் கொள்ளவும் வடிவமைப்பை செம்மைப்படுத்த முன்னின்று உழைத்த சகலரையும் பாராட்டுவதோடு இச்சஞ்சிகை பயன்படு தன்மை பரந்து செயற்பட ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

# நூலகப் பொறுப்பாளரின் வெளியீட்டுச் செய்தி...



## திரு. மரகதம் பிரகாஷ்

நூலகப் பொறுப்பாளர்,
பொது நூலகம்,
பேத்தாழை.

"**வா**ழ்வின் பெருமிதம் மிக்க தருணங்களில் ஒன்றுடன் உங்களுடன் இணைந்திருப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. நான் பிறந்த மண்ணில் இத்தகையதொரு பெருமை மிகு நூலகத்தினையும், அதில் பணியாற்றுகின்ற வாய்ப்பினையும் பெற்றுத் தந்த கிழக்கின் முதல் முதலமைச்சரும், பேத்தாழை பொது நூலகத்தின் நிறுவுனருமான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர், திரு.சி.சந்திரகாந்தன் அவர்களுக்கு இவ்விடத்தில் ஊர்மக்கள் சார்பிலும், பேத்தாழை பொது நூலகத்தின் சார்பிலும் நன்றியினைத் தெரிவிக்க கடமைப் பட்டுள்ளேன்.

பத்தாண்டு கடந்துள்ள எமது நூலகத்தின் சாதனைப் பயணத்தில் பல்வேறு தருணங்களிலும் பலர் எமக்குப் பக்க பலமாய் இருந்து வந்துள்ளனர். இதுவரை நாம் ஈட்டியுள்ள வெற்றிகளுக்கு எல்லாம் காரணமாய் அவர்களே இருந்து வந்துள்ளனர். நாம் இதில் சிறு கருவிகளாய் மட்டுமே செயற்பட்டு வந்துள்ளோம். அவ்வகையில் இன்று பத்தாண்டு நிறைவின் நினைவாய் 'வல்லகி' எனும் சிறப்பு மலர் வெளியீட்டினை நடத்துவதற்கும் குறுகிய காலத்தில் இந்த விழாவினை சிறப்புற நடத்துவதற்கும் பல்வேறு வகைகளிலும் எமக்குப் பலர் மனமுவந்து உதவிகள் வழங்கியுள்ளனர்.

நூலகக் கட்டிட உருவாக்கத்தின் போதிருந்தே பல வழிகளிலும் உதவி வருகின்ற நல்லுள்ளங்களை இந்த இடத்தில் நினைவுகூர வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளதென நினைக்கின்றேன். எமது மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களாகப் பணியாற்றிய திருமதி.என்.சத்தியானந்தி, திரு.கா.சித்திரவேல், தற்பொழுது பணியில் உள்ள திரு.சி.பிரகாஸ் அவர்கள், ஊவாப் பல்கலைக்கழகத்தில் தற்பொழுது சிரேஸ்ட உதவி நூலகராகப் பணிபுரியும், கலாநிதி. து.பிரதீபன் அவர்கள் மற்றும், நூலகத்தினை கணினி மயப்படுத்தி, ஹொஹா மென்பொருளினை நிறுவி, எமது இலத்திரனியல் தொழினுட்ப சேவைகளுக்கு பக்கபலமாய் திகழும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட உதவி நூலகரும், இலங்கை நூலக சங்கத்தின் உபதலைவருமான திரு.எம்.என்.ரவிக்குமார் அவர்கள், நூலகம் ஆரம்பித்த காலத்தில் கணினிப் பிரிவினை சிறப்பாக வழிநடத்தியதோடு, அனைத்து தொழினுட்பட விடயங்களிலும் ஈடுபட்டு வந்த அன்பு நண்பர் கோபாலராஜன் லவன், நூலகத்தில் வார்கோட் முறையினை நடைமுறைப்படுத்த உதவியதோடு பல்வேறு தருணங்களிலும்

எமக்கு தயங்காது உதவி வருகின்ற நண்பர் திரு.க.யுவராஜன் அவர்கள், மற்றும் எமது பொது நூலகத்திற்கு அழகிய மீன்தொட்டி ஒன்றினைப் பெற்றுத் தந்த பெயர் குறிப்பிடுவதை விரும்பாத நண்பர், எமது பொது நூலகத்திற்கு குடிநீர் வசதி செய்து தந்த பேத்தாழை மாவடி மாரியம்மன் ஆலய பரிபாலன சபையினர், தன்னுடைய மாகாணசபை பதவிக் காலத்தில் எமக்கு நூல்களைப் பெற்று வழங்கிய முன்னாள் மாகாணசபை உறுப்பினர் திரு.நா.திரவியம் அவர்கள், எம்முடன் பணிபுரிந்த காலத்தில் நூலகத்தின் சரஸ்வதி சிலைக்கு வர்ணம் பூசி புதுப்பித்து தந்த எமது நூலகர் அமரர். வே.கேதாதரன் அவர்கள், எமது பொது நூலகத்தின் முதலாவது நூலகராக் பணியாற்றிய திரு.தி.சரவணபவான் அவர்கள், அவரோடு இணைந்து ஆரம்ப கால நூல்பகுப்பாக்க பணிகளில் ஈடுபட்ட மட்டக்களப்பு பொதுநூலகத்தின் முன்னாள் நூலகர் திரு.வித்தியாசாகரன் அவர்கள், எமது சபையின் தவிசாளர்களான திரு.தா.உதயஜீவதாஸ் மற்றும் எமது வாசகர்வட்ட உறுப்பினராகவும் இருந்து தற்பொழுது தவிசாளராகவும் பணிபுரிகின்ற எமக்கு எப்போதும் உறுதுணையாக விளங்குகின்ற திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்கள்,

சபையின் செயலாளர்களாகப் பணியாற்றிய காலங்களில் பல்வேறு பணித்திட்டங்களுக்கு ஆதரவு வழங்கிய முன்னாள் செயலாளர்களான திரு.இ.வடிவேல், ஜனாப்.எஸ்.எம்.சிஹாப்தீன், திரு.அ.தினேஸ்குமார், மற்றும் சபையினை விட்டு வேறு பணியிடத்திற்குச் சென்ற போதும் எமது ஒவ்வொரு பணிகளையும் முகநூல் வழியே அறிந்து, உடனுக்குடன் பாராட்டுகின்ற திருமதி. பத்மலோஜினி லிங்கேஸ்வரன் மற்றும் தற்பொழுது செயலாளராக விளங்குகின்ற திரு.ச.நவநீதன் இவர்களோடு,

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திரு.V.தேவநேசன், திரு.S.குகநேசன் மற்றும் ஜனாப் அ.ஹாரூன், சபையின் நிதி உதவியாளராகப் பணிபுரிவதோடு எமக்கு எந்நேரத்திலும் உடனிருந்து உதவுகின்ற திரு.சி.ஜெயரூபன் அவர்கள், வாசகர்களாகவும் வாசகர் வட்ட உறுப்பினர்களாகவும்,

சிறந்த ஆலோசகர்களாகவும் விளங்கிய அமரர். மு.தவராஜா, தற்பொழுதும் எம்முடன் இணைந்திருக்கின்ற எழுத்தாளர்களான தாழை.செல்வநாயகம், , ஆ.மு.சி.வேலழகன், எச்.மெத்தியேஸ், ஏ.பி.எம்.இத்ரிஸ், ஜிஃப்ரி ஹாசன், எ.த.ஜெயரஞ்சித், திருமதி.விஜிதா முருகவேள், செ.நல்லதம்பி, கவிஞர்.மேமன்கவி, மற்றும் விரிவுரையாளர் திரு.ஜீ.பால்ராஜ், திரு.த.கி.ஷர்மிதன், திரு.சா.முகிலன், செல்வி. தமிழூராள் அனுஸ்திக்கா இவர்களோடு,

எமது பிரதேசத்தில் உள்ள பாடசாலை மற்றும் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் குறிப்பாக கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கல்குடா பொலிஸ், எமக்கு கடந்த காலங்களில் உதவிகள் வழங்கியுள்ள பாசிக்குடா ஹோட்டல் உரிமையாளர்கள், வாழைச்சேனையிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், எமது ஏனைய பொது நூலகங்களில்

பணிபுரிகின்ற நூலக உத்தியோகத்தர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள், நூலகத்தினுடைய ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இன்றுவரை எம்முடன் இருந்து பொது நூலகத்தின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

இவர்கள் மட்டும் அல்லாது இன்னும் பலர் உள்ளனர். எமது பொது நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்தவர்கள், எமது 'நிலா முற்ற' இணைய வழி நிகழ்வில் எம்மோடு இணைந்து எம்மை ஊக்கப்படுத்து பவர்கள். முகநூல் வழியாக தொடர்பில் உள்ள நண்பர்கள். எமது 'தடை ஏது' குறும்பட குழுவினர், நூலக கொடி, நூலக கீதம் உருவாக்கத்தில் உதவிய கலைஞர்கள், கவிஞர்கள். எமது விழாக்களின் போது நிதியுதவி வழங்கி உதவுகின்றவர்கள். மண்டப அலங்கரிப்பு பணிகளுக்கு உதவி செய்கின்றவர்கள்.

தற்பொழுது 'வல்லகி' சிறப்பு மலர் வெளியீட்டுக்கு நிதி உதவி வழங்கியுள்ள வாழைச்சேனை, புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த முன்னாள் அதிபரும், சிறந்த சமூக சேவகியுமாக விளங்கிய அமரர்.திருமதி. சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை அவர்களது குடும்பத்தினர், இவ்விழா சிறப்பாக நடக்க நிதி உதவிகளை வழங்கியுள்ள திரு.பஞ்சலிங்கம் விமல்ராஜ், திரு.ர.லலித், லங்கா ஜீவலரி உரிமையாளர் அவர்கள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். நினைவில் உள்ளவரை பெயர்களைக் குறிப்பிட்டுள்ளேன். யாரையேனும் குறிப்பிட மறந்திருந்திருந்தால் தயைகூர்ந்து மன்னித்தருள வேண்டும். இவர்கள் அனைவரும் நமது சமூகத்தின் மீதும் பொதுநலன், குழந்தைகளின் கல்வி எதிர்காலம் மீதும் அக்கறை கொண்டவர்கள்.

ஒரு சமூக நிறுவனம் சமூக மயப்படுத்தப்பட்ட தன்னுடைய பணிகளை தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்கு பொருளாதார ரீதியாகவும், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை, உடல் உழைப்பு, தொழினுட்ப பயன்பாடு எனப் பல்வேறு வட்ட வழிகளில் உதவிகள் தேவைப்படுகின்றது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து சமூகத்திற்கு பயன்தரும் பணியினைச் செய்கின்றது.

இன்று இந்த விழாவினை நாம் ஏற்பாடு செய்து நடத்தினாலும், இதன் பின்னால் பலர் உள்ளனர். குறிப்பாக 'வல்லகி' எனும் இந்த சிறப்பு மலர் வெளியீடு. முதலில் இதற்கான நிதி உதவியினைத் தேடிப் பெற்றுத் தந்தவர், எனக்கு முன்னர் இந்த நூலகத்தின் பொறுப்பாளராகப் பணிபுரிந்த திருமதி. தாரணி தங்கத்துரை அவர்கள், அவரோடு உதவியாக இந்த நூலினை உருவாக்குவதில் உறுதுணையாக செயற்பட்டவர்கள் திருமதி.ஈ.புனிதா, திருமதி.த.புஸ்பா, திருமதி.க.கங்கா, திரு.சி.குகதீசன், திரு.எஸ்.மோகனராசா, திருமதி.அ.சசிகலா, திருமதி.யு.துவாரதி, திருமதி.கௌ.பரமாநந்தினி போன்ற நூலக உத்தியோகத்தர்களாவர். அத்தோடு இந்த நூலுக்கான பெயர் தேர்வில் வாசகர் வட்டம் சார்பில் முன்னின்று உதவிய திருமதி. விஜிதா முருகவேள் மற்றும் இந்த இதழினை முழுமைப்படுத்தி, இறுதித் நேரம் வரை

இதனை உருவாக்கி, அச்சிட்டுத் தந்த எஸ்.ஏ.ஸ்ரீதர் என பலரும் இந்தப் பணிக்குப் பின்னால் செயற்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் நூலகத்தின் சார்பிலும், வாசகர் வட்டம், நூலக ஆலோசனைக் குழு சார்பிலும் எமது மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு இந்த நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கியுள்ள அதிதிகள், ஆக்கங்களை நல்கியுள்ள படைப்பாளிகள் எனப் பலரும் போற்றுதலுக்கு உரியவர்கள்.

'வல்லகி' எனும் நாமம் கொண்ட இந்தச் சிறப்பு மலரில் உள்ளூர் முதல் வெளிநாட்டுப் படைப்பாளிகள் வரை தமது ஆக்கங்களைப் படைத்துள்ளனர். கவிதை, கட்டுரை, சிறுகதை, நேர்காணல், ஆய்வு, வரலாறு எனப் பல பகுதிகள் இதில் இடம்பிடித்து உள்ளன.

நமது சமூகத்தின் நேர்நிலை நோக்காக ஒவ்வொரு படைப்பாளிகளும் தத்தம் எண்ணங்களை தமது கருத்துக்களை பிரதிபலித்துள்ளனர். கவிதைகளும், சிறுகதைகளும் கூறுகின்ற செய்திகளும், நேர்காணலில் படைப்பாளிகள் பகிர்கின்ற விடயங்களும் அவர்தம் படைப்புச் சுதந்திரமாகவே காண்கிறோம். இதே போன்று அடுத்தடுத்த எமது 'வல்லகி' வெளியீடுகளிலும் மூத்த படைப்பாளிகள், மாணவப் படைப்பாளிகள் எனப் பலருக்கும் களம் அமைத்துக் கொடுப்பதோடு, எமது நூலகத்தின் பிரதான பணியாகிய ஆவணப்படுத்துதலையும் தொடரவுள்ளோம்.

இதழ் குறித்த ஆக்கபூர்வமான கருத்துக்களை எமது மின்னஞ்சல் வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் நீங்கள் தெரிவிக்கலாம். இதழ் வெளியீட்டுப் பணி ஆரம்பிக்கப்பட்டு நீண்ட காலம் ஆனாலும், அச்சாக்கப் பணிகள் குறுகிய காலப் பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் நூலில் ஏற்பட்டுள்ள சிறுசிறு பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் எனவும் கேட்டு உங்கள் அனைவரின் கரங்களிலும் எமது முதல் வெளியீட்டினை நன்றியுடன் சமர்ப்பிக்கின்றோம்.



# இதழாசிரியர் இதயத்திலிருந்து....


**திருமதி. தாரணி தங்கத்துரை**
நூலக சேவகர்,
பொதுசன நூலகம்,
வாழைச்சேனை.


வருடா வருடம் தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வினை சிறப்பாக பேத்தாழை பொது நூலகத்தில் நடத்தி வருகின்றோம். இந்த வருடமும் இந்நிகழ்வுடன் சேர்த்து நூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவினையும் கொண்டாடுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. இவ்விரு நிகழ்வுகளையும் சிறப்பித்த எமது வாசகர்களின் ஆக்கங்களை கொண்டு வெளிவரும் 'வல்லகி' சஞ்சிகையினை உங்கள் கரங்களில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இச்சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்கள் உங்களின் பாராட்டைப் பெறுவதுடன் மென்மேலும் எமது வாசகர்களும், படைப்பாளிகளும் தொடர்ச்சியாக எழுதுவதற்கும் ஊக்கப்படுத்தும் என நம்புகின்றேன். இதில் உள்ள பிழைகள், குறைகள் யாவற்றையும் மன்னிக்கும்படி தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம். 'வல்லகி' சஞ்சிகையினை இனிதே வெளியிட எமக்கு நிதி உதவி வழங்கி உதவி புரிந்ததோடு, தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் எமது நூலகத்தின் இதழ் வெளியீட்டிற்கு உதவுவதாய் எமக்கு ஊக்கம் அளித்து வருகின்ற வாழைச்சேனை புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த காலஞ்சென்ற அதிபர். திருமதி. சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை அவர்களின் நினைவாக அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற அவருடைய பிள்ளைகளுக்கு இவ்விடத்தில் மிகுந்த நன்றியினை நூலகத்தின் சார்பாகவும் வாசகர்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு, இவ்விழா சிறக்க எமக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஏனைய பொது நூலகங்களில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள், குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் இதழினை அச்சிட்டுத் தந்த அச்சகத்தார் அனைவருக்கும் விசேடமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, இனிவரும் ஆண்டுகளிலும் 'வல்லகி' சஞ்சிகையானது தடையின்றி வெளிவருவதற்கு பேத்தாழை பொது நூலகத்தில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நமது பிரதேசத்தின் படைப்பாளிகளுக்கும் படைப்புக்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து நமது பிரதேசத்தின் கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செலுத்த வேண்டும் எனக் கேட்டு 'வல்லகி'யின் முதல் இதழை உங்கள் முன் படைக்கின்றோம்.

# மலர்க் குழு

**நூலகப் பொறுப்பாளர்:**

திரு. மரகதம் பிரகாஸ்

**இதழாசிரியர்கள்:**

திருமதி. தாரணி தங்கத்துரை
திரு. மரகதம் பிரகாஸ்
திரு. சிவஞானசெல்வரெட்ணம் குகதீசன்

**இதழ் இணையாசிரியர்கள்:**

திரு.எஸ்.மோகனராசா
திருமதி. புனிதா ஈவெரா
திருமதி.க.கங்கா
திருமதி. புஸ்பா தயாளன்
திருமதி. சசிகலா அருள்ராஜா
திருமதி. துவாரதி யுசந்தன்
திருமதி. பரமானந்தினி கௌரிகாந்த்

**இதழ் ஆலோசகர்கள்:**

ஜனாப்.அப்துல்லா ஹாரூன்
திருமதி. விஜிதா முருகவேள்
திரு.எஸ்.ஜெயரூபன்
திரு.எஸ்.ஏ.ஸ்ரீதர்

**விழாக் குழு**

விபுலானந்தா வாசகர் வட்டத்தினர்
பொது நூலக ஆலோசனைக் குழு
பொது நூலக உத்தியோகத்தர்கள் (கோ.ப.பி. சபை)

**மலர்ப் பதிப்பு நிதி உதவி**

அமரர். திருமதி. சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை குடும்பத்தினர்

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தலைப்பு | i |
| 2. | நூல் பதிப்புத் தரவுகள் | ii |
| 3. | நன்றி நவில்கின்றோம் | iii |
| 4. | தமிழ்மொழி வாழ்த்து | iv |
| 5. | நூலக கீதம் | v |
| 6. | வாழ்த்துச் செய்திகள் | vi |
| 7. | நூலகப் பொறுப்பாளரின் வெளியீட்டுச் செய்தி | xxvii |
| 8. | இதழாசிரியர் இதயத்திலிருந்து | xxxi |
| 9. | மலர்க்குழு | xxxii |
| 10. | பேத்தாழை பொதுநூலகத்தின் வரலாறும் வளர்ச்சியும் | 1 |
| 11. | வாழி பேத்தாழை பொதுநூலகம் | 12 |
| 12. | அமரர். சிதம்பர பரஞ்சோதி அவர்களின் வாழ்வும் பணியும் | 13 |
| 13. | புத்தகம் பொன்மொழிகள் | 15 |
| 14. | அது ஒரு பொற்காலம் | 16 |
| 15. | நம் அரசியல் தலைமைக்காய் | 19 |
| 16. | நேர்காணல் | 21 |
| 17. | மனிதம் என்ற மகத்துவம் | 28 |
| 18. | நூலக வாசகர்களை இளம் விமர்சகர்களாக அடையாள… | 29 |
| 19. | தமிழ்த் தாயின் தவி(ர்)ப்பு | 31 |
| 20. | கொலசிப்பும் சித்திராவும் | 34 |
| 21. | கொக்கரிக்கும் கொரோனாவை கூண்டோடொழிக்க… | 38 |
| 22. | பௌர்ணமி தோறும் இலக்கிய வாசம் வீசும் நிலாமுற்றம் | 39 |
| 23. | உயிர்த்த ஞாயிறு அஸ்த்தமித்த போது | 45 |
| 24. | இரண்டு கரைகள் | 46 |
| 25. | குடியால் என் குடி | 53 |
| 26. | நூலகமே அவள் உலகம் | 54 |
| 27. | சமூக வலை தளங்களுக்குள் மா(வா)ழும் இன்றைய சமூகம் | 57 |
| 28. | காகிதையே | 62 |
| 29. | கற்றல் செயற்பாடுகளில் மொழித்திறனின் தாக்கம் | 63 |
| 30. | வாசிப்பை நேசிப்போம் | 66 |
| 31. | மட்டக்களப்பில் சஞ்சிகை வளர்ச்சி | 68 |
| 32. | கல்வியின் பண்புத்தர விருத்தியில் ஆசிரியர் வாண்மை விருத்தி | 77 |
| 33. | நூலகம் தந்த கோமகன் | 80 |

நூலக வரலாறு




# பேத்தாழை பொதுநூலகத்தின் வரலாறும் வளர்ச்சியும்

**மலர்க்குழு**

*ஜனநாயக ஆட்சிமுறை நிலவுகின்ற நாடுகளில் அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய மக்கள் நலன்புரிச் சேவைகள் ஏராளம் உண்டு. திண்மக் கழிவகற்றல், வீதிப்புனரமைப்பும் பராமரிப்பும், வீதி மின்விளக்குகள் பொருத்தி பராமரித்தல், பொதுச்சுகாதார சேவைகளை நடைமுறைப் படுத்தல் மற்றும் பூங்காக்கள், நூலகங்கள் போன்றவற்றை அமைத்து பராமரித்தல் என்பன அவற்றுள் சிலவாகும்.*

*இச்சேவைகளை மத்திய அரசாங்கம் நேரடியாக செய்வது இலகுவானதல்ல என்பதனால், இச்சேவைகளை நிறைவேற்றக் கூடிய நிருவாக ஆட்சி அலகு ஒன்று உருவாக்கப்பட்டது. மக்களின் நலனை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களையும் கொள்கைகளையும் மக்களின் பங்களிப்பினைப் பெற்றுச் செயற்படுத்து வதற்காக நாட்டில் ஏற்பட்டுள்ள அமைப்புக்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் எனப்பட்டன.*

*தற்போது இலங்கையில் செயற்படும் முக்கிய உள்ளூராட்சி நிறுவனங்களான மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் எனும் மூன்று அமைப்புக்கள் உள்ளன. ஆரம்பத்தில் மத்திய அரசாங்கத்திடம் இருந்த உள்ளூராட்சி மன்றங்கள் மீதான அதிகாரம் 1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட 13ஆவது அரசியல் அமைப்புச் சீர்திருத்தச் சட்டம் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*அவ்வகையில் இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணசபைகளின் கீழ் தற்பொழுது 340 உள்ளூராட்சி மன்றங்கள் இயங்குகின்றன. அவற்றுள் ஒன்று கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் கோறளைப்பற்று பிரதேச சபையாகும்.*

கோறளைப்பற்று, கோறளைப்பற்று தெற்கு, கோறளைப்பற்று மத்தி எனும் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளையும், ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட சனத்தொகையினை கொண்ட, பாரியதொரு நிலப்பரப்பினைக் கொண்டதாகவும் கோறளைப்பற்று பிரதேச சபை விளங்குகின்றது.

கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் பொது மக்களுக்கான பல்வேறு சேவைகளுள் ஒன்றாக பொதுநூலக சேவையும் விளங்குகிறது. இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் இலவசக் கல்வியினை வழங்கி நாட்டுக்குத் தேவையான பிரஜைகளாக உருவாக்க வேண்டிய அரசானது இலவசக் கல்வியோடு இணைந்து மாகாணசபைகளின் கீழ் இயங்குகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பொது நூலகங்களின் ஊடாக அனைத்துப் பொது மக்களும் உலகியல் அறிவு, மொழியறிவு, தொழினுட்ப அறிவு, கலை, இலக்கிய அறிவு என அனைத்து அறிவினையும் பெற்று பூரண மனிதனாக தனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் தொண்டாற்ற வேண்டும் என்கின்ற நோக்கில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பொதுநூலக சேவைகளை இலகுவாகவும் எளிதாகவும் வழங்கி வருகின்றது.

அவ்வகையில், கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் தற்போது 08 பொது நூலகங்களும் 07 வாசிகசாலைகளும் இயங்கி வருகின்றன. இவற்றுள் தலையாயதாகவும், தேசிய அளவில் முக்கியத்துவம் பெறும் நூலகமாகவும் விளங்கி கோறளைப்பற்று பிரதேச சபைக்கு பெருமை சேர்க்கின்றதொரு அறிவொளி பரப்பும் பேராலயமாகத் திகழ்வது பேத்தாழை பொது நூலகம் ஆகும்.



இலங்கைக்கு சர்வதேச ரீதியில் புகழ் சேர்க்கின்ற உல்லாசச் சுற்றுலாத் துறைக்குரிய பகுதிகளில் ஒன்றாக விளங்கும் பாசிக்குடாவிற்குச் செல்கின்ற கல்குடா பிரதான வீதியின் அருகே பேத்தாழைக் கிராமத்தில் தலைநிமிர்ந்து நிற்கின்றது பேத்தாழை பொதுநூலகம். "எதிர்காலத்திற்கான நுழைவாயில்" எனும் மகுடத்துடன் தனித்துவமான கட்டிடத்துடன் எழுந்து நிற்கும் பேத்தாழை பொது நூலகம் ஆரம்பத்தில் 1990ஆம் ஆண்டில் பேத்தாழை சரஸ்வதி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கட்டிடத்தில் சிறிய அளவில் 32 புத்தகங்களுடனும், வீரகேசரி, தினகரன் ஆகிய இரு தமிழ் தினசரி செய்தித்தாள் களுடன் இயங்கி வந்தது. அப்போது திரு.வே.கேதாதரன் என்பவர் இதன் பொறுப்பாளராக கடமை புரிந்தார்.




பின்னர், 1994ஆம் ஆண்டு கோறளைப்பற்று பிரதேச சபையின் கௌரவ தவிசாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பேத்தாழையினைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.மயில்வாகனம் இராமச்சந்திரன் அவர்களின் நிர்வாகக் காலத்தில் தற்பொழுது நூலகம்

அமைந்துள்ள காணிக்குப் பின்புறத்தே அமையப் பெற்றுள்ள காணியில் சிறிய அளவில் நூலகத்திற்கென தனியானதொரு கட்டிடம் அமைக்கப் பட்டது. அக்கால கட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளராக திரு.இ.வடிவேல் அவர்களும், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக திரு. அன்பழகன் குரூஸ் அவர்களும் கடமையாற்றினர். அன்று தொடக்கம் தற்போது உள்ள புதிய நூலகம் திறக்கப்படும் வரை நூலக பேத்தாழையில் நூலக சேவகர்களாக திரு.கே.கமலவாசன், திரு.ரி.தேவராசா, திரு.க.ருத்திரன், திரு.ஆ.அருமைநாயகம், திரு.எஸ். மோகனராசா, திரு.க.பிறேம்குமார் ஆகியோர் கடமையாற்றினர்.


**2008**ஆம் ஆண்டளவில், கிழக்குமாகாண சபையின் கௌரவ முதலமைச்சராக திரு.சி.சந்திரகாந்தன் பதவியேற்ற பின்னர், பேத்தாழையில் ஒரு நிரந்தர நூலகக் கட்டிடம் ஒன்றினை அமைப்பதற்காக எழுத்தாளர் தாழை செல்வநாயகம் மற்றும் கிராம நலன்விரும்பிகள், பேத்தாழை பொது நூலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த திரு.ஆ.அருமைநாயகம் போன்றோர், முதலமைச்சரிடம் நேரிலும், கடிதம் மூலமும் கோரிக்கை முன் வைத்து வந்தனர். வாசிப்பின் மீதும், புத்தகங்கள் மீதும் அளவற்ற பற்றுக் கொண்டிருந்த கௌரவ முதலமைச்சர் அவர்கள் தான் பிறந்த மண்ணில் பிரமாண்டமானதொரு நூலகத்தினை அமைக்கும் எண்ணத்தினை செயற்படுத்த ஆரம்பித்தார். கிழக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநரின் அனுமதியுடன், நூலகம் அமைப்பதற்கான காணி, நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிதி போன்றவற்றினை ஏற்பாடு செய்தார்.

**11.07.2009** அன்று ஊர்பொதுமக்கள், கல்விமான்களின் மத்தியில், கோறளைப்பற்று பிரதேச சபையின் கௌரவ தவிசாளர். திரு.தாமோதரம் உதயஜீவதாஸ் அவர்களின் தலைமையில், செயலாளர். திரு.க.கமலேந்திரன் மற்றும் அரச அதிகாரிகள் பலரின் பங்களிப்புடன் கௌரவ முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் அவர்களால் பேத்தாழை பொதுநூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

**2011**இன் இறுதிக் காலப்பகுதியில் கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்து – நூலகத்திற்குத் தேவையான பௌதீக வளங்களான தளபாடங்கள், புத்தக இறாக்கைகள், அலுவலக அலுமாரிகள், கணினிகள், பிரிண்டர்கள் என அனைத்தும் நூலகத்திற்கு கொண்டு சேர்க்கப்பட்டன. நூலகக் கட்டிடம், மற்றும் நூலகத்திற்கு உள்ளக வடிவமைப்பு, தேவையான ஏனைய வளங்கள் என்பவற்றினை பெற்றுக்கொள்வதில் ஆலோசனைகள் வழங்கி, மேற்பார்வை செய்தவர் தற்பொழுது ஊவா பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட உதவி நூலகராக பணிபுரிகின்ற கலாநிதி.து.பிரதீபன் அவர்களாவார்.

மிகவும் பிரமாண்டமான முறையில் அனைத்து தொழினுட்ப வசதிகளுடனும் உருவாக்கப்பட்ட இந்நூலகம் உத்தியோகபூர்வமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பிரதேச சபையிடம் கையளிக்கின்ற நிகழ்வும் திறப்பு விழாவும் **10.12.2011** அன்று நடைபெற்றது. கோறளைப்பற்று பிரதேச சபையின் கௌரவ தவிசாளர். திரு.தா.உதயஜீவதாஸ் அவர்களின் திறப்பு விழா நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநராகப் பதவி வகித்த றியர் அட்மிரல் மொஹான் விஜய விக்கிரம, கிழக்கு மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர்

திரு.சிவநேசதுரை சந்திரகாந்தன், உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம்.அதாவுல்லா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எச்.எம்.சார்ள்ஸ், மாகாணசபை உறுப்பினர் திரு.நாகலிங்கம் திரவியம் மற்றும் மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திரு.என்.சத்தியானந்தி ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் மக்களின் பாவனைக்காக இந்நூலகம் திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் கோறளைப்பற்று பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.வி.தேவநேசன், ஏனைய நூலகங்களின் உத்தியோகத்தர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நூலகப் பணிக்காக என நூலகம் திறக்கப்படுவதற்கு முன்பே கிழக்கு மாகாண முதலமைச்சரும், நூலகத்தின் நிறுவுனருமான திரு.சி.சந்திரகாந்தன் அவர்களினால், கிழக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநரின் அனுமதியுடன் புதியதொரு ஆளணியும் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு 01.11.2011 அன்று நூலக உதவியாளர்களாக சபையினால் பேத்தாழை பொதுநூலகத்தில் வைத்து, சபையின் தவிசாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கௌரவ முதலமைச்சர் அவர்களின் கரங்களினால் நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன. திரு.அரியநாகம் ஸ்ரீதர், திருமதி.புஸ்பா தயாளன், திரு.நடராஜமணி புலேந்திரன், திருமதி.புனிதா ஈவெரா, திரு.க.கமல்ராஜ் ஆகிய ஐவருக்கு அன்றைய தினம் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. பின்னர், இவர்களுடன் கணினித் தரவு இயக்குநர்களாக திரு.கோ.லவன், திரு.மரகதம் பிரகாஸ் மற்றும் திருமதி.வ.ஸோபா ஆகியோரும் இணைக்கப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து, நூலகத்திற்குரிய நூலகராக மட்டக்களப்பினைச் சேர்ந்த நூலகரான திரு.தி.சரவணபவான் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

நூலகம் கட்டிடம் திறக்கப்படுவதற்கு முன்னர் சுமார் 500 அளவிலான நூல்கள் பேத்தாழை பொதுநூலகத்திற்குரிய பழைய நூல்களாகக் காணப் பட்டன. அதனைத் தொடர்ந்து நூலகத்திற்குரிய நூல்கள் இந்தியாவில் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்டு தருவிக்கப்பட்டன. இந்த ஆரம்பகட்ட நூல் கொள்வனவுப் பணியில் ஈடுபட்டு, தமிழ்நாட்டின் பல பதிப்பகங்களில் அரிய பெரும் தமிழ் வரலாற்று, இலக்கிய, அறிவியல் நூல்களைத் தேடிப் பெற்றுத் தருவதில் முன்னின்று உழைத்தவர் எழுத்தாளரும், சமூகச் செயற்பட்டாளருமான திரு. எம்.ஆர்.ஞானம் ஸ்டாலின் அவர்கள். இதன் போது கொள்வனவு செய்யப்பட்ட ஏறத்தாழ 5000 வரையிலான நூல்களே இன்று நூலகத்தின் உசாத்துணைப் பகுதியினை அலங்கரிப்பதோடு ஏராளமான மாணவர்களுக்குப் பயனளித்துக் கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத் தக்கது. சங்க கால இலக்கியங்கள், சங்கமருவிய கால இலக்கியங்கள் என பழம்பெரும் இலக்கிய நூல் தொகுப்புக்கள் இதில் அடங்கியுள்ளமை சிறப்புக்குரியது.

அதன் பின் நூலகத்திற்கு தேவையான நூற்பட்டியலை உருவாக்குகின்ற பணி நேரடியாக கௌரவ முதலமைச்சர் அவர்களால் நூலக உதவியாளராக நியமனம் வழங்கப்பட்ட திரு.அ.ஸ்ரீதர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பிரதேச கலை, இலக்கிய முயற்சிகளிலும், புத்தகங்கள் தொடர்பான அதிக தேடலும் உள்ளவராக விளங்கியமையால் நூலகரின் மேற்பார்வையில் கொள்வனவுக்குரிய நூற்பட்டியல்களை உருவாக்குகின்ற பொறுப்பு ஸ்ரீதரிடம் வழங்கப்பட்டது. அதன்பின்னர், மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையம் மூலம் பெருந்தொகையான புத்தகங்கள் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு நூலகத்திற்கு கொண்டு வரப்பட்டன.

நூலகர் திரு.தி.சரவணபவான் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதிய நூலக உத்தியோகத்தர்களால் நூல் பதிவுப் பணியும், நூல்களுக்கான பகுப்பாக்கப் பணி மட்டக்களப்பு பொது நூலகத்தின் நூலகராகப் பணிசெய்து ஓய்வுபெற்ற திரு.எஸ்.வித்தியாசாகரன் அவர்களது உதவியுடன் மிகவும் விரைவாக நடைபெற்று முடிந்தன. இதன்படி, 2011ஆம் ஆண்டு நூலகம் திறக்கப்பட்ட போது, சுமார் 15000 புத்தகங்களுடன் கணினிப் பிரிவு, சிறுவர் பிரிவு, உசாத்துணைப் பிரிவு, பத்திரிகை சஞ்சிகைப் பிரிவு, இரவல் பிரிவு, களஞ்சியப் பிரிவு, போட்டோ பிரதி சேவை, இணைய சேவை எனச் சகல வசதிகளுடனும் திறந்து வைக்கப்பட்டது.

உத்தியோகபூர்வமாக திறப்பு விழா அன்றே நூலகத்தின் முதலாவது அங்கத்தவராக கௌரவ முதலமைச்சர் திரு.சி.சந்திரகாந்தன் அவர்கள் முறைப்படி விண்ணப்பித்து இணைந்துகொண்டார்.

இந்நூலகத்தின் மிக முக்கிய சிறப்பு இங்குள்ள சிறுவர் பகுதியாகும். வேறெந்தப் பொதுநூலகங்களிலும் இல்லாதவாறு தனியான சிறுவர் பகுதியில் பல ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கான பாடம் தொடர்பான நூல்கள், சிறுவர் கதை, பாடல் முதலான இலக்கிய நூல்கள், நூற்றுக்கணக்கான பொது அறிவு மற்றும் அறிவியல் நூல்களோடு, சிறுவர்கள் விடுமுறை தினங்களில் கார்ட்டுன், அனிமேசன் வடிவிலான சிறுவர் கதைகள், பாடல்களைப் பார்த்து மகிழ்வகேற்ற வகையில் தொலைக்காட்சி, ஒலி அமைப்புக்கள் என்பனவற்றோடு சிறுவர்களை

*மகிழ்விக்கக் கூடிய பல வகையான பொம்மைகளும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்த விருந்தினர்களும், அதிதிகளும், பொது மக்களும் பார்த்து வியக்கின்ற வண்ணம் ஒரு பொது நூலகம் அமைந்திருந்தமை அனைவரது பாராட்டினையும் பெற்றது.*

*2011ஆம் வருடம் இந்நூலகம் திறக்கப்படும் போது தரம்-3 நூலகமாகவே இருந்தது. பின்னர், நூலகம் திறக்கப்பட்ட பின்னர் 2012ஆம் வருடம் தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் தரம்-2 நூலகமாகத் தரமுயர்த்தப்பட்டது. இத்தரப்படுத்தலுக்காக தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட உதவி நூலகராகவும், இலங்கை நூலக சங்கத்தின் உப தலைவராகவும் விளங்குகின்ற திரு.எம்.என்.ரவிக்குமார் அவர்கள் தலைமையிலான குழு ஒன்று நூலகத்திற்கு நேரடியாக வருகை தந்து ஆய்வு செய்தமை குறிப்பிடத்தக்கது. தரம்-2 நூலக நிபந்தனைகளுக்கமைவாக சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு அமைவாக, ''நூலகம்' எனும் சஞ்சிகை அச்சிடப்பட்டு, தேர்வுக் குழுவினருக்கும் அதன் பிரதிகள் வழங்கப்பட்டன.*

*2012ஆம் வருடம் பேத்தாழை பொது நூலகம் தரம்2 நூலகமாக தரமுயர்த்தப்பட்டதோடு, பிராந்திய உள்ளூராட்சி மன்றத்தினால் நடத்தப்பட்ட பொது நூலகங்களுக்கு விருது வழங்கும் விழாவில் 'சிறந்த தொழினுட்ப கட்டமைப்பினைக் கொண்ட நூலகம்' எனும் விருதினையும் பெற்றுக் கொண்டது. இதற்கான விருது வழங்கும் விழா 04.03.2013இல் நடைபெற்றது.*

*கௌரவ சி.சந்திரகாந்தன் அவர்கள் முதலமைச்சராகப் பணிபுரிந்த காலத்திலும், மாகாணசபை உறுப்பினராகப் பணிபுரிந்த காலத்திலும் அவருடையதும் மற்றும் மாகாணசபை உறுப்பினரான திரு.நா.திரவியம் அவர்களது நிதி ஒதுக்கீடுகள் மூலம் நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. கொழும்பு புக்வின் புத்தக நிறுவனம் மூலம் ஏராளமான நூல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சி, மற்றும் பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு ஜெயா புக்சென்டர், வெள்ளவத்தை பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய இடங்களில் இருந்து வாசகர்களின் கோரிக்கைக்கு ஏற்ப புத்தகப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு பல்லாயிரக் கணக்கான புத்தகங்கள் கொள்வனவு செய்து நூலகத்திற்கு கொண்டு சேர்க்கப் பட்டன. அத்தோடு, நூலகத்தின் நிறுவுனரான திரு.சி.சந்திரகாந்தன் அவர்கள் தனது சொந்தச் சேகரிப்பில் இருந்த நூல்களையும் பொது நூலகத்திற்கு தொடர்ச்சியாக வழங்கி உதவினார்.*

*2013ஆம் வருடம் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சுடன் இணைந்து களனிப் பல்கலைக்கழகத்தினால் நூலகங்களுக்கான தரப்படுத்தலில் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொது நூலகங்களில் அகில இலங்கை ரீதியாக முதலாவது இடத்தினைப் பெற்று 'சுவர்ண புரவர' எனும் விருதோடு, ரூ.100,000 பரிசினையும் பெற்றுக் கொண்டது.*

*கொழும்பில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் நூலகத்தின் சார்பாக நூலகர் தி.சரவணபவான் மற்றும் சபையின் செயலாளர் ஜனாப்.எஸ்.எம்.சிஹாப்தீன் ஆகியோர் கலந்துகொண்டு, அப்போதைய மேன்மைதங்கிய ஜனாதிபதி. மகிந்த ராஜபக்ஸ அவர்களின் கரங்களினால் விருதினைப் பெற்றுக் கொண்டனர்.*

*2014ஆம் வருடம் பேத்தாழை பொதுநூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு, வாழைச்சேனை தமிழ், கலை, இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் 'மட்டக்களப்பின் முதுசமாய் விளங்குகின்ற மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை அழைத்து வந்து 'நமது இன்றைய சிறுவர்களுக்கு அவரை கதைசொல்ல வைக்கும் நிகழ்வு' மிகவும் சிறப்பாக நடைபெற்றது.*

*2015.04.02இல் இங்கு நூலகராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு.தி.சரவணபவான் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றார். அதன் பின்னர், கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஜனாப். எஸ்.எம்.சிஹாப்தீன் அவர்களால், நூலக உத்தியோகத்தரான திரு.ஆ.அருமைநாயகம் அவர்கள் பேத்தாழை பொது நூலகத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இவ்வருடம் 'ஏப்ரல்-23'இல் உலக புத்தக தினத்தினை சிறப்பிக்குமுகமாக நூலகத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. சிறப்பு நிகழ்வாக கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 03 மூத்த இலக்கியப் படைப்பாளிகளான வாகரையில் பிறந்து, மட்டக்களப்பில் வதிகின்ற எழுத்தாளர் வாகரைவாணன் மற்றும் திருப்பழுகாமத்தினைச் சேர்ந்த எழுத்தாளர் ஆ.மு.சி.வேலழகன், வாழைச்சேனையைச் சேர்ந்த எழுத்தாளரும், ஓய்வுபெற்ற அதிபருமான பெ.புண்ணியமூர்த்தி ஆகியோருக்கு, இக்கால கட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினராகவும், ஜனாதிபதி ஆலோசகராகவும் விளங்கிய கௌரவ.சி.சந்திரகாந்தன் அவர்களின் கரங்களினால் 'புத்தகங்கள் உருவாக்கிய மனிதர்கள்' எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் பிரதேசத்தினைச் சேர்ந்த பல நலன்விரும்பிகள் புத்தக தினத்தினை முன்னிட்டு, நூலகத்திற்கு புத்தகங்களை அன்பளிப்புச் செய்தனர்.*

*07.09.2016 தொடக்கம், பேத்தாழை பொதுநூலகத்திற்கு திரு.வே.கேதாதரன் அவர்கள் நூலகராக கோறளைப்பற்று பிரதேச சபையினால் நியமிக்கப்பட்டார். இவர் 28.03.2017இல் பணியில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் வரை, பேத்தாழை பொது நூலகத்தில் பணிபுரிந்ததோடு, தன்னுடைய சொந்தச்செலவில் நூலகத்தின் சில அபிவிருத்திப் பணிகளுக்கும் பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.*

*நூலகம் திறக்கப்பட்ட காலத்தில் நூலகர் தி.சரவணபவான் அவர்களால், தேசிய நூலகத்தினால் உருவாக்கப்பட்டு பொது நூலகங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த 'பூர்ணா' எனும் மென்பொருள் மூலம் ஆரம்பத்தில் நூலகத்தின் இரவல் வழங்கல் மற்றும் பட்டியலாக்கம், நூற்பதிவு போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.*

பின்னர், பெருகிச் செல்லும் நூல்களின் அளவுக்கும் மற்றும் தற்கால நவீன தொழினுட்பட வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடிய புதியதொரு நூலக முகாமைத்துவ மென்பொருளின் தேவை ஏற்பட்டது. அதற்காக பேத்தாழை பொதுநூலகத்திற்கென புதியதொரு பிரத்தியேகமான மென்பொருளினை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பில் இருந்த பிரபலமான மென்பொருள் உற்பத்தி நிபுணர் ஒருவரின் துணையுடன், கௌரவ. சி.சந்திரகாந்தன் அவர்களின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு, நூலகத்தின் அனைத்து விதமான தேவைகளையும் பூர்த்தி செய்யத்தக்கவாறு படிப்படியாக இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இப்பணியில் நூலகத்தின் சார்பாக கோபாலராஜன் லவன், மரகதம் பிரகாஸ் இருவரும் ஈடுபட்டனர்.

பின்னர், இலங்கை நூலக சங்கத்தின் தற்போதைய உபதலைவராகவும், கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தின் சிரேஸ்ட உதவி நூலகராகவும் விளங்குகின்ற திரு.எம்.என். ரவிக்குமார் அவர்கள் ‘ஹொஹா’ எனும் மென்பொருள் பற்றி எடுத்துரைத்து, அம்மென்பொருள் தான் தற்போது உலகம் முழுக்க பயன்பாட்டில் இருந்து வருவதாகவும் தெரிவித்ததோடு, பேத்தாழை பொது நூலகத்திற்கு ஹொஹா மென்பொருளினை நிறுவுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தந்தார். பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் அவர்கள் இதற்காக பூரண ஒத்துழைப்பினை வழங்கினார். ஹொஹா மென்பொருள் மூலம் நூலகத்தினை கணினி மயப்படுத்துவதற்கான வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கிய எம்.என்.ரவிக்குமார் அவர்கள், நூலக ஊழியர்களுக்கு மென்பொருள் தொடர்பான பயிற்சிகளையும் வழங்கியதோடு, தொடர்ச்சியாக அதனை மேற்பார்வை செய்து வந்தார். நூலகத்திலுள்ள நூல் ஆவணங்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றப்பட்ட பின்னர், **2016**ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வினை சிறப்பிக்குமுகமாக வாசகர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்காகவும், இணையவழி நூலகத் தகவல் அணுகு சேவையினை (OPAC) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து, இலங்கையில் பொதுநூலகங்களுள் முதன்முறையாக இணையவழி நூலகத் தகவல் அணுகுசேவையினை பயன்பாட்டில் கொண்டு வந்த முதலாவது நூலகம் என்ற பெருமையினை பெற்றுத் தந்தார்.

திரு.வே.கேதாதரன் அவர்கள் **2017**, மார்ச்சில் ஓய்வுபெற்றுச் சென்ற பின்னர், **2015**இல் இருந்து இந்நூலகத்தில் பணிபுரிந்து வந்த திருமதி. தாரணி தங்கத்துரை அவர்கள் சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் அவர்களால் நூலகத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**2017**ஆம் ஆண்டு தொடக்கம், பேத்தாழை பொது நூலகத்தில் முத்தமிழ வித்தகர் சுவாமி விபுலானந்தரின் பிறந்த தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் போது பாடசாலை மாணவர்களுக்கு போட்டி நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சுவாமி விபுலானந்தரது பிறந்த தின நிகழ்வுகளை சிறப்பாக நடத்துவதற்கு, பேத்தாழை பொது நூலக வாசகர் வட்ட உறுப்பினரும், தற்பொழுது சபையின் கௌரவ தவிசாளராகவும் விளங்குகின்ற திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்கள் பங்களிப்புச் செய்து வருகின்றார்.

*2017ஆம் வருடம் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு, பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கதாக நூலக உத்தியோகத்தர் மரகதம் பிரகாஸ் அவர்களால் 'தடை ஏது' எனும் குறும்படம் உருவாக்கபட்டு, வாசிப்பு மாத விழாவில் வெளியீடு செய்யப்பட்டது. நூலக உத்தியோகத்தர்கள், வாசகர்கள் ஆகியோரின் உறுதுணையுடன் இந்த குறும்படம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்படைப்பிற்கான கதை, இயக்கத்தினை நூலக உத்தியோகத்தர் மரகதம் பிரகாஸ் அவர்கள் மேற்கொள்ள, படப்பிடிப்பு மற்றும், எடிட்டிங், இசைக்கலவை போன்றவற்றினை பேத்தாழை பொது நூலகத்தின் வாசகரும், தொழினுட்ப கலைஞருமான திரு.தி.விதுஷன் அவர்கள் செய்தார். குறும்படத்தின் நடிகர்களாக நூலக உத்தியோகத்தர்களான திருமதி.நிலக்ஷினி மஞ்சுதராஜ், திருமதி.எம்.சிவசோதி ஆகியோருடன் நூலகத்தின் வாசகர்களான எஸ்.ரனுஸ்கான், எஸ்.விதுர்சன், கே.ரோஜினி, எஸ்.அஜித் ஆகியோருடன் குழந்தை நட்சத்திரமாக வி.அனாசானிக்காவும் நடித்திருந்தனர். 2017ஆம் வருடத்தில் தேசிய வாசிப்பு மாதச் செயற்பாடுகளை சிறப்பாக நடத்துவதற்கு பிரதேச சபையின் செயலாளர்களான எஸ்.எம்.சிஹாப்தீன் அவர்களும் அவரைத் தொடர்ந்து செயலாளராகப் பதவியேற்ற திரு.A.தினேஸ்குமார் அவர்களும் பக்கபலமாக இருந்தனர்.*

*2017ஆம் ஆண்டு நூலகத்திற்கு இன்னுமொரு புதிய தொழினுட்ப வசதியும் பெற்றுக்கொள்ளப்பட்டது.* BAR CODE SYSTEM *அறிமுகப்படுத்தப் பட்டது. இதற்கான நிதியுதவியினை பேத்தாழையினைச் சேர்ந்தவரும் தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமான திரு.கணேசமூர்த்தி யுவராஜன் அவர்கள் வழங்கினார். இதன் மூலம் நூல்கள் அனைத்திற்கும்* BAR CODE *இடப்பட்டு, நூல் இரவல் வழங்கல் சேவை இன்னும் இலகுபடுத்தப்பட்டது.*

*2017ஆம் வருடத்திற்கான 'தேசிய வாசிப்பு மாத' போட்டியில் பேத்தாழை பொது நூலகம் சிறந்த நூலகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதற்கான விருது வழங்கும் விழா 2018இல் கொழும்பில் நடைபெற்றது. சபையின் கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களும், நூலக உத்தியோகத்தர் திரு.மரகதம் பிரகாஸ் அவர்களும் இவ்விருது வழங்கும் விழாவில் நூலகத்தின் சார்பில் கலந்து கொண்டு விருதினைப் பெற்றனர்.*

*2018ஆம் வருடம் பேத்தாழை பொது நூலகத்தில் இன்னும் சில புதிய விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கைப் பொது நூலகங்களுள், நூலகத்திற்கென பிரத்தியேகமான கொடி, நூலக கீதம் என்பன இவ்வருடம் உருவாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டன. நூலக கீதத்திற்கான வரிகளை கவிஞர். அமரர். மூனாக்கானா (மு.கணபதிப்பிள்ளை), கவிஞர்.வன்னியூர் ரமேஸ், கவிஞர்.கறுவாக்கேணி முத்துமாதவன், ஆ.தனேஸ்வரன் ஆகியோர் உருவாக்கினர். இப்பாடலுக்கு திரு.கோ.சிவாகரன் அவர்கள் இசையமைத்துப் பாட, அவருடன் இணைந்து செல்வி.சு.லக்ஷி அவர்களும் பாடியிருந்தார்.*

நூலகக் கொடியில் பிரதான நிறங்களாக கபிலம் மற்றும் வெள்ளை என்பன காணப்படுகின்றன. கொடியின் மையப்பகுதியில் நூலக கட்டிடமும், சுற்றியுள்ள சூரியக்கதிர்கள் கிழக்கு மாகாணத்தினையும், வீணை பிராந்திய கலை, அம்சத்தினையும், கணினி – நூலகம் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதனையும், கணினிச் சுட்டியுடன் கூடிய புத்தகம் நூலகத்திலுள்ள நூல் சேகரிப்புக்களையும் இலத்திரனியல் ஆவணங்களையும் குறிப்பதுடன், பீடமாகக் காணப்படும் தாமரை சமத்துவத்தினையும் மற்றும் மேலே உள்ள சுடருடன் கூடிய விளக்கு தெளிந்த அறிவினையும் குறித்து நிற்கின்றன.

மேலும் இதனைச்சுற்றி மும்மொழிகளில் நூலகத்தின் பெயரும் நூலகத்தின் மகுட வாசகமான 'GATE WAY TO FUTURE' எனும் சொற்றொடர் உள்ளது. இதன் பொருள் 'எதிர்காலத்திற்கான நுழைவாயில்' என்பதாகும். இக்கொடியில் உள்ள செந்நிறம் தியாகத்தினையும், சுற்றியுள்ள தாமரை வரிசை புனிதத் தன்மையினையும், கொடியின் கரை ஓரங்களைச் சுற்றியுள்ள பச்சை, வெள்ளை மற்றும் நீலநிறச் சிறுகோடுகள் முறையே பிரதேச வளமான கரையோர கண்டல் தாவரத்தினையும், தென்னை வளத்தினையும், நன்னீர் ஆறுகளையும் எமது பிரதேசத்தினைச் சுற்றியுள்ள கடல் வளத்தினையும் குறிக்கின்றன. நூலகக் கொடியினையும், நூலக இலச்சினையையும் சிறப்பாக வடிவமைத்தவர் பேத்தாழை பொதுநூலகத்தின் தற்போதைய நூலகப் பொறுப்பாளரான மரகதம் பிரகாஸ் அவர்களாவார்.

2018ஆம் வருடம் டிசம்பர் 10ஆம் திகதி திங்கட்கிழமை அன்று பேத்தாழை பொது நூலகமானது தனது 7வது ஆண்டு நிறைவினையும், தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவினையும் இணைத்து கொண்டாடியது. இவ்விழாவினை சபையின் கௌரவ தவிசாளர் தலைமை ஏற்று நடத்தினார். பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.சி.பிரகாஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இவர்களுடன் சபையின் செயலாளர் திருமதி.பத்மலோஜினி லிங்கேஸ்வரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.எஸ்.குகநேசன், நூலகர்களான திரு.தி.சரவணபவான் (மட்டக்களப்பு பொதுநூலகம்), திருமதி.ஜெஸ்மின் கப்சா (வாழைச்சேனை பொதுநூலகம்) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். இதன்போது மட்டக்களப்பு கதிரவன் குழுவினரின் பட்டிமன்ற நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

2019ஆம் ஆண்டிலும் நூலகத்தில் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. அந்த வகையில் கோறளைப்பற்று பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் நூலகத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நூலகம் முழுவதும் வர்ணம் பூசப்பட்டதோடு, சிறுவர் பகுதியினை அழகிய ஓவியங்களும், கவின்நிலையும் நிறைந்ததாகவும் மாற்றப்பட்டது. சிறுவர் பகுதிக்கான வர்ணம் பூசுதம் மற்றும் ஓவியப் பணிகளை சேர்ந்த திரு.கிருஸ்ணா ஓவியர் அவர்கள் மிகவும் சிறப்பான முறையில் செய்து தந்தார். இவ்வாண்டிற்கான தேசிய வாசிப்பு மாதத்தில் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளோடு பிரதேச எழுத்தாளர்கள் மற்றும் மாணவர்களது ஆக்கங்களை கொண்ட 'ஊற்று' எனும் கையெழுத்து சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியராக திருமதி.தாரணி தங்கத்துரை அவர்கள் விளங்கினார்.

*2019ஆம் வருட தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவானது அனைத்து நூலகங்களையும் உள்ளடக்கியதாக கிரான் 'றெஜி' கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. 10-12-2019, செவ்வாய்க்கிழமை அன்று சபையின் கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில், அதிதிகள், சகல பொது நூலகங்களின் உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.சி.பிரகாஸ் அவர்கள் கலந்துகொண்டார். கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் திரு.எஸ்.ராஜ்பாபு அவர்களும், கோறளைப்பற்று பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்களும், கௌரவ அதிதிகளாகவும், சபையின் செயலாளர் திருமதி.பத்மலோஜினி லிங்கேஸ்வரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜனாப். அ.ஹாரூன், வேர்ள்ட் விஷன் நிறுவனத்தினர், மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள் எனப்பலரும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.*

*2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திரு.மரகதம் பிரகாஸ் அவர்கள் பேத்தாழை பொது நூலகத்திற்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். தான் பொறுப்பேற்ற பின்னர் வாசகர் வட்டம், நூலக ஆலோசனைக் குழு ஆகியவற்றின் உதவியுடன் நூலகத்தில் 'நிலா முற்றம்' எனும் பெயரில் இலக்கியச் செயற்பாட்டினை ஆரம்பித்து வைத்தார். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் இலங்கையின் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் பற்றியும், அவர்கள் படைப்புக்கள் பற்றியும் படைப்பாளிகளும், வாசகர்களும் கலந்துரையாடும் ஒரு அற்புதமான நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். நிலா முற்றம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 09 நிலா முற்ற நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இதுமட்டுமல்லாது, சுவாமி விபுலானந்தர் பிறந்த தினம், உலக புத்தக தினம், உலக எழுத்தறிவு தினம் போன்றவற்றின் போதும் நூலகத்தில் பல்வேறு விசேட நிகழ்வுகளை நடத்தி வருகின்றார். 'நூல் அரங்கம்' எனும் நிகழ்வின் மூலம் 'வாசகர்கள் தமக்குப் பிடித்த நூல்கள் பற்றி பேசுகின்ற' வீடியோக்களை நூலகத்தினுடைய YouTube பக்கத்தில் பதிவிடுவதோடு, பிரதேச படைப்பாளிகளின் படைப்புக்களை மின்னூலாக மாற்றி 'நூலகம்' இணையத்தளத்தில் பதிவிடும் பணியினையும் ஆரம்பித்து வைத்துள்ளார். ஆரம்ப காலம் முதலே பேத்தாழை பொது நூலகத்தின் பல்வேறு பணிகளிலும் முன்னின்று உழைத்து, நூலகத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகின்ற இவர், தற்பொழுது நூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவினையும், 'வல்லகி' சிறப்பு மலர் வெளியீட்டினையும் நடத்துவதில் சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்.*

*இனிவரும் காலங்களில் நூலகம் மென்மேலும் வளர்ச்சியடைந்து தரம்-1 நூலகமாகத் தரமுயர்ந்து தானும் வளர்ந்து இந்தச் சமூகத்தின் வளர்ச்சியிலும் பெரும் பங்கு வகிக்க நூலக உத்தியோகத்தர்களும், வாசகர் வட்டத்தினர் நூலக ஆலோசனைக் குழுவினர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு நூலகத்தின மகுட வாசகமான 'எதிர்காலத்திற்கான நுழைவாயில்' என்பதற்கொப்பத் திகழ வேண்டும் என அனைவரும் வாழ்த்துவோம்.*

*"வாழ்க தமிழ்! வளர்க மக்கள்!"*




மட்டுநகரின் வடக்கே கோறளைப்பற்றுப் பிரதேசமதனில்
எழில்நிறைத் தாழையூரில் நிலைத்திட்ட நன்னூலகமே
தொண்ணூறில் உருக்கொண்டு இற்றைவரை வளர்ந்து
நிறைவுடைப் பணிசெய்யும் எம்தாழையூர் அறிவாலயமே!

அனேகரின் அரும்பணியில் அரும்பிட்ட நூலகமே
அனுதினமும் வளர்ந்து ஆலமரமாய் நின்றாயே
அயராத உழைப்பின் அடையாளச் சின்னமே
அறிவூட்டும் அருந்நூல்கள் நிறைந்த ஏடகமே!

கவினுறு சிறுவர் பகுதியும் - நன்னூல்கள்நிறை
இரவற் பகுதியும் உசாத்துணை உடனே
காப்பகமும் கணினிப் பகுதியும் சேர்ந்தே
இணைய வழியும் சேவைநல்கும் புத்தகசாலையே!

பன்மொழியில் அமைந்த பல்துறை நூல்களும்
அறிவு வளர்க்கும் அரிய நூல்களும்
நிறைவாய்க் கொண்டு நாடிவரும் வாசகர்கட்கு
அறிவுப்பசி தீர்க்கும் மதிப்புடை வாசிகசாலையே!

சின்னஞ் சிறாரும் பாடசாலை மாணவரும்
அறிவுடை ஆன்றோரும் ஆர்வமுள்ள அனைவரும்
நயமுடன் நாடிவரும் நலமிகு நூலகமே
நீ வாழ்கவே! நின்சேவை நீள்கவே!



# அமரர். திருமதி.
# சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை அவர்களின் வாழ்வும் பணியும்

– மலர்க் குழு –

*மீன்பாடும் தேன்நாடாம் மட்டுமாநகரின் வடபுறமாக முப்பத்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வளம் பலவும் சூழ்ந்து அழகு நிறைந்த வாழைச்சேனை எனும் பழந்தமிழ் கிராமத்தில் 1925 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி அமரர். சிதம்பர பரஞ்சோதி அவர்கள் கௌரவமும் செல்வாக்கும் மிக்க பெரிய சைவத் தமிழ் குடும்பத்தில் பிறந்தார்.*

*சைவம், ஆசாரம் மற்றும் ஆலய வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்ட கந்தையா ஆறுமுகம் என்பவர் இவரது தந்தையார் ஆவார். இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியை சேர்ந்தவர். தனவந்தராக விளங்கிய காத்தமுத்து செட்டியாரின் மகளான கனகம்மா என்பவர் பரஞ்சோதி அவர்களின் தாயாராவார். 'பரஞ்சோதி அக்கா' என அழைக்கப்படும் இவர் கணபதிப்பிள்ளை அன்னமுத்து ஆகியோரின மகனான தங்கத்துரை என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு ஏழு குழந்தைகளுக்கும் தாயானார்.*

*இயல்பாகவே மதியூகியாகிய இவர் உதவி ஆசிரியராக சில வருடங்களும், முப்பது வருடங்களுக்கு மேலாக முதல்தர அதிபராகவும் கடமையாற்றியதோடு வாழைச்சேனையில் முதலாவது பயிற்றப்பட்ட பெண் ஆசிரியராகவும் முதலாவது பெண் அதிபருமாகவும் விளங்கி ஊருக்கும் சந்ததியினருக்கும் பெருமை சேர்த்தார். நல்ல தமிழறிவு படைத்த இவர் யாப்பிலக்கணம் கற்றதால் நல்ல புலமை மிக்கவரானார். வரவேற்புப் பாக்கள், பாடசாலைக் கீதங்கள் எனப் பலவற்றை இயற்றி இருக்கிறார். அப்பாடல்கள் எதுகை மோனையும் சிறந்த ஓசைநயம் கருத்தாழம் உள்ளனவாக அப்பாடல்கள் அமைந்திருந்தன.*

*கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, உண்மை, நன்மை செய்தல், நேர்மை என்பவற்றை கடைப்பிடிப்பதில் எந்த அளவிற்கு அமரர். பரஞ்சோதி அவர்கள் உறுதியாக இருந்தால் என்பதற்கு எவ்வளவோ சான்றுகள் உள்ளன. அதுமட்டுமல்லாது சமூக சேவை, சுயசேவையிலும் தன்னை ஈடுபடுத்தி கொண்டார். கிராமத்துப் பெண்களுக்கென 1960இல் உதயசோதி மாதர் சங்கத்தை உருவாக்கினார். சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி செயற்படுத்தினார். அதனூடாக கடன்களைப் பெற்று சிறுதொழில்களை செய்து வருமானம் பெற வழிகாட்டினார். தனது காணியில் இடம் கொடுத்து ஒரு கைத்தறி நிலையம் அமைத்து ஏழைப் பெண்களுக்கு வருமானம் பெற வழிவகுத்து கொடுத்தார்.*

பத்து வருடங்களுக்கு மேலாக பிறர் காணியில் குடியிருந்த சுமார் முப்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களின் நிலையை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து வாழைச்சேனையின் தென்புறமாக பரந்து காடாக இருக்கும் முடிக்குரிய காணியை குடியிருப்புக்கு உகந்தது எனக் கருதி காணியற்ற அந்தக் குடும்பத்தினருக்கு அங்கு குடியேற ஆலோசனை கூறி அதை நடைமுறைப்படுத்தி அடுத்த ஓரிரு தினங்களில் காடுகள் வெட்டி துப்புரவு செய்து குடிசைகள் அமைக்க வழிகள் செய்தார். சில வாரங்களிலே புதிய கிராமம் ஒன்று உருவானது. அதற்கென சங்கங்களும் உருவாகின. ஏற்கனவே அனுபவம் பெற்றிருந்த ஆண்களும், பெண்களும் சங்கங்களின் நிர்வாகப் பொறுப்புக்களை பாரமெடுத்து அந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்காக பாடு பட்டார்கள்.

அந்தக் கிராமம் 'புதுக்குடியிருப்பு' என்ற பெயரில் மிக்க வளர்ச்சி பெற்று விளங்குகின்றது. அங்கு பாடசாலையும் காளி கோவிலும் தோற்றுவிக்கப்பட்டன. அப்பாடசாலைக்கு 'வாணி வித்தியாலயம்' என்றும் அவ்வீதிக்கு 'வாணி வீதி' என்றும் பெயர் சூட்டியதும் திருமதி. சிதம்பர பரஞ்சோதி அவர்களே. அது மட்டுமல்ல வாழைச்சேனை வைத்தியசாலையின் பக்கத்திலும் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தி அங்கும் பலர் குடியேற ஏற்பாடு செய்த பெருமைக்குரியவர் இவராவார்.

இவரது சமய வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் அதுவும் சிறப்பான சமயப் பணியாக இருப்பதை அவதானிக்கலாம். ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்தின் திருப்பணி நிறைவேறாமல் 1972இல் தடைப்பட்டு நின்றபோது 1982இல் அதை கவனத்திற்கு எடுத்து கூட்டத்தினைக் கூட்டி நல்லதொரு நிருவாக சபையும் அமைத்தார். அதை செயற்படுத்த உறுதுணையாக தனது மகன் சர்வானந்தனையும் இணைத்து உறவினர், நண்பர்கள் மற்றும் நிருவாக சபையினருடன் சேர்ந்து நிதி சேர்த்து திருப்பணியை உடனடியாக தொடர ஏற்பாடு செய்தார். அம்முயற்சி கைகூடி 1982இல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. அவரது வழிகாட்டுதலில் வளர்ந்த அவரது மகன் பிரபானந்தன் இப்போது பிள்ளையார் கோயிலுக்கு சுற்றுமண்டபம் கட்டிக் கொடுத்துள்ளார். ஆலயத்தின் வரலாறு எழுதப்பட வேண்டும் என்பதற்காக அமரர். சிதம்பர பரஞ்சோதி அவர்கள் தனது முழு முயற்சியால் 'வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வரலாறு' என்ற பெயரில் அவரே புத்தகம் எழுதி அச்சிட்டு 1990இல் வெளியிட்டு ஊருக்கும் மக்களுக்கும் பெருமை சேர்த்து மனநிறைவு பெற்றார். இவர் எழுதி வடிவமைத்த புத்தகங்கள் கொழும்பில் இந்துக் கலாசார நூலகத்தில் இன்றும் உள்ளது. அத்துடன் அவ்வாலயத்திற்கு தண்ணீர் தாங்கியும் அமைத்துக் கொடுத்தார்.

அதுமட்டுமல்லாது கிராமசபைத் தலைவரான திரு.க.கனகரெத்தினம் உதவியுடன் வாழைச்சேனை விபுலானந்த வீதியில் வாசிகசாலை அமைத்ததோடு பெண்களுக்கு தையல் பயிற்சி நிலையத்தையும் அமைத்துக் கொடுத்தார். இந்தக் காணியில் விபுலானந்தர் சிலையும் கிராமசபை உதவியுடன் கட்டித் திறந்து வைத்தார். 1962இல் இவ்வீதிக்கு 'விபுலானந்தர் வீதி' எனப் பெயர் சூட்டப்பட்டது.

அமரர். சிதம்பர பரஞ்சோதி அவர்கள் செய்த பணிகளில் மிகவும் முக்கியமாக கருதப்படுவது கிழக்கிலங்கையில் ஓர் பல்கலைக்கழகம் வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் K.W. தேவநாயகம் அவர்களிடம் பல தடவை வலியுறுத்திக் கூறியதுடன் அதை நடைமுறைக்கும் கொண்டு வந்த ஒரே பெண்மணி இவராவார். அதுவே தற்போது வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் திகழ்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் K.W.தேவநாயகம் மூலம் 1977இற்கு பின்னர் அரசாங்கத்தினால் Job Bank படிவம் பெற்று பல பெண்களுக்கு தகுதி அடிப்படையில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார். 1999இல் ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வரலாற்றுப் புத்தகத்தை வெளியிட்ட பின் அவரது பிள்ளைகளோடு சென்று மீதிக் காலத்தை வாழ நினைத்து தாய்நாட்டை விட்டு அவுஸ்திரேலியா சென்றடைந்தார்.

எமக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டிய அமரர். சிதம்பர பரஞ்சோதி அவர்கள் எல்லோருக்கும் நன்மையாகவும் நல்லவராகவும் கடமை உணர்வோடும் வாழ்ந்து பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக திகழ்ந்து நம்மிடையே இருந்து 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி எல்லோரும் கண்ணீர் விட்டு கதறியழ இவ்வுலகை விட்டு மறைந்தார். அவரது சேவைகளும் பணிகளும் எண்ணிலடங்காதவை. அமரர். சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை அவர்களின் ஆன்மா நற்பேறு பெறவேண்டும் என எல்லாம் வல்ல கைலாயப் பிள்ளையாரின் திருப்பாதங்களைப் பணிந்து மன அமைதி பெறுவோம்.

குறிப்பு: அமரர். சிதம்பர பரஞ்சோதி அவர்களின் நினைவாக அவர்களின் பிள்ளைகளின் முழுமையான ஒத்துழைப்போடு மலர்க் குழுவினரால் வடிவமைக்கப்பட்டது.






## தொகுப்பு: திருமதி.புஸ்பா தயாளன்

- நல்ல புத்தகங்களைப் போன்ற நம்பிக்கை இந்த உலகத்தில் இல்லை - ஆங்கிலப் பழமொழி
- பயன்படுத்தப்படாத புத்தகம் வெறும் காகிதக் கட்டுத்தான் -- சீனப் பழமொழி
- மூடத்தன நோயை முற்றாக விரட்டும் மூலிகைகளே புத்தகங்கள் - சீனப் பழமொழி
- நூலகம் இல்லாத ஊரை நான் ஒரு ஊராக மதிப்பதே இல்லை - மாமேதை லெனின்
- ஒரு நூலகத்தையும் ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறெதுவும் தேவையில்லை - சிசரோ
- அக்கறை உள்ள பெற்றோரும் அலுமாரி நிறையப் புத்தகங்களும் வாய்க்கப் பெறும் குழந்தையே அதிர்ஷ்டசாலி - ஜான் மெக்காலே



## சிறுகதை

# அது ஒரு பொற்காலம்

**'கலாபூஷணம்' தாமரை செல்வநாயகம்**

*கிழக்கின் மேற்கு எல்லைப்புற நிலமான ஊவாவில் ஊற்றெடுத்து கிழக்கேயுள்ள வங்காளக் கடலை நோக்கி ஓடிவரும் "மதுறு ஓயா" வானது அந்தக் கிராமத்தின் ஊடாகவே ஓடிச்சென்று 'யானைக்கல்லடியில் கடலுடன் சங்கமிக்கின்றது. இந்த உப்பு நீர் வாவியானது மழை பெய்கின்ற மாரி காலங்களில் குளத்து நீர் போன்று நன்னீராகவும் உவர் தன்மையற்ற நிலையிலும் ஏனைய கோடை காலங்களில் உப்பு நீர் ஏரியாகவும் காணப்படும். இவ்வேளைகளில் தான் நண்டினங்கள் கரையை நோக்கி ஊர்ந்து விளையாடித் திரியும். இறால் இனங்கள் தெறித்துப் பாய்ந்து துள்ளிக்குதித்து விளையாடும். மீனினங்கள் மீனவர் களின் மரத் தோணிகளின் மேலாகவும் குறுக்காகவும் பாய்ந்தும் பிரண்டும் குதித்தும் ஏரியினுள் ஒழித்தும் விளையாடும்.*

*மீன் வீசும் மீரான் காக்கா தோளில் கிடக்கும் வலையினைப் பாடு எடுத்து தோணியில் நின்றவாறு கிளை கிளையாக ஓடிவரும் முரல் மீன் கூட்டத்தின் மீது வலையினை வீசி எறிவதற்காக குறிபார்த்துக் கொண்டு நிற்கிறான்.*

*தோணியை நோக்கியவாறு நீரின் மேலாக இருளொன்று வருவது போன்று முரல் மீன்கள் வந்து கொண்டிருந்தன "சுறுக்கா வலைய..... வீசு மீரான் காக்கா...." என்றவாறு தோணியின் அணியத்தில் இருந்தவாறு தோணியைத் தொடுத்துக் கொண்டு இருந்த குமாரசாமி காது கிழிய கத்துகிறான். அந்த ஆற்றின் மறுகரைப் பக்கமாகவுள்ள கரியன் கல் பகுதியில் வீக்கொண்டிருந்த தோணிக் காரர்கள் இந்தச் சத்தம் கேட்டதும் மீன் பாட்டம் வந்துட்டுடா!... தோணிகளை திருப்பிய வாறு மீன் பாட்டங்களை வளைத்து வீசத்தொடங்கி விட்டார்கள்.*

*"கடல் நாச்சியம்மாளே!..... என்ட வலையில இண்டைக்கு ஏதும் மீன் குஞ்சுகள் அம்பிட்டால்தான் என்ட வீட்டில நல்ல கறியாக்குவாள். இல்லாட்டிப் போனா இண்டைக்கும் உப்புக் கருவாடத்தான் அந்த அழிஞ்சு போனவள் ஆக்கிப் பிள்ளைகளுக்குப் போடுவாள்...புள்ள குட்டிகள் எத்தனை நாளைக்குத் தான் உப்புக் கருவாட்டத் தின்னுங்கள்" என்று கூறியவாறு பாடு எடுத்து வீசினான் "பாரமீன் தலையன் பாறுக்"*

அந்த ஆறு எல்லோருக்கும் சொந்த மானது. மாதக்கணக்கில் தொடர்ந்து அடைமழை பெய்ததன் காரணமாக மீனின் விலையும் தங்கத்தின் விலை உயர்ந்து போவது போல் அதிகரித்து விட்டது. மீனவர்களின் வீட்டில் மட்டுமல்ல அந்த கிராமத்தவர்களின் வீடுகளில் கூட அடுப்பு எரியவில்லை.

இன்று தான் மீனவர்கள் வலைகளை உதறி எடுத்துக்கொணடு ஆற்றிற்கு வந்திருக்கிறார்கள்.

“இண்டைக்கு எண்ட பாடு பிழையில்ல ஐயோ!” என்று கூறினான் மயிலங் கரச்சை மார்ட்டின். மயிலங்கரச்சைப் பள்ளி வாசலிலிருந்து அதிகாலை வேளையில் தொழுகைக் கான ஒலி ஒலிபெருக்கியில் கேட்கத் தொடங்கி விட்டது.

“இனி என்ன விடியப்போகிறது” என்றவாறு மீனவர்கள் ஆற்றைவிட்டு வெளியேறத் தொடங்கிவிட்டார்கள்.

அந்த ஊரின் மையமாகச் செல்லும் பிரதான வீதி மீன்பிடித் துறைமுகத்தடியால் திரும்பி பாசிக்குடாப் பக்கமாகச் செல்கிறது. அரசினர் பாடசாலையும் பிள்ளையார் கோவிலும் அந்த வீதியில் தான் உள்ளன. மேற்குப் புறமாக உள்ள கிராமங்களில் முஸ்லீம்களும் கிழக்குப் புறமாக தமிழர்களும் உள்ளனர்.

“ஆரம்ப காலத்தில் சைவப்பள்ளியாக விருந்த அந்தப் பாடசாலை இந்துக் கல்லூரியாகவுள்ளது. சூரிய ஆராச்சி முதலாளியின் பிள்ளைகளும். TLT அப்துல்சலாம் முதலாளி, ஜனாப். M.S.மீராசாஹிப் முதலாளி அதிபர் றஹிலா உம்மா A.M.அப்துல் காதர் (மாவட்ட ஓய்வூதியர் சங்கச் செயலாளர்) ஆகியோர் உட்பட பல முஸ்லீம் மாணவர்கள் இங்கே தான் கல்வி பயின்றனர்…” என்று கூறினார் இப்பாடசாலையின் பழைய மாணவரும் தபால் சேவகராயுமிருந்த வே.சதாசிவம் அவர்கள்.

“இந்தப் பிள்ளையார் கோவிலின் ஆரம்ப கால வரலாறு உனக்குத் தெரியுமா? தம்பி!” என்று கேட்டார் குட்டி இளையதம்பி ஐயா.

“இந்த இடத்தில் நின்ற வில்வ மரத்தடியில் அந்த நாளையில…. ஓலைக் குடில் போன்று ஒரு கோயில் கட்டி ஒரு பிள்ளையார் போன்ற உருவத்திலுள்ள கல்லையும் வைத்து இந்த ஊர்மக்கள் வழிபட்டு வந்தார்களாம். விசேட நாட்களிலும் வெள்ளிக் கிழமைகளிலும் பால்புக்கை பொங்கிப் படைப்பார்களாம் எல்லோருக்கும் புக்கைப் பிரசாதம் கொடுப்பார்களாம். ‘பிச்சிலான் கணபதி என்றொரு பொடியனும் பிரசாதம் பெற்றுச் செல்வானாம்.

ஒரு நாள் அவனுக்கு புக்கை கிடைக்க வில்லையாம் கூச்ச சுபாவமுள்ள பிச்சிலான் கோவித்துக் கொண்டு சென்று விட்டானாம். ஆத்திரம் அடங்காத அவன் அந்தப் பிள்ளையார் கல்லைத் தூக்கிக்கொண்டு போய் பக்கத்தில் உள்ள வண்ணான் துறையில் வீசிவிட்டு வந்து விட்டானாம்.

ஊர்ப் பெரியார்கள் எல்லாம் பிள்ளையார் கல்லைத் தேடியும் கிடைக்கவில்லை. ஒரு நாள் எப்படியோ வண்ணான் துறையில் நீரில் கிடந்த கல்லைக் கண்டுபிடித்து தூக்க முயற்சித்தும் முடியாது போயிற்றாம். அந்தக் கோயில் பூசகராயிருந்தவரின் கனவில் ஒருவர் கூறினாராம். முதலில் பிச்சிலான் கணபதியை தேடிக் கண்டு பிடியுங்கள். அவனால்தான் தூக்க முடியும் என்று…

பிச்சிலானைக் கண்டு பிடித்து பிள்ளையார் கல்லிகைத் தூக்கி வரச்செய்து மீண்டும் அந்த இடத்திலே சற்றுப் பெரிதாகக் கோவிலையும் அமைத்து வழிபட்டார்களாம் என்பது வரலாறு. இன்று அந்தப் பிள்ளையார் ஆலயம் சிற்ப வேலைப்பாடுகளுடன் கயிலாயப் பிள்ளையார் ஆலயமாக உள்ளது” என்று கூறிமுடித்தார்.

இந்துக்கல்லூரி கனிஷ்ட வித்தியாலய மாக இயங்கிய போதும் மகா வித்தியாலயமாக மாறிய போதும் பெரிய ஐயா என்று அழைக்கப்பட்ட இளையதம்பி வாத்தியார் தான் அதிபராக விளங்கினார். அவர் விறாந்தையால் உப்புப் பூசிய பிரம்புடன் நடந்து வரும்போது சத்தமிட்டுக் கொண்டிருந்த மாணவர் மூச்சுப் பேச்சில்லாமல் அடங்கி விடுவார்கள். மேடையுடன் கூடிய ஒரேயொரு கட்டிடம் தான் அப்போது இருந்தது. முன்னால் பெரியதொரு பலாமரம். அதன் கீழ்தான் அசெம்பிளி நடக்கும். தேசிய கீதம் மாணவர்களால் பாடப்பட்டு முடிந்ததும் அதிபர் உரையாற்றுவார்.

“இன்று நமது பாடசாலைக்கு ஒரு பொன்னாள். நேற்று மட்டு நகரில் நடந்த தினகரன் விளையாட்டு விழாவில் ஐந்து(5) மைல் தூர மாணவர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் நமது பாடசாலையைச் சேர்ந்த 8ம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவனான H.m. புகாரி என்பவர் 1ம் இடத்தினைப் பெற்று பைசிக்கில் வண்டியையும் பரிசாகப் பெற்றுள்ளார். ஒரு முஸ்லீம் மாணவனே இப் பாடசாலைக்கும் இந்தக் கிராமத்துக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளான் என்பதனையிட்டுப் பெருமை அடைகின்றேன்” என்று மாணவர் களின் பலத்த கரகோச ங்களின் மத்தியில் பேசி முடித்தார். அத்துடன் அந்த மாணவனுக்கு அதிபரினால் பூமாலையும் அணிவிக்கப்பட்டது. அன்று அதிபரின் செலவில் பக்கத்தில் உள்ள தோசைக்கடைச் சாமியாரின் கடையில் வடைகள் பெறப்பட்டு தேனீருடன் வகுப்பறையளில் மாணவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது.

**‘அது ஒரு பொற்காலம்’**



கவிதை



# நம் அரசியல் தலைமைக்காய்

கவிஞர் 'வாழைச்சேனை ஜெயன்' திரு.எ.த.ஜெயரஞ்சித்

**த**மிழை தட்டிக்கழித்து
தரமான வரவேற்பில்
தங்கமான புகழ் ஓங்க
படிப்பை நிறுத்தி
பல்லியங்கள் இசைப்பதற்காய்
இன்னியங்கள் பழகுங்கள்.
நாளை அடிவாங்காமல்
நாயில் கடிவாங்கி
புதிதான பூப்பறித்து பூமி
தொடுமளவு
பூமாலை தொடுத்திடுங்கள்,
நம் அரசியல் தலைமைக்காய்.

புவியியலைப் புறந்தள்ளி
புத்தகப்பை புரட்டிவிட்டு
பத்தாம் வகுப்பில் பத்து மாலை
எட்டாம் வகுப்பில் ஏழுமாலை
ஏயல் வகுப்பில் எல்லோரும்
மாலை
எடுப்பாகக்கட்டி
எடுத்துவாருங்கள்,
நம் அரசியல் தலைமைக்காய்.

ஆங்கிலத்தை அகற்றிவிட்டு
அழகாக நிகழ்வு செய்ய
படிப்பை நிறுத்தி நாமும்
பால் போல் நிலந்தெரிய
பளீரென்று மாபிள் வெளிற
மகா மண்டபங்களை மசாஜ்
பண்ணி
மலகூடங்களை மகிழ்விடமாக்கி
சலகூடங்களைச் சலவை
செய்யுங்கள்,
நம் அரசியல் தலைமைக்காய்.

வரலாறு பாடத்தை
வலுவிழந்த பாடமாக்கி
அழகிய பிள்ளையை
அசராமல் தயார்படுத்தி
வரவேற்கும் விருந்துக்கு
வகுப்பறையைக்
காலிசெய்வோம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

வரலாறே விளங்காத
வலுவிழந்த மாணவர்க்காய்
வகுப்பறைக்குள் அனுப்பாமல்
வடிவான வெனறடிக்க
வரதன் சேறையும்
வாழையூர் அனுப்பி நாமும்
வாட்சப்பில் சரிபார்ப்போம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

சுகாதாரம் சுத்தமாய் விட்டு
சுட்டெரிக்கும் வெயிலிலும்
சுகமளிக்கா ஆடையிலும்
பாட்டி புறக் அணிந்து
பல்லிழித்து நிற்குமாறு
பாவையரைத் தயார் செய்வோம்.
வெள்ளை நிற பிள்ளைகளை
கொள்ளை அழகு கூட்டி
கொடும் வெயிலில் வரவேற்க
கொட்டுண் ஆடையின்றி
மாலையுடன் மகிழ்வாய்

மாலையிடும் வேளையிலே
கறுப்பு நிற அன்பரசி
கண்ணீர் வடித்து நிற்க
அடையாள அரசியலில்
அதையும் தொலைத்து நிற்போம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

கணிதத்தைக் கட்பண்ணி
கலையரங்கில் களைகட்ட
காலை முதல் மாலை வரை
பரதக்கலை பயின்றிடவே
பாவையரைத் தயார்
செய்வோம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

விஞ்ஞானத்தை விலக்கிவைத்து
வீட்டிலே வளர்த்துவைத்த
விலையுயர்ந்த குலையை ஈனும்
கதலி வாழை கட்டி நாமும்
கலையழகைக் கூட்டுதற்கு
கல்வியினைத்
தொலைத்திடுவோம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

அய் சீற்றிப் பாடத்தை
அசிப்பின்றிப் புறந்தள்ளி
அழகாக அமையவென
அமைத்துத் தரவல்ல
அன்னலிங்க ஆசானை
அழைப்பிதழை தயாரிக்க
தனியறைக்குள்
முடக்கிடுவோம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

சித்திரக்கலை சிதறவிட்டு
சிற்றுண்டிச் செலவை
சரிசெய்வோரை
சில்லறைக் கடையொன்றில்
சிட்டையொன்று எடுக்கச்
செய்து
பட்டப் பகலிலேயே
பாவியாக ஆக்கிடுவோம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

பெருத்த தலை வருகுதென்று
குழம்பிய வகுப்பதனை
குருத்தோலை கட்டச் செய்ய
குடியுரிமை இழந்து நிற்க
கூட்டமாக ஏறச்செய்து
குரும்பையுடன் இளநீரும்
குடித்து மகிழ்ந்திடவே
வகுப்பறையைக்
குழப்பிடுவோம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

புத்தியின்றி நாமுமிங்கு
கத்தி கயிறு வாங்கவென்று
பத்தாம் வகுப்புப் பரமனவன்
சமயத்தை இழந்து நிற்க
பக்கத்து வீட்டுக்கு
பக்குவமாய் அனுப்பி
வைப்போம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

விசுக்கோத்தும் ஒன்றொன்றும்
வினோக்குப்பி கலந்தளித்து
கசகசா போட்டுவைத்து
கடகடா டம்ளரிலே
மஞ்சளான பானமதை
மருந்தாக கொடுத்திடுவோம்,
நம் அரசியல் தலைமைக்காய்.

பருத்த பறங்கியுடன்
பலவகையில் சிற்றுண்டி
ஐஸ் இட்ட குளிர்பானம்
அழகான பெண்ணொருத்தி
அலேக்காக கொடுத்து நிற்க
குழைந்து அவர் குடிப்பதையே
குழந்தைகளும் பார்த்திருப்பர்,
நம் அரசியல் தலைமைக்காய்.

கல்விக் கூடத்திலே
கனதியான தேவைகளை
சொல்லிக் கொடுத்ததுபோல்
சொக்கவைக்கும் தமிழாலே
கில்லிபோல் நம்முதல்வர்
வரவேற்பார் தலைமைதாங்கி,
நம் அரசியல் தலைமைக்காய்.

சில நிமிடம் கல்வி பேச
பல மணிக்கு பலமிழந்த
பாவையரும் பூவையரும்
பாவமாக குழம்பி நிற்க
குஷியாகப் பேசியவர்
கும்பிட்டே சென்றிடுவார்.

# "பாசிஸத்தின் கண்களை நேருக்கு நேர் எதிர் கொண்டோம்"

## பெண்ணியச் செயற்பாட்டாளர் விஜி



*இலங்கை மற்றும் புகலிட சூழலில் பெண்ணிய அரசியல், இலக்கிய செயற்பாட்டாளராக நீண்ட காலமாக இயங்கி வருபவர் விஜி. மட்டக்களப்பு கிண்ணையடி இவரது சொந்த இடம். 90களில் பிரான்சுக்கு புலம்பெயர்ந்த அவர் பெண்ணிய அரசியல், இலக்கியம், பதிப்பு என இயங்கி வருகிறார். எழுத்து சார்ந்து இவரது பல விமர்சனக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் இலக்கிய சந்திப்பு மற்றும் பெண்கள் சந்திப்பு போன்றவற்றை தொடர்ச்சியாக நடத்தி வருகிறார். பிரான்ஸிலிருந்து வெளிவந்த மிக முக்கிய மாற்று இலக்கிய, அரசியல் சஞ்சிகையான* ***எக்ஸில்*** *இதழின் ஆசிரியர்களுள் ஒருவர். பிரான்ஸை தளமாகக் கொண்டு இயங்கி வரும் 'தலித் சமூக மேம்பாட்டு முன்னணி' என்கிற அமைப்பின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறார். அவருடனான நேர்காணல் இது.*

### நேர்கண்டவர்: ஜிஃப்ரி ஹாசன்

***நீங்கள் இயங்கிவரும் தளங்கள் பற்றி?***

இலக்கியம், அரசியல், விமர்சனம், பெண்ணியம், சமூக விடுதலை, என பல்வேறு துறைகள் சார்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன். இதற்கான தளங்கள் காலத்தின் தேவைகளுக்கேற்ப மாறிவருகின்றன. நான் புகலிடத்திற்கு (பிரான்ஸ்) வந்து சேர்ந்த 1990 களில் இருந்து இலக்கியச் சந்திப்பு, பெண்கள் சந்திப்பு போன்ற முக்கிய தளங்களில் இணைந்து செயற்படக்கூடியதாக இருந்தது. அவை இன்று வரையும் தொடர்கின்றன.

அதே போல புகலிட இலக்கியம் சார்ந்த இதழியல் மற்றும் நூல் வெளியீட்டு தளங்களிலும் இயங்கி வருகின்றேன். பிரான்சிலிருந்து இயங்கும் "இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி' யின் செயற்பாட்டாளர்களில் ஒருவராக இருக்கின்றேன். இவ்வாறாக சந்திப்புகளையும் விமர்சன அரங்குகளை நடாத்துவது, கலந்து கொள்வது மற்றும் தொகுப்புகள், சஞ்சிகைகள் சார்ந்த வெளியீடுகள் என்றும் தோழமைகளுடன் இணைந்து பல்வேறு விதத்திலும் செயற்பட்டு வருகின்றேன்.

***இலக்கிய செயற்பாட்டில் உங்கள் ஈடுபாட்டின் தொடக்கம் எப்படி நிகழ்ந்தது?***

*ஆரம்ப காலங்களில் இலங்கையில் இருக்கும்போது வாசிப்பு மட்டுமே இருந்தது. எனது தந்தை வாசித்த "கல்கி" அதில் தொடராக வரும் கதைகள், வாராவாரம் அவர் தவறாது வாங்கி வரும் சுதந்திரன், தீப்பொறி போன்ற யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பத்திரிகைகள் என்று வாசிப்புமட்டுமே பதின்ம வயது வரை தொடர்ந்தது. பின்னர் தமிழீழ விடுதலை பாதையில் காலடி பதித்தபோதுதான் அரசியல் நூல்களை படிக்கும் சூழல் வாய்த்தது. மொஸ்கோ பதிப்பக வெளியீடுகளான மார்க்சின் கார்க்கியின் "தாய்" தொடங்கி வரலாற்று பொருள் முதல் வாதம் வரையில் வேதங்களைப் படிப்பது போன்று பயபக்தியுடனும் விசுவாசத்துடனும் அரசியல், இலக்கிய பிரதிகளையும் படித்த காலங்களாக அவை இருந்தன.*

*சிவப்பு அட்டையில் வெளிவரும் இந்நூல்கள் மீதான வாசிப்புக்கள் புரட்சியை எம் கைக்கெட்டிய தூரத்துக்கு கொண்டு வருவதாக உணரச்செய்தன. மறுபுறம் புதிய பாதை, பொங்கும் தமிழமுது என்று இந்தியாவிலே அச்சாகி பல்வேறு தடைகளைத் தாண்டி எம்மை வந்தடையும் இயக்க சஞ்சிகைகள் வேகத்தையும் விறுவிறுப்பையும் தந்ததோடல்லாமல் சோஷலிச தமிழீழத்தை எம் அகக் கண்ணால் தரிசிக்கும் வல்லமையைத் தந்தன. அதன் பின்னர் சிறிது காலம் பணியாற்ற கிடைத்த ஆசிரிய தொழிலும் அதற்கான பயிற்சி கலாசாலை வாழ்வும் கவின் கலைகள் சார்ந்த எனது தேடலுக்கு தீனி போட்டன.*

*ஆனாலும் யுத்தம் என்னை துரத்தியபோது என் தேசத்தை விட்டு விலகி பிரான்ஸ் வர நேர்ந்தது. இங்கு வந்த பின்னர் இலக்கியச் சந்திப்பு, பெண்கள் சந்திப்பு போன்ற தொடர் நிகழ்வுகள்தான் புகலிட வாழ்வில் எதிர்கொண்ட வெறுமையை ஆற்றுப்படுத்தும் மருந்துகளாயின. இச்சந்திப்புக்கள் தந்த தோழமைகளுக்கு அறிமுகமான எழுத்தாளர்களும் அவர்களது படைப்புகளும், தொடர்ச்சியான வாசிப்புக்கு வாய்ப்பளித்தன. இச்சந்திப்புகளில் நடைபெறும் நூலறிமுகம், விமர்சனங்கள் விற்பனைக் கூடங்கள் என்று நூல்கள் வாசிப்பும் அவை சார்ந்த தேடலும் மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கின. அதன் பின்னரே நானும் கட்டுரைகள் மற்றும் விமர்சனங்கள் என்று எழுதத் தொடங்கினேன்.*

***படைப்பிலக்கியம் சார்ந்து ஏன் இயங்கவில்லை?***

*உண்மையில் தெரியவில்லை. இதுவரை நான் கட்டுரைகள், நூல் விமர்சனங்கள் மட்டுமே எழுதியிருக்கிறேன். படைப்பிலக்கிய துறையில் ஈடுபட விருப்பமில்லை என்று சொல்லமுடியாது. ஆனால் நான் ஒருபோதும் முயற்சித்ததில்லை. எனக்கு படைப்பிலக்கியம் வராது என்று விட்டுவிட்டேனோ தெரியவில்லை. இனி சிலவேளை முயற்சி செய்து பார்க்கலாம்.*

***புகலிட இலக்கிய வரலாற்றில் "எக்ஸில்" என்னும் சஞ்சிகையின் பாத்திரம் கனதி மிக்கது அதில்உங்கள் பங்களிப்பு பற்றி?***

*ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான சபாலிங்கம் என்பவர் பிரான்சிலிருந்து இலங்கை வரலாற்று நூலொன்றை எழுத முனைந்தார். அதை அறிந்த புலிகள் அவரது நூலை தடுக்கும் முயற்சியில் அவரது*

வீட்டுக்குள் புகுந்து அவரை சுட்டுக்கொன்ற நாட்கள் அவை. அந்த கொலையைத் தொடர்ந்து அதுவரை வெளிவந்து கொண்டிருந்த பெரும்பாலான புகலிட சஞ்சிகைகள் நின்றுபோயின. அவ்வேளையில் தான் புகலிட இலக்கிய பரப்பிலே நீண்டு கிடந்த மௌனத்தை கலைத்துக் கொண்டு கிளர்ந்தெழுந்ததுதான் எக்ஸில் எனும் ஏடு.

அப்போது லக்ஸ்மி, ஜெபா, விஜி, ஸ்ராலின், கற்சுறா, கலைச்செல்வன் போன்ற ஆறு தோழமைகள் இணைவில்தான் எக்ஸில் இதழ்**1998** ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்த நேரத்தில் இருந்த அரசியல், இலக்கிய சூழல் மிகவும் நெருக்கடி மிக்கதாகவும், ஆபத்தானதாகவும் இருந்தது. ஆனாலும் இங்கு ஐரோப்பிய நாடுகளில் இருக்கக்கூடிய ஒரு சிறிய கருத்துச் சுதந்திரத்தை கேடயமாக கொண்டே எக்ஸிலை வெளிக்கொண்டு வந்தோம்.

முக்கியமாக இலங்கைக்கும், இந்தியாவுக்கும் பல நூறு பிரதிகளை இலவசமாகவே அனுப்பி வைத்தோம். ஏனெனில் இலங்கையில் யுத்தம் அகோரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அரசபடைகளும் புலிகளும் தமிழ் பிரதேசங்களை ஆயுதங்கள் மூலம் அதிகாரம் செய்த காலமது. அவர்களது விருப்பத்திற்கு மாறாக இலங்கையில் மட்டுமல்ல புகலிடத்திலும் கூட எதுவும் எழுதவோ பேசவோ முடியாத நிலையிருந்தது.

ஆகவே எங்களுடைய நோக்கங்களில் கருத்து சுதந்திரத்துக்காக குரல் கொடுப்பது என்பதே முதன்மையானதாக இருந்தது. அத்தகைய சஞ்சிகையொன்று கூடியளவு வாசகர்களின் கைக்கு எட்டவேண்டும் என்பதால் இலவசமாகவே அனுப்பி வைத்தோம். எக்ஸிலில் அரசஃபுலி பயங்கரவாதங்களுக்கு எதிரான கட்டுரைகளும், ஆக்க இலக்கியங்களும் நிறையவே வெளிவந்தன. ஒரு எழுத்தைக் கூட மாற்றாமல் எழுத்தாளர்களுக்கு பூரண சுதந்திரமளித்தோம்.

இலங்கையில் இருந்தே புலிகள் எங்கள் மீது கொலை மிரட்டல் செய்தியனுப்பும் அளவுக்கு நாங்கள் பாசிஸத்தின் கண்களை நேருக்கு நேர் எதிர்கொண்டோம். இதில் எங்கள் எல்லோருக்கும் சமபங்குண்டு. ஏனெனில் எல்லோரும் எல்லாவற்றிலும் பங்குகொண்டோம். ஆனாலும் துரதிஸ்ட்டவசமாக சிறு சஞ்சிகைகளுக்குரிய பண்புகளில் ஒன்றான கருத்து வேறுபாடு நான்காவது இதழிலேயே தொடங்கி விட்டது. அதன் காரணமாக எமது குழு நான்கு பேராக சுருங்கியது. எனினும் நாங்கள் எக்ஸிலை**13** இதழ்கள் வரைதொடர்ந்து கொண்டு வந்தோம்

**எக்ஸில் ஊடாக நூல் பதிப்புகளும் இடம்பெற்றன அல்லவா?**

ஆம். எக்ஸில் பதிப்பக வெளியீடுகளையும் செய்தோம். முக்கியமாக "மட்டக்களப்பு தமிழகம்" என்னும் வரலாற்று பெருநூலை மறுபதிப்பாகவும், கலாமோகனின் "நிஷ்டை" சக்கரவர்த்தியின் "யுத்தத்தின் இரண்டாம் பாகம்", போன்ற சிறுகதை தொகுப்புகளையும் ஸ்ராலினின் "தமிழீழப்புரட்டு" என்னும் நூலையும் வெளியிட்டோம். என்னைப் பொறுத்தவரை எக்ஸில் சஞ்சிகையும், அதன் வெளியீடுகளும் எமக்கு பெரும் பொருட்செலவைதந்தன. ஆனால் அதேபோன்று மனநிறைவையும் தந்த செயற்பாடுகளாகவே இன்றும் உள்ளன. தற்போது எக்ஸில் இதழ் நின்று போனாலும் பதிப்பக முயற்சிகளை மெதுவாக வேனும் தொடருகின்றோம்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கூட முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன் அவர்களின் சிறைக்குறிப்புகள் அடங்கிய "வேட்கை" என்னும் நூலினை வெளியிட்டோம். பாரிஸில் இடம்பெற்ற அவ்வெளியீட்டு நிகழ்வைக்கூட பிரான்ஸ் வாழ் புலிப்பினாமிகள் வன்முறை மூலம் குழப்பியடித்து புத்தகங்களை பறித்துச் சென்று எரித்து மகிழ்ந்தனர் என்பதை கேள்வியுற்றிருப்பீர்கள். அந்த வகையில் குரலற்றவர்களின் குரலாக இயங்குவதையே எங்கள் வெளியீட்டுப் பணியாக கொண்டுள்ளோம்.

**இலக்கிய சந்திப்பு பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாமா?**

யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்த தமிழ் ஆர்வலர்களால் முதல் முதலில் இவ்விலக்கியச் சந்திப்பு ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்டது. ஐரோப்பாவின் பல நாடுகளில் சிதறி வளர்ந்த இவர்கள் தங்கள் எழுத்துக்களை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ளவும் அவை குறித்த கருத்துக்களை செவிமடுக்கவுமாக ஒன்றிணையும் இடமாக அது விரிவடைந்தது. அவ்விதம் காலப்போக்கில் அரசியல், இலக்கியத்தில் நாட்டம் கொண்டவர்களில் ஒருத்தியாக நானும் அதில் பங்கெடுக்கத் தொடங்கினேன். பின்னர் ஒவ்வொரு நாடாக ஹொலண்ட், பிரான்ஸ், சுவிஸ், பிரித்தானியா, நோர்வே, கனடா என்று மாறி மாறி இயங்கிக் கொண்டிருந்தது. சஞ்சிகைகள், நூல்கள் சார்ந்த வெளியீட்டுரைகள், விமர்சனங்கள், கருத்து மோதல்கள் என்று வானைப் பிளக்கும் வாதப் பிரதிவாதங்களை அங்கே தரிசிக்க முடியும். இந்த இலக்கிய சந்திப்பின் அனுபவங்களே என்னையும் எழுதத் தூண்டியது.

இறுதி யுத்தத்தின் பின்னர் இலங்கையிலும் மூன்று இலக்கியச் சந்திப்புகள் நடைபெற்று விட்டன. இலக்கியச் சந்திப்பு என்பது இச்சந்திப்பிற்கு பெயராக இருந்தாலும் அழகியலோடு இணைந்து அரசியலுக்கும் அங்கே பஞ்சம் இருப்பதில்லை. இச்சந்திப்பின் விசேட அம்சம் என்னவென்றால் அது ஒரு முழுமையான கருத்துச் சுதந்திர களமாக இயங்கி வருவதுதான்.

**ஆகவே இலக்கியச் சந்திப்பு, பெண்கள் சந்திப்பு என ஏன் இரு பிரிவாக நடாத்தி வருகிறீர்கள்? பெண்கள் சந்திப்பில் பெண்கள் மட்டும்தான் கலந்து கொள்வதாக அறிகிறேன். அதற்கான நோக்கம் என்ன?**

ஆரம்பத்தில் இலக்கியச் சந்திப்பு மட்டும்தான் நடைபெற்று வந்தது. பொதுவாக கூட்டங்களில் பேசுவதற்கு பெண்களுக்கு இடம் கிடைப்பது மிகவும் அரிது. கிடைத்து பேசினாலும் அதை ஆண்கள் காதுகொடுத்து கேட்பது குறைவு, மேலும் பெண்களின் பேச்சுக்களுக்கு கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதும் குறைவு. இதை உணர்ந்த பெண்கள் தனியாக சந்தித்தால் தான் பெண்கள் தயக்கமின்றி மனம்விட்டு பேசுவார்கள் என்கின்ற நோக்கத்தில்தான் "புகலிட பெண்கள் சந்திப்பு" 1990இல் தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சி அதை முற்று முழுதாக நிரூபித்தது. இச்சந்திப்பு மூலம் பெண்கள் எழுதவும், வாசிக்கவும், அரசியல் பேசவும் தூண்டப்பட்டார்கள்.

இலங்கை, இந்தியா, ஐரோப்பா, கனடா, அமெரிக்காவில் வாழும் இலக்கிய அரசியல் ஆர்வமுள்ள பெண்களிடையே ஒரு இணைப்பும் ஏற்பட்டது.

முக்கியமாக பெண்ணிய சிந்தனைகளில் ஈர்க்கப் பட்டவர்கள், பெண்களின் அடக்குமுறைக்கெதிராக குரல் கொடுக்கும் பெண்கள் கலந்து கொண்டார்கள். அதன்மூலம் பெண்களின் எழுத்துக்களை மட்டுமே கொண்ட பல "பெண்கள் சந்திப்பு தொகுப்பு"களை கொண்டு வந்துள்ளோம். இன்றும் பெண்கள் சந்திப்பு தொடர்ந்தேச்சியாக நடைபெற்று வருகிறது. கொரோனா காலம் என்பதால் தற்போது எங்களால் நேரடி சந்திப்புகளை நடாத்த முடியவில்லை. அதனால் இணைய வழிக் கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றோம். இதில் நேரடிச் சந்திப்புகளில் கலந்து கொள்ள முடியாத பெண்ணியவாதிகள், சமூக விடுதலைப் போராளிகள் என்று உலகெங்கிலும் இருந்து கலந்து கொண்டு கருத்துக்களை பறிமாறிக் கொள்வதும் சில செயற்பாடுகளை செய்வதும் மிகவும் திருப்திகரமானதாக உள்ளது.

**"தலித் சமூக மேம்பாட்டு முன்னணி" பற்றி கூறியிருந்தீர்கள் அந்த அமைப்பு பற்றியும், செயற்பாடுகள் பற்றியும் கூறமுடியுமா?**

இலங்கையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழரிடையே சாதிய வேறுபாடுகளும் ஒடுக்கு முறைகளும் காணப்படுவது எல்லோரும் அறிந்ததே. அதிலும் வடக்கில் வாழும் தமிழரிடையே சாதிய வேறுபாடும், தீண்டாமையும் மிகவும் ஆழமாக விரவிக் கிடக்கிறது. இச்சாதிய கட்டமைப்புக்கு எதிராக பலமான அமைப்புகளும், போராட்டங்களும் இடம்பெற்றுள்ளன. 60, 70களில் தீவிரமடைந்திருந்த சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் தமிழீழப் போராட்டம் என்று ஒன்று உருவானபோது அடங்கிப்போனது. தீண்டாமைக்கெதிரான அமைப்புக்கள் சின்னா பின்னமாக்கப்பட்டு சாதியத்துக்கு எதிரான போராட்டங்கள் சிதைக்கப் பட்டு, ஆயுதத்தின் முன் அமைப்புகளும் கலைந்து போனது. இதன்பின்னர் தமிழீழ போராட்ட காலத்தில் அங்கு சாதிய பிரிவினையோ, பிரச்சனைகளோ இல்லை என்கின்ற பிரமையொன்றை புலிகள் இயக்கக் கருத்தியல் தோற்றுவித்திருந்தது. ஆனால் சாதிய பிரச்சனைகள் வெளிவராது ஆயுத பின்னணியில் அமுக்கி வைக்கப்பட்டிருந்தது எனலாம்.

இதேவேளை புகலிடத்திற்கு இடம்பெயர்ந்த தமிழர்கள் அவர்களுடன் சாதியத்தையும் மறக்காது காவிக்கொண்டு வந்திருந்தமையால், வெளிநாட்டுத் தமிழரிடையேயும் சாதியப்பாகுபாடுகளும், சமூகப் பிரச்சனைகளும் தொடர்ந்தன. ஆகவேதான் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இன்னும் சாதிய வேற்றுமைகள் அப்படியே கட்டிக் காப்பாற்படுவதை வெளிக்கொண்டு வருவதற்கும், இங்கு புகலிடத்தில் நடைபெறும் சாதிய பிரச்சனைகளை உலகறியச் செய்வதற்குமாகத்தான் இந்த "தலித் சமூக மேம்பாட்டு முன்னணி" தொடங்கப்பட்டது.

இதில் நானும் ஒரு உறுப்பினராக செயற்படுகின்றேன். எங்கள் நோக்கத்தை செயற்படுத்த "தலித் மாநாடு" களை பாரிஸ், லண்டன், கனடா போன்ற நாடுகளில் நடாத்தினோம். மேலும் இலங்கையில் சாதிய விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்து போராடிய சமூக விடுதலைப் போராளிகளின் நினைவுநாள் ஒன்றை ஒவ்வொரு வருடமும் செய்து வருகின்றோம். அத்துடன் "வடு" என்கின்ற பத்திரிகையையும் கொண்டு வந்ததோடு, அவசியம் கருதி இரண்டு நூல்களையும் வெளியிட்டுள்ளோம்.

*இலங்கையில் நடந்த சாதிய போராட்ட வரலாற்றை அதில் கலந்துகொண்டு போராடிய தோழர் யோகரெட்ணம் அவர்கள் எழுதிய "தீண்டாமைக் கொடுமைகளும், தீ மூண்ட நாட்களும்" என்கின்ற நூலையும், மல்லிகை சஞ்சிகையின் ஆசிரியரும், எழுத்தாளருமான டொமினிக் ஜீவா அவர்களின் மறைவின் பின்னர் அவரது நினைவுகளைப் பதிவு செய்யும் முகமாக "நெடுவாழ்வின் எழுதித்தீரா நினைவு" என்கின்ற நூலையும் வெளியிட்டுள்ளோம். தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் செயற்பாடுகளை எங்களது "தூ .நெற்" என்கின்ற இணையத்தளத்திலும் பார்க்க முடியும்.*

***ஈழத்து தலித் இலக்கியம் என்ற பேசுபொருள் மேற்கிளம்பாமல் இங்குள்ள முற்போக்கு மார்க்ஸிய விமர்சகர்கள் தடுத்தார்கள் அல்லவா?***

*"தலித் இலக்கியம்" என்கின்ற தனித்துவப் போக்கே 80களின் பின்னரே உருவாகியது. யாழ்ப்பாணத்தில் சாதிய போராட்டங்களை முன்னெடுத்தவர்கள் முன்நின்று உழைத்தவர்கள் இடதுசாரிகள்தான். முற்போக்கு சிந்தனைகளை கொண்ட டானியல், டொமினிக் ஜீவா, தெணியான் இரகுநாதன், சுபத்திரன் போன்ற தலித் படைப்பாளிகள் இடதுசாரிய மார்க்சிய சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு இடதுசாரிய கட்சிகளிலேயே அங்கம் வகித்தனர்.*

*ஆகவே அவர்களுடைய படைப்புகளில் சாதிய தீண்டாமைப் பிரச்சனைகள் போன்று வர்க்கப் பிரச்சனையும் இணைந்தே காணப்பட்டது. இவர்களுடைய சிறுகதைகள், நாவல்கள் எல்லாவற்றிலும் இவ்வடை யாளத்தை காணமுடியும். மற்றும் வர்க்க விடுதலையூடாகத் தான் சாதிய விடுதலை சாத்தியம் என்றும் இவர்கள் நம்பினார்கள். ஆகவே அன்று அவர்களுடைய படைப்புகளுக்கு தலித் அடையாளத்தை விட இடதுசாரிய அடையாளத்தையே படைப்பாளிகளும் விரும்பினார்களே தவிர முற்போக்கு மார்க்சியர்கள் தடுத்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் சாதியம் பற்றி எழுதியவை அனைத்தும் தலித் இலக்கியம் என்றே நான் கருதுகிறேன். ஆனால் அவை தலித் இலக்கியம் என்கின்ற பிரகடனத்தை அவர்கள் செய்யவில்லை என்பதுதான் உண்மை.*

***இலங்கையில் சமகால பெண்கள் இலக்கிய செயற்பாடுகள் பற்றி உங்கள் அவதானம் என்ன?***

*இலங்கையில் ஈழப்போராட்டம் ஆரம்பிக்கின்ற காலப்பகுதிகளில் முற்போக்கான பெண்ணிய சிந்தனைகளைக் கொண்ட பெண்கள் எழுத்துலகுக்கு வந்தார்கள். உதாராணமாக செல்வி, சிவரமணி போன்றவர்களை குறிப்பிடலாம். அவர்களின் இழப்பிற்கு பின்னர் யுத்தம் அகோரமானபோது எழுதுவதற்கும், பேசுவதற்கும், வாசிப்பதற்குமான சுதந்திரம் கூட ஆயுதங்களின் கண்காணிப்புக்குள்ளானது. அக்காலத்தில் பெண்கள் இலக்கிய அரசியல் துறைகளில் இருந்து மிகவும் பின் தள்ளப்பட்டார்கள் எனலாம். எனினும் மட்ஃசூரியா போன்ற அமைப்புகளும் எழுத்தாளர்களும் குறைந்தளவிலேனும் இயங்கிக் கொண்டுதான் இருந்தார்கள்.*

ஆனால் 2009ல் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் மீண்டும் படைப்புலகம் விரிவுபடத் தொடங்கியுள்ளது. இப்போது அதிகமாக வாசிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்பதை பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

யுத்தம் நேரடி தாக்கம் செலுத்தாத தென்னிலங்கை பகுதிகளில் இருக்கின்ற முஸ்லிம் மற்றும் மலையகப் பெண்கள் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக கவிதைக்கு அனார், உருத்திரா, நிலாந்தி, மின்ஹா, நசிஹா போன்றவர்களும் சிறுகதைகளுக்கு பிரமிளா, நாவலுக்கு வெற்றிச்செல்வி, தமிழ்கவி என்று படைப்புலகப் பெண்களின் பட்டியல் நீள்கின்றது. நான் அறியாத பெண்களும் நிறையவே இருப்பார்கள். எனினும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம் பெண்கள் பிரமாதமான கவிதைகளை எழுதுகிறார்கள், மொழியும் கவிதையின் அழகும் அருமை. அது அவர்களது வாசிப்பின் ஆழத்தை காட்டுகிறது எனலாம். ஆனால் ஏன் இப்பெண்கள் சிறுகதை, நாவல் என்று இன்னும் அகலக் கால் பதிக்க வில்லை என்பது எனக்கிருக்கிருக்கும் ஒரு கேள்வி.

மற்றும் பேத்தாழை நூலகம் சார்பில் நீங்கள் நடாத்தி வரும் "நிலா முற்றம்" நிகழ்ச்சியில் இளைய தலைமுறையினரின் ஆர்வத்தையும், பங்குபற்று தலையும் அவதானிக்க முடிகிறது. இந்நிகழ்வு அவர்களுக்கான பெரும் ஊக்கத்தை வழங்குகிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவர்கள் நாளைய பெரும் எழுத்தாளர்கள் ஆவார்கள் என நம்புகிறேன்.


பல்வேறு நாடுகளின் கலாச்சாரம் மற்றும் மக்களின் அடித்தள வாழ்வை ஒரு புத்தகம் புரிய வைத்துவிடுகிறது



▲ ஆண்ட்ரு லாங்

www.vikatan.com facebook.com/vikatanweb/ twitter.com/vikatan



கவிதை

# மனிதம் என்ற மகத்துவம்


அம்றிதா ஜெயரஞ்சித்
பேத்தாழை விபுலானந்தா கல்லூரி (தேசியப் பாடசாலை)


**ம**ண் மணம் மாறாத் தமிழில்
புன்னகை பூத்திடும் இதழில்
அன்பால் மட்டுமே மலரும்
அழிவில்லா அழகே மனிதம்!

இடர் வரும் வேளையதில்
கேடயமாய் மாறி இங்கே
காவல் தனை புரியவும்
காத்திருக்குது இந்த புனிதம்!

மதங்கள் மதில்களான போதும் ,
இனங்கள் இன்னலான போதும் ,
மொழிகள் மௌனமான போதும் ,
மாறவில்லை இதன் வதனம்!!

செத்தும் கொடுத்தான் சீதக்காதி
இடரான காலத்திலும் தினம்
மனிதம் காக்க மண்ணில் சாயுது
கடவுளாய் நம்மில் பாதி!!!


ஆறறிவு மனிதனின் ஏழாம்
அறிவாய்
அட்டை போல் ஒட்டிக்கொண்டது
மனிதம்!
கோடியில் பிடித்திடவே இங்கு
கொடி தூக்குது சில வணிகம்!!
காலத்தில் கரையும் கண்ணீரது
காற்றோடு கலந்தாலும் - இன்றும்
நம்பிக்கைகளை மட்டும் நம்பியே
உயிர்ப்புடன் உலவுது இந்த
மனிதம்!!

கொன்றொழித்த கொரோணாவும்
மகத்துவம் அறிந்திடுமோ?
தெரியவில்லை
ஓய்வெடுக்கும் காலம் அதை
விரைந்தே
ஒரு நாள் மனிதத்தால்
உணரட்டும்!!

மகத்தான மனித இனம்
மண்ணில் நிலைபெற - இங்கு
யுகங்களை கடந்தும்
மனிதம் வாழட்டும்!!!

உயிருள்ள வரைக்கும்
மாண்ட பின்பும்
மனிதத்துடன்
நான்!

# நூலக வாசகர்களை இளம் விமர்சகர்களாக அடையாளப்படுத்தும் பேத்தாழை பொது நூலகம்




மேமன்கவி

இன்றைய யுகத்தில் வாசிப்பு அல்லது கலாசாரம் என்பது பல்வேறு பரிமாணங்களை கண்டிருக்கிறது. அச்சுப் பிரதிகள் தம் வடிவங்களை மாற்றி (எண்ணிமப்படுத்தி) கொண்ட பொழுது அப்பிரதிகள் சென்றடையும் பரப்பு விரிவாகியது. அடுத்து நூலகம் என்பது குறிப்பிட்ட ஓர் இடத்தில் இருத்தல் என்பது இல்லாமல் மெய்நிகர் நூலகம் (Virtual library) வெளிக்கு நகர்ந்தது.

இன்று உலக அளவினான நூலகங்கள் பெரும்பாலானவை அந்த மாற்றத்தை உள்வாங்கி கொண்டதன் மூலம், அந்த நூலகங்கள் கொண்டிருந்த ஆவணங்கள் பற்றிய தகவல்கள் பரலாகின, அந்த மாற்றங்களுக்கு பிறகு இலங்கையில் அமைந்துள்ள பிரதான நூலகங்கள் அம்முறைகளை பயன்படுத்தி தமக்கான ஆவணங்களை, பரவலாக்கின. இக்கால கட்டத்தில் இலங்கையில் பல பிரதேச மட்டத்தில் பல நூலகங்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறாக தோற்றம் பெற்ற நூலகங்களில் ஒன்றுதான் பேத்தாழை பொது நூலகம் ஆகும்.

பேத்தாழை பொது நூலகத்தை எனக்கு அறிமுகப்படுத்தியது எனது நண்பரும் இந்த நாட்டின் முக்கிய படைப்பாளியான நந்தினி சேவியர் அவர்கள். அவர் அறிமுகப்படுத்திய பொழுதுதான் பேத்தாழை பொது நூலகம் போன்ற பிரதேச மட்டத்தில் இயங்கும் பல பொது நூலகங்களை பற்றி அறியக் கூடியதாக இருந்தது. அந்த நூலகங்களோடு புதிய தலைமுறைச் சார்ந்தவர்கள் இயங்கி கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த நூலகங்கள் வழியாக நல்ல பல வாசகர்களை உருவாக்கிக் கொண்டிருப்பதை காணக் கூடியதாக இருந்தது.

பேத்தாழை பொது நூலகம் அந்த வரிசையில் சிறப்பாக இயங்கி கொண்டிருப்பதை அதனுடனான தொடர்பின் வழியாக அறிந்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. சமீபகாலமாக பேத்தாழை பொது நூலகம் தம்வசம் வைத்திருக்கும் ஆவணங்களையும், ஆவணங்களை பற்றிய தகவல்களையும் எண்ணிமப்படுத்தி வருகிறது.

பேத்தாழை பொதுநூலகத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றுதான் ஒவ்வொரு பௌணர்மி தோறும் நிலாமுற்றம் எனும் நிகழ்வினை ஏற்பாடு செய்து இரண்டு மூன்று படைப்பாளிகளை பற்றியும், அவர்தம் படைப்புகளை பற்றியும் இளம் வாசகர்களை கொண்டு பேச வைப்பது.

இந்த வரிசையில் இதுவரை எட்டு நிலா முற்றம் நிகழ்வுகளை நேரடியாகவும் ZOOM வழியாகவும் நடத்தி இருக்கிறது. அதன் மூலம் பல படைப்பாளிகளையும் அவர்தம் படைப்புகளையும் பற்றி இளம் வாசகர்களை கொண்டு பேச வைத்து, அந்த இளம் வாசகர்களை இளம் விமர்சகர்களாகவும் அடையாளப்படுத்தி வருவதுதான் பேத்தாழை நூலகத்தின் சிறப்பம்சங்களில் முக்கியமான ஓர் அம்சமாகும்.

இறுதியாக ஒரு ஆலோசனை- இவ்வளவு சிறப்பாக பணியாற்றி கொண்டு, எல்லோரினது அறிதலுக்கு வளர்ந்திருக்கும் பேத்தாழை பொதுநூலகம் தனக்கென ஒரு செய்தி மடல் ஒன்றினை வெளியிட வேண்டும். அந்த செய்தி மடல் அதன் செயற்பாடுகளை தெரிவிக்கும் ஓர் ஆவணமாக அமையும். எதிர்காலத்தில் மேற்குறித்த பணிகளில் பேத்தாழை பொது நூலகம் விரிவுபெற பத்தாண்டு நிறைவு நாளில் வாழ்த்துகிறேன்.



ரஸ்கினின் *கடையனுக்கும் கடைத்தேற்றம்* வாசித்தேன். அது என் வாழ்க்கைப் பாதையையே மாற்றியது. **மகாத்மா காந்தி**



ஹெகலின் *சமூகவியல் சித்தாந்தக் குறிப்புகள்* நூல் என் சிந்தையைத் தூண்டி பாதையமைத்தது. **கார்ல் மார்க்ஸ்**



எங்கெல்ஸின் *டூரிங்கிற்கு மறுப்பு* நூலால் நாத்திகன் ஆனேன். **சே**




மாக்சீம் கார்க்கியின் *தாய்* நாவல் என்னை சிறுவனாய் இருக்கும் போதே சமூகவியல் போராளி ஆக்கியது. **பிடல் காஸ்ட்ரோ**



யுக்லிடின் *எலிமண்ட்ஸ்* நூலை வாசித்து, அதன் மகத்துவம் அறிந்து கடுமையாய் உழைத்தேன். **ஆபிரஹாம் லிங்கன்**



ஹென்றி தோரோ எழுதிய *தனிமனித அறம்* நூல்தான் என் போராட்ட உத்திகளைத் தூண்டியது. **அம்பேத்கர்**



நியூட்டனின் *'பிரின்சிபியா'* வாசித்தேன் மீண்டும் பிறந்தேன். **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**



ஜி.எஸ்.கார் எழுதிய *எலிமெண்டரி ரிசல்ட்ஸ் இன் பியூர் மாத்ஸ்* புத்தகம் வாசித்தேன். அன்று முதல் கணக்கே வாழ்வானது. **ராமனுஜன்**

கட்டுரை




**வை**யகத்தில் அநேக மொழிகள் இருப்பினும் தமிழ் அன்னைக்கு சிறப்பிடமுண்டு. அச்சிறப்பை ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும் பாதுகாத்து அச்சிறப்பை உயர்த்த நாம் என்ன முயற்சி எடுத்துள்ளோம்? இது இன்று நம்மிடம் கேட்க வேண்டிய வினாவாகும். என்னை பெற்ற பெற்றோருக்கு என் வாழ்விலே ஏதேனும் உபகாரம் செய்ய வேண்டும். என் தாய் தந்தைக்கு என்னால் நல்ல மதிப்பு, பெருமை சேரவேண்டுமென ஒவ்வொரு பிள்ளையும் நினைப்பதுண்டு பெரும்பான்மை யானோர் நிறைவேற்றுகின்றோம். சிலர் நிறைவேற்ற தவறிவிட்டோம் அதே போல்தான் “என் தமிழ் தாய்க்கு என்னால் எவ்வகையான பெருமை சேர வேண்டும்” என ஒவ்வொரு தமிழரும் யோசிக்க வேண்டும்.

எம் தேசிய அடையாள அட்டையில் மாத்திரம் தமிழர் என்பதை வெளிக் காட்டுகிறோம். தமிழர் சக தமிழரை வாழ்த்துவதற்கு கூட தமிழ் வார்த்தைகளை உபயோகிப்பது இல்லை. மாறாக பிற மொழியிடம் கடன் வாங்குகிறோம். ஏன்? எம் மொழி அவ்வளவு ஏழையா? அது மட்டுமன்றி பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு ‘காலை வணக்கம்’ என தமிழில் தெரிவிக்க கூட வெட்கப்படுகிறோம். பிற மொழியில் சொன்னால் நாகரீகம் என்று எண்ணுகிற தன்மை எம்மிடம் உள்ளது. இது மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும்.

வீரியமான விஞ்ஞான வளர்ச்சியினால் விதவிதமான உபகரணங்கள் மனிதனின் வேலையை குறைக்க அவரின் நேரத்தை கூட்ட பெரும் உபகாரமாக இன்றைய உலகில் இருக்கும் என எண்ணினோம். அது இன்று நடைபெறுகிறதா? என்ற எனது வினா என் விழி ஊடாக விடை தேடுகிறது. காலவோட்டத்தில் இலக்கியம் படைக்கும் ஆக்கமும், வாசிக்கும் நாட்டமும் வாட்டம் கண்டுள்ளதை காணலாம். எம் தமிழ் தாய்க்கு தற்போது மலடி என்ற வசைச்சொல் உண்டாகக் காரணம். எம்மால் இலக்கியத்தை வாசிக்கவோ, யோசிக்கவோ நேரமில்லை என்பதே என சாதாரணமாக கூறி சாமர்த்தியமாக தப்பிக்கின்றோம்.

அவசரமான உலகில் எம் தாய்மீது கரிசனையை எடுத்து மந்த கதியிலுள்ள தமிழ் ஆக்கங்களை படைக்கும் ஆற்றலை ஊக்கப்படுத்த வேண்டும்.

***"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச***
***பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்***
***மெத்த வளரும் மேற்கே – அந்த***
***மேன்மைக் கலைகள் தமிழினிலில்லை***

***சொல்லவுங் கூடுவதில்லை – அதைச்***
***சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை***
***மெல்லத்தமிழினிச் சாகும்***
***மேற்கு மொழிகள் புவி மீது ஓங்கும்***
***என்றந்த பேதை உரைத்தான்"***

*என பாரதி 20 ஆம் நூற்றாண்டிலே அறிஞர்களை 'எட்டுத்திக்கும் சென்று கலைச் செல்வங்களை தமிழ் தாயின் பாதத் தண்டையில் சமர்ப்பியுங்கள் என கூறி' பிறரை மட்டும் இலக்கியத்தைப் படைக்க தூண்டுவதோடு நின்று விடாமல் தானும் பல தமிழ் இலக்கியங்களை படைத்து, தமிழர்களின் உள்ளங்களில் கிளர்ச்சியைக் கிளறினான். அவருடைய ஆக்கங்கள் அன்று மட்டும் அல்ல இன்றும் புரட்சிகர பாதைக்குள் புக வழி அமைக்கின்றன.*

*தமிழ் இலக்கியங்கள் பெரிதும் கற்பனைகளால் தான் விற்பனையாகிறது என்ற புரியாத கருத்துக்கள் நம்மில் சிலரிடையே புதைந்துள்ளன. உண்மை அவ்வாறு இல்லை இலக்கியமானது காலத்தைக் காட்டும் கண்ணாடி போன்றதாகும். அது எழுதப்பட்டும் காலப் பின்னணியிலுள்ள சமூகப் பிரச்சினைகள், அதை தீர்க்கும் வழிகள் என்பனவற்றை கூறுவதோடு அப்பிரச்சனையை தீர்க்க மக்களிடையே உத்வேகத்தை வழங்குகிறது. அது மட்டுமன்றி நல்ல கருத்துக்கள், சமூக விழுமியங்கள், பண்பாட்டு நெறிகள் போன்றவைகளும் இலக்கியங்களுள் பொதிந்துள்ளன. அது எழுந்த காலப்பகுதியில் மட்டுமல்ல சமூக இருப்பு முடியும் வரை பயன்படும். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு திருக்குறள் ஆகும். இவையெல்லாம் சாத்தியப்பட அவைகள் வாசிக்கப்பட வேண்டும். அப்போது தான் ஆழ்மனதில் ஆணி வேர் போல் உறுதியாகி அவை எமது செயல்களில் பிரதிபலிக்கும்.*

*ஆரம்ப காலங்களில் பெண்கள் தனது கருத்துக்களை தமது வலிகளை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெரியாமல் இருந்தனர் ஆனால் ஈழத்தில் தி.த.சரவணமுத்துப்பிள்ளையும், தமிழகத்தில் பாரதியும் இலக்கியமூடாக ஊட்டிய உற்சாகத்தால், சம காலங்களில் பெண்களின் எழுத்துக்களால் சகலரும் பெண்களின் வலியை இலக்கிய வழியால்*

உணர்ந்துள்ளனர் என்பது உண்மை அவர்களுள் சுகிர்தராணி (படைப்பு: இரவு மிருகம்), உமாமகேஸ்வரி (படைப்பு: மரப்பாச்சி) போன்ற கவிஞர்களும் ஆணாதிக்க சமூகம் புனைந்துள்ள கட்டுப்பாடுகள் அனைத்தையும் தூக்கி எறியும் "பொன்னுத்தாயி" என்ற கதை எழுத்தாளர் பாமா போன்றோர் நான் எடுத்துக்காட்டிய சிலரே ஆவர். அதுமட்டுமன்றி சாதிப்பிரச்சினை, திருநங்கையரின் தவிர்ப்பு, அரசியல் குழப்பங்கள் மற்றும் நம் நாட்டின் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் உட்பட இன்னும் பல இன்றைய இலக்கிய உலகின் பேசு பொருளாக மாறியுள்ளன.

எனவே இவ்வாறான தமிழ் இலக்கிய நூல்கள் நூலகங்களுக்குள்ளே தூசிப் போர்வையால் மூடி புத்தகத்தட்டு கட்டிலிலே தூங்கும் எம் தமிழ் இலக்கிய நூல்களை எப்போது தட்டியெழுப்ப போகிறோம்? கறையான்களுக்கு இரையாகும் உணவாக அவைகளுக்கு எம் இலக்கியங்களை விருந்தளிக்க போகிறோமா? அல்லது இஞ்சி அளவுள்ள இலக்கிய வாசிப்பை இமய அளவாக மாற்றப் போகிறோமா? எம் தமிழ் தாயையே தவிர்க்கப் போகிறோமா? அல்லது நம் தமிழ் தாயின் தவிப்பை தவிர்க்க போகிறோமா? யோசிப்போம்.

**துடிக்கும் பருவத்தில்**
**படிக்கும் இலக்கியத்தால்**
**வெடிக்கும் எண்ணங்களில் - நாளை**
**உதிக்கும் எதிர்காலத்தில் - இனி**
**விழிக்கும் தமிழினமே...**


உன்
நூலகத்துக்குள்
நுழைந்து
ஒவ்வொரு
புத்தகத்தையும்
கையிலெடுத்து
வாசிக்க
அஞ்சாதே !


▲ ட்விஸட்
டி.ஐசனோவர்

www.vikatan.com facebook.com/vikatanweb/ twitter.com/vikatan



சிறுகதை

# கொலசிப்பும் சித்திராவும்

எச்.மெத்தியேஸ்

வெள்ளிக்கிழமை காலை ஐந்தரை மணி. சித்திரா முழுகி, நீண்ட முடிக்கு சிறிய துவாய் ஒன்றைக்கட்டி கொண்டை போட்டு இருந்தாள். சாமி படங்களுக்கு பூ வைத்து சாம்பிராணி காட்டினாள். வீடு முழுவதும் தெய்வீக மணம்.

கணவன் ரமேஷ் குளித்துக் கொண்டிருந்தான். சித்திரா தூங்கிக் கொண்டிருந்த மகனை:
“தம்பி எழுந்திருடா! ஸ்கூலுக்கு போக நேரம் ஆகுது. ஆட்டோக்காரன் வந்து கத்துவான்” என்று தட்டி எழுப்பினாள் சித்திரா.

“எனக்கு ஏலாதம்மா. தலை வலிக்குது” என்று புரண்டு படுத்துக் கொண்டான். தலையைத் தொட்டுப்பார்த்த தாய்,

“பாருங்க தம்பிக்கு காச்சல் காயிது”

“இரண்டு மூன்று நாட்களாக நானும் பார்க்கிறன். சோர்ந்து போய்த்தான் இருக்கிறான். பின்னேரம் டொக்டர் கௌசலாவிடம் ‘வுக்’ பண்ணிவிட்டு கொண்டு காட்டுவம்” என்றான் ரமேஸ்.

மகன் கமலேஸ் சரியான ஒல்லி. சுறுசுறுப்பு! கெட்டிக்காரன்.

“சித்திரா, அவன் கொஞ்சநேரம் தூங்கட்டும். அதற்குப் பிறகு சாப்பாட்டைக் கொடு. எழுப்பிவிட்டு படி படி என்று தொல்லை கொடுக்காத” என்று சொல்லிய ரமேஸ் வேலைக்கு கிளம்பி விட்டான்.

ரமேஸ் ஒரு தனியார் வங்கியில் வேலை செய்பவன். கமலேஸ் இம்முறை கொலசிப் எழுதுகிறவன். எந்நேரம் பார்த்தாலும் தாய் அவனை படி படி என்று நச்சரித்துக் கொண்டே இருப்பாள். கொஞ்ச நேரம் பக்கத்து வீட்டு பிள்ளைகள் கூட விளையாட விட மாட்டாள். ரீ.வி.யில் ஒரு கார்ட்டூன் கூட பார்க்க விட மாட்டாள். சொந்தக்காரர் வீட்டுக்குக் கூட கூட்டிக் கொண்டு போகமாட்டாள். கேட்டால், “கொலசிப் முடியட்டுமே” என்று சொல்வாள்.

*ஸ்கூட்டியை எடுத்தால் ரியூசன் ரியூசன் என்று காற்றாய் பறப்பாள். ரமேசுக்கு இதில் உடன்பாடு இல்லை. கேட்டால் "அக்காட பிள்ளை 195 மாக்ஸ் வாங்கி இருக்கிறாள்" என்பாள்.*

*"சித்திரா மற்றப் பிள்ளைகளுடன் நம்பிள்ளையை ஒப்பிடாத. அவன் படிப்பான்" என்று சொல்லிவிட்டு, "ஏன்தான், இந்த ஸ்கூட்டியை வாங்கிக் கொடுத்தேனோ" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.*

*இப்பொழுது தாய்மாருக்கு இந்த புலமைப்பரிசில் பரீட்சை தன்மானப் பிரச்சினை ஆகிவிட்டது. அப்படி ஒரு வெறித்தனம். பிள்ளை ஒன்று இரண்டு மார்க்சால் பெயிலாகி விட்டால் போதும் 'கழுதை கழுதை உன்னைப் போலத்தானே மற்றப்பிள்ளைகளும் படித்து பாஸ் பண்ணி இருக்குதுகள்" என்று ஒவ்வொரு நாளும் சொல்லிச் சொல்லியே அவர்களது வாயும் தேய்ந்துவிடும்.*

*கேட்டால் "உங்களுக்கு என்ன தெரியும். நான் ஓடிய ஓட்டம்" என்று சொல்வார்கள். தகப்பன்மார்களுக்கு என்னதான் வெளியில் காட்டா விட்டாலும் உள்ளுக்குள் ஒரு படக் படக் இருக்கத்தான் செய்யும்.*

*ரமேஸ், சித்திரா இருவரும் ஒரு தனியார் வங்கியில் வேலை செய்யும் போதே காதலித்து, பெற்றோர்களின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டவர்கள். சித்திரா குடும்பம் நல்ல வசதி படைத்தவர்கள். சில வருடங்களின் பின் தான் கமலேஸ் பிறந்தான். அதன்பின் சித்திரா வேலைக்குச் செல்வதை விட்டு விட்டாள்.*

*கமலேஸ் நல்ல கெட்டிக்காரன். இதில் சித்திராவின் பங்கே மிக அதிகம். நாலாம் ஆண்டில் புலமைப்பரிசில் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. சித்திராவின் கனவும் ஆரம்பமாகி விட்டது. கமலேசின் படிப்பில் அதிக கவனம் எடுத்துக் கொண்டாள். எந்தத் தாய்க்கும் ஏற்படக்கூடிய இயல்பு தான் அது. ஸ்கூட்டி வாங்கிய பிறகு சித்திராவின் வேகம் எண்பதைத் தாண்டியது. ரியூசன், செமினார் என்று ஓடினாள். அவள் மட்டும் ஓடவில்லை. அவளுடன் இந்தப் போட்டியில் பலர்!*

*"குட் ஈவினிங் டொக்டர்" ரமேஸ்.*

*"குட் ஈவினிங்" டொக்டர் கௌசி.*

*குடும்பத்தில் என்ன வருத்தம் என்றாலும் டொக்டர் கௌசியிடந்தான் வருவார்கள். இதனால் நல்ல அறிமுகம்.*

*"மேடம் தம்பிக்கு சுகம் இல்லை. சோர்வாகவே இருக்கான். தலையும் வலிக்குதாம்" என்றான் ரமேஸ்.*

“மகன், இப்ப என்ன கிளாஸ் படிக்கிறார்” என்ற டொக்டரிடம், முந்திக்கொண்டு

“இந்த முறை கொலசிப் எழுதுறான் டொக்டர்” என்றாள் சித்திரா.

“ஓ......” சொல்லி விட்டு உடம்பை செக் பண்ணிய டொக்டர்.

தாயையும், தகப்பனையும் பிள்ளையையும் மாறி மாறி பார்த்து விட்டு,

“அம்மா அப்பா ரெண்டு பேரும் கொஞ்சம் வெளியில வெயிட் பண்ணுங்க” என்றாள்.

தாயும் தகப்பனும் வெளியில் சென்று விட்டார்கள்.

“கமலேஸ், பரீட்சையில் என்ன மார்க்ஸ் எடுப்பீங்க”

“எல்லாப் பாடங்களிலும் தொண்ணூறுக்கு மேல்தான் எடுப்பன்”

“அம்மாவா, அப்பாவா பாடம் சொல்லித்தாற?”

“அம்மா”

“அடிப்பாங்களா அம்மா?”

“இல்லை. பேசுவாங்க. விளையாட் விட மாட்டாங்க. பெரியம்மா, அம்மம்மா வீட்ட போக விட மாட்டாங்க”

“ ரமேஸ் வாங்க!”

“சித்திரா கமலேஸ் நல்ல கெட்டிக்காரன் என்று சொல்கிறாரே!”

“ஓம் டொக்டர்! வகுப்பில முதலாம் ஆள்” என்றாள் சித்திரா.

“பிள்ளைக்கு கொஞ்சம் ஓய்வு தேவை. பிள்ளைகளுடன் விளையாட விடுங்கள். கொஞ்ச நேரமாவது நல்ல கார்டூன்களை பார்க்க விடுங்கள். சொந்தக்காரர் வீட்டுக்கு அழைத்துப் போங்கள். அவர் பாஸ் பண்ணுவார். மாலை நேரத்தில் சில்றன் பார்க்கிற்கு கூட்டிப் போங்கள் சித்திரா. ரமேஸ் நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்”

குளிசைக்கும் சிரப்புக்கும் எழுதிக் கொடுத்தார் டொக்டர்.

வெளியே வந்த சித்திரா ரமேஸைப்பார்த்து,

“இவன் டொக்டரிடம் என்ன சொன்னானோ தெரியாது. இல்லாட்டிக்கு டொக்டர் இப்படி சொல்லியிருக்க மாட்டாவு” என்றாள்.

அவளை வெறித்துப் பார்த்து, ஒன்றும் பேச வேண்டாம் என்று சைகை காட்டினான் ரமேஸ்.

டொக்டரிடம் போய் வந்த பிறகு. அம்மாவின் கெடுபிடி குறைந்தது. கமலேசுக்கு நல்ல ஓய்வு. விளையாட்டு, சுறுசுறுப்பு. பாடங்களை அவனே எடுத்துப் படிப்பான். சித்திரா முன்பு போல நெருக்குதல் கொடுப்பதில்லை. அவன்ட பாட்டுக்கு விட்டு விட்டாள்.

ஒருநாள் கமலேசுக்கு காய்ச்சல். டொக்டரிடம் காட்டிய போது, டெங்கு அறிகுறி, பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும்படி கடிதமும் கொடுத்து விட்டார். ரமேசும் சித்திராவும் துடிதுடித்துப் போனார்கள். குடும்பமே கலங்கி விட்டது. ஆரம்பத்திலே கண்டு கொண்டதால் கமலேஸ் சுகமாகி விட்டான்.

அடுத்த நாளே, சுகாதார டெங்குப் பிரிவினர் வீடு, வளவு எல்லாம் சல்லடை போட்டு டெங்கு உண்டாகும் இடங்களையெல்லாம் கணவனையும், மனைவியையும் அழைத்துக் காட்டினார்கள். டெங்கு நுளம்பையும் எடுத்துக் காட்டினார்கள்.

"ஏனையா, நம்ம வீடு வாசல்தானே, துப்பரவாக வைத்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு. பூச்செடிகள், கொடிகளையெல்லாம் வெட்டிப் போடுங்கள். திரும்பி மூன்று நாட்களுக்குப் பின் வருவோம்" என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

"சித்திரா, நல்ல காலம் வழக்குப் போடாமல் விட்டது. எல்லாம் உங்களால் தான் " என்றான் ரமேஸ்.

"நான் என்ன செய்தனான்"

"சித்திரா நீங்கதான் கொலசீப் கொலசீப் என்று ஓடித்திரிஞ்ச நீங்க. அவர் கணபதிப்பிள்ளைக்கு ஒரு ஆயிரம் ரூபாவைக் கொடுத்திருந்தால் செய்து முடிச்சிருப்பார் பார். இப்போ நமக்குத் தானே பிரச்சினை. நாம் தேடிக் கொண்ட வினை"

"ஏன் நீங்கள் கூட ஞாயிற்றுக்கிழமைகளில் செய்து இருக்கலாம் தானே"

"விடு விடு" என்று முடித்துக் கொண்டான் ரமேஸ்.

**கொ**லசிப் பரீட்சை முடிந்து, மாணவர்கள் எல்லோரும் 'சுமை ஒன்று குறைந்தது' என்ற நிம்மதியுடன் வெளியே ஓடிவந்தனர்.

ஸ்கூட்டியில் நின்று கொண்டிருந்த சித்திராவை பார்த்த கமலேஸ் "அம்மா, எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதி விட்டேன் அம்மா. கட்டாயம் பாஸ் பண்ணிடுவன்" என்றான்.

அவன் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளிய சித்திரா "காளியம்மாளே, என்ட மகன் கட்டாயம் பாஸ் பண்ணுவான்" என்று நினைத்துக் கொண்டாள்.

கவிதை



# கொக்கரிக்கும் கொரோனாவை கூண்டோடொழிக்க செய்வோமே!

முருகவேள் அஷாலினி (விபுலானந்தர் வாசகர் வட்டம்)

**கொ**க்கரிக்கும் கொரோனாவை கூண்டோடொழிக்க செய்வோமே
சுயதனிமை பேணியுமே சமூக நலம் காப்போமே
ஆணவம் தான் கொள்ளாது ஒன்றுபட்டு வெல்வோமே
அன்பு சங்கிலியால் பிணைப்புற்று பின் தள்ளி விடுவோமே

மூச்சு முட்டுகின்றதென முகக்கவசம் அணிய தவறாதீர்
முற்றிலும் பாதுகாப்பு அதுவென என்றுமே மறவாதீர்
சமூக இடைவெளி பேணி சங்கடம் தவிரத்திடுவீர்
சவர்க்காரம் பாவித்தே சதாகாலம் கைகளையும் கழுவிடுவீர்

மகத்தான மானுடர் நாம் உன்னையும் கடப்போமே
அடங்காத கொரோனாவே அடங்கிதான் போனோமே
விஞ்ஞான வளர்ச்சியில் விரும்பத்தகா விருந்தினரே
விரட்டிடுவோம் என்றும் மனிதகுல எதிரி உனையே

அன்புடனே பணிவோமே அவசிய அறிவுறுத்தல்களை
அடித்து விரட்டுவோம் அடங்காத கொரோனாவை
முடிவெடுப்போம் முற்றிலும் அதை முடித்து வைக்க
விரட்டிவிட்டால் விருப்புடனே வாழலாம் நாம் தானே




***கோ**றளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்ற பேத்தாழை பொது நூலகம் திறந்து வைக்கப்பட்டு, 10ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடுகின்ற இவ்வேளையில் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட சிறப்பான நிகழ்வு குறித்த சிறிய பதிவினை எழுத விழைகின்றேன்.*

*கடந்த மார்ச் மாதம்-28ஆம் திகதி, பௌர்ணமி தினம் பேத்தாழை பொது நூலகத்தின் முன்றலில், மாலை நேரத்தில் நிலவு வெளிச்சத்தில் ஒரு இலக்கியச் சங்கமம் நிகழ்ந்தது. பிரதேசத்திலுள்ள இலக்கிய வாசகர்கள், மற்றும் பொது நூலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் அங்கே குழுமியிருந்தனர். நிகழ்வு ஆரம்பித்து, 10 நிமிடங்கள் கழித்துக் கூட இரு இஸ்லாமிய சகோதரர்கள் அவசர அவசரமாக வந்து நிகழ்வில் சங்கமிக்கின்றனர். 'முகநூலில் பார்த்தோம், கடையை பூட்டிக் கொண்டு வர நேரமாகிவிட்டது" என்றார் ஒருவர். ஓட்டமாவடியிலும் ஒரு சந்திப்பு இருந்தது. அதை முடித்துக் கொண்டு வரத் தாமதமாகி விட்டது" என்றார் இன்னொருவர்.*

*அப்படி என்ன நிகழ்வு அது? என யோசிக்கின்றீர்களா! ஆம், புதுமைகள் படைத்துவரும் எம் பேத்தாழை பொதுநூலகத்தின் புதியதொரு பரிமாணம் அது. கொரோனா உலகம் முழுவதும் ஆட்டுவித்துக் கொண்டிருக்கையிலும் தக்க பாதுகாப்பு நடைமுறைகளுடன் இந்தக் கூடலை ஏற்பாடு செய்திருந்தார் நூலகப் பொறுப்பாளர் மரகதம் பிரகாஸ் அவர்கள்.*

*ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் என அனைவரையும் இணைக்கும் சக்தி! இலக்கியத்தினைத் தவிர வேறு எதற்கு இங்கே இருக்க முடியும். அது தான் இந்தக் கூடலைச் சாத்தியப்படுத்தியது. பேத்தாழை பொது நூலகத்தின் வாசகர் வட்ட உறுப்பினரும், எழுத்தாளருமான ஜிஃப்ரி ஹசன் மற்றும் பேத்தாழை பொது நூலகப் பொறுப்பாளர் ம. பிரகாஸ்*




இருவரும் இணைந்து இந்த இலக்கியக் கூடல் நிகழ்வினை பரீட்சார்த்தமாக அன்று ஆரம்பித்து வைத்தனர்.

'நிலா முற்றம்' என்கின்ற பெயரில் ஏற்கனவே பல நிகழ்வுகள் பல இடங்களில் நடத்தப்பட்டு வந்தாலும், இது புதியது ஏனெனில், உண்மையிலேயே 'நிலா முற்ற'த்திலேயே நிகழ்கின்ற இலக்கிய நிகழ்வு இது. இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பின் எழுத்து ஆளுமைகள் பற்றியும் அவர்தம் படைப்புக்கள் பற்றியும் பிரதேசத்தின் இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள், வாசகர்கள் என முத்தரப்பினரும் ஒன்றிணைந்து உரையாடுகின்ற ஆரோக்கியமான நிகழ்வாக இது அமைந்தது.

அந்த வகையில் முதலாவது நிலா முற்றத்தில் அமரர்களான, டொமினிக் ஜீவா, மற்றும் அமரர்.திருமதி.பத்மா சோமகாந்தன் ஆகிய இருவரைப் பற்றியும் அவர் தம் படைப்புக்கள் பற்றியும் பேசுகின்ற நிகழ்வாக இது அமைந்தது. அத்தோடு டொமினிக் ஜீவா தொடர்பான வீடியோ காட்சிகளும் அங்கே ஒளிபரப்பப் பட்டது. திரு.எ.த.ஜெயரஞ்சித், திருமதி. ஸோபா ஜெயரஞ்சித், திருமதி. விஜிதா முருகவேள் போன்றோர் தம் மாணாக்கர் சகிதம் இந்நிகழ்வில் கலந்துரையாடினர்.




பொது நூலக வரலாற்றில் புதியதொரு அத்தியாயம் மார்ச்-28இல் அரங்கேறியது என்றே கூறலாம். தொடர்ந்து ஒவ்வொரு பௌர்ணமியிலும் தொடர்ச்சியாக நிலா முற்றத்தில் கூடுவது என்ற முடிவும், அடுத்த கூடலில் எழுத்தாளர். அமரர்.எஸ்.பொ. பற்றியும் அவர் படைப்புக்கள் பற்றியும் பேசுவதோடு, எழுத்தாளர் நோயல் நடேசனின் 'அந்தரங்கம்' சிறுகதைத் தொகுப்பு மீதான வாசிப்பு குறித்த பகிர்வும் இடம்பெறும் என தீர்மானிக்கப் பட்டது.

நூலகப் பொறுப்பாளர் மரகதம் பிரகாஸ், இதற்காகவென்றே வாட்ஸ்அப் குழு ஒன்றினை உருவாக்கினார். இதில் ஒவ்வொரு பௌர்ணமிக்கு சில தினங்களுக்கு முன்னரே, இம்முறை பௌர்ணமி நிலா முற்றத்தில் யார்




யாரைப் பற்றிப் பேசுவது என்கின்ற ஆலோசனைகளும், கருத்துக்களும் முன்வைக்கப்படும் அதில் இறுதி முடிவு எடுக்கப்படும், படைப்பாளி பற்றி யார் பேசுவது? படைப்புக்கள் பற்றி யார் பேசுவது? என இங்கே தீர்மானிக்கப்பட்டதன் பின்னர், முடிவு நூலகத்தின் முகநூல் வழியாக அறிவிக்கப்படும்.

இவ்வாறு ஆரம்பித்த நிலா முற்றம், இடையில் கொரோனா அபாயச் சூழல் அதிகரித்தமை காரணமாக நேரடியாக நடத்த முடியாமல் போனது. அதன் போது தற்கால நவீன தொழினுட்பம் இதற்கான மாற்று வழியினை ஏற்படுத்தி தந்தது. ஆம், பயணத்தடை, முழு முடக்க காலப்பகுதிகளில் மிகவும் பிரபலமாக ஆரம்பித்த Zoom செயலி மூலம் நிலா முற்றத்தினை தொடர்ந்து நடத்த முடிவெடுக்கப் பட்டது. இதன்படி மூன்றாவது நிலா முற்றம் இணையத்தில் கூடியது.

இதன் வழியாய், பிரதேச அளவில் அறியப்பட்ட பேத்தாழை பொது நூலகத்தின் 'நிலா முற்றம்' முழு இலங்கை அளவில் தென்பட ஆரம்பித்தது! முழுநிலா இலக்கிய வடிவெடுத்து இலத்திரனியல் வழியே வெளிவர ஆரம்பித்தது. கொழும்பிலிருந்து கவிஞர் மேமன்கவி போன்றோர், தொடர்ச்சியாக நிலா முற்றத்தில் இணைந்து கொள்ளும் வகையில் நிகழ்வு வளர்ச்சியடைந்தது.

03 நிலாமுற்ற நிகழ்வுகள் நடைபெற்ற பின்னர், கவிஞர் மேமன்கவியின் ஆலோசனை யின் பேரில், நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து பதிவு ஒன்று எழுதப்பட்டு, அது தினகரன் பத்திரிகையில் வெளியானது. தேசிய அளவில் எமது பொது நூலகத்தின் நிகழ்ச்சிக்கு பெரியதொரு அங்கீகாரம் கிடைத்தது.


பேத்தாழை பொது நூலகத்தின் இலக்கியச் சங்கமம்

'நிலா முற்றம்'; பௌர்ணமி தோறும் ஒன்றுகூடும் இலக்கிய நெஞ்சங்கள்

எனவே, இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி பிரதேச மட்டத்தில் இருக்கின்ற எமது படைப்பாளிகளை உலக அரங்கிற்கு கொண்டு வருகின்ற அற்புத தருணமும் எமக்கு வாய்த்தது. அவ்வகையில், நான்காவது நிலா முற்றத்தில் பேத்தாழையின் பேர் சொல்லும் மூத்த படைப்பாளியான தாழை செல்வநாயகம் மற்றும், புகழ் பெற்ற இலங்கைப் படைப்பாளியான நந்தினி சேவியர் ஆகிய இருவரைப் பற்றியும் அவரது படைப்புக்கள் பற்றியும் நான்காவது நிலா முற்றத்தில் கலந்துரையாடப் பட்டது. இதில் சிறப்பு என்னவெனில் எழுத்தாளர் ஜிஃப்ரிஹாசன் மூலம், எழுத்தாளர் நந்தினி சேவியரும் இந்நிகழ்வில் இணைந்து எம்மவர்களுடன் உரையாடினார். உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த எழுத்தாளர் தாழை செல்வநாயகம் அவர்களும் இந்நிகழ்வினை நேரடியாக பார்வையிட்டார்.




இப்படி வளர்ந்த நிலாமுற்றத்தில் கூடவே இன்னுமொரு விடயமும் சேர்ந்து வளர்ந்தது! ஆம், பிரதேசத்தினைச் சேர்ந்த இளைய தலைமுறை இலக்கிய ஆர்வலர்களும் படைப்பாளிகளும் மூத்த படைப்பாளிகளைப் பற்றிப் பேசுகின்ற பேச்சாளர்களாகவும், மூத்த படைப்பாளிகளின் படைப்புக்கள் பற்றி நயக்கின்ற விமர்சகர்களாகவும் வெளிப்பட ஆரம்பித்தனர். ஆசிரியரும், இலக்கியச் செயற்பாட்டாளருமான எ.த.ஜெயரஞ்சித், மற்றும் திருமதி. விஜிதா முருகவேள், எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாசன் மூவரும் தத்தம் நெருங்கிய இளைய தலைமுறை, மூத்த தலைமுறை ஆர்வலர்களை நிலா முற்றத்தில் சங்கமிக்கச் செய்து அவர்கள் திறமையினையும் வெளியுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தனர்.




ஐந்தாவது நிலா முற்றம் 23-07-2021இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் எழுத்தாளர் வாகரை வாணன் படைப்புலகு, எழுத்தாளர் மஜீத் அவர்களது கவிதையும் வாழ்வும் போன்ற தலைப்புக்களில் கூடல் அரங்கேறியது. இம்முறை ஒரு தமிழ்ப் படைப்பாளி, ஒரு இஸ்லாமிய படைப்பாளி என இருவர் பற்றியும், அவர்தம் படைப்புக்கள் பற்றியும் பேசப்பட்டன.




*6ஆவது நிலா முற்றத்தில் அமரர். முருகேசு தவராஜா அவர்களது நினைவு தினம், அடுத்த மாதம் வரவுள்ளதனால் அவரைப் பற்றியும் அவரது 'மறுபக்கம்' சிறுகதைத் தொகுப்பு மீதான வாசிப்புப் பகிர்வும் அத்துடன் எழுத்தாளர் திமிலைத்துமிலன் எழுத்தும் பங்களிப்பும் மற்றும் திமிலைத்துமிலன் கவிதைகள் பற்றிய ஆய்வுக் கண்ணோட்டமும் இணைய வழி அரங்கேறியது.*

*ஏழாவது நிலா முற்றம் - 20-09-2021 அன்று நடைபெற்றது. இம்முறை பிரதேசத்தின் மூத்த இரு படைப்பாளி களான பெ.புண்ணியமூர்த்தி மற்றும், ஹெட்டி ஆராச்சி மெத்தியேஸ் இருவர் பற்றியும் அவர்களது படைப்புக்கள் பற்றியும் பேசப்பட்டது. நமது பிரதேசத்திலும் இத்தகைய படைப்பு ஆளுமைகள் உள்ளனரா? என இளைய தலைமுறையினர் வியந்து பேசுகின்ற நிலையினை நிலா முற்ற நிகழ்வு ஏற்படுத்தியது. இன்றைய இளம் தலைமுறை வாசகர்கள் நம்மைப் பற்றியும், நமது படைப்புக்கள் பற்றியும் பேசுகின்றனரே என மூத்த படைப்பாளிகள் பெருமிதம் கொள்கின்ற தொரு நிலை எம் மண்ணில் இன்று உருவாவதற்கு பேத்தாழை பொது நூலகத்தின் நிலா முற்ற நிகழ்வு காரணமாய் அமைந்துள்ளது.*




*எட்டாவது நிலா முற்றம் - அண்மையில் மறைந்த புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளியான ஜுனைதா ஷெரீப் மற்றும் எமது பிரதேசத்து படைப்பாளியான கறுவாக்கேணி முத்துமாதவன் இருவரது படைப்பாளுமை மற்றும் படைப்புக்கள் பற்றிப் பேசியது.*

இந்நிகழ்விலும் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து இலக்கிய ஆர்வலர்களும் இணைந்து கொண்டு, குறித்த ஆளுமைகள் பற்றிய தம் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வு பெறுகின்ற அடைவில் இதுவும் ஒன்றாக அமைகின்றது. முகநூலில் ஒவ்வொரு நிலா முற்றத்தின் போதும் பேசப்படவுள்ள ஆளுமைகள் குறித்து அறிந்து கொள்கின்ற இலக்கிய ஆர்வலர்கள் தாம் அறிந்த படைப்பாளிகள் பற்றி பேசப்படுகின்ற போது, தாமும் இணைந்து குறித்த படைப்பாளிகள் பற்றிய தம்முடைய அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள நேர்கிறது. இதனால் படைப்பாளிகள் பற்றிய புதுப்புது விடயங்களை எமது வாசகர்கள் அறிந்துகொள்ள முடிகின்றது.







ஒன்பதாவது நிலா முற்றமானது, மேலும் பயனுள்ள ஒன்றாய் அமைந்தது, நூலகப் பொறுப்பாளர் ம.பிரகாஸ் அவர்களும், வாழைச்சேனை நூலக சேவகர் அ.ஸ்ரீதர் அவர்களும் இம்முறை பேசப்படவுள்ள இரு படைப்பாளி களான சந்திவெளி யினைச் சேர்ந்த க.கிருஸ்ணப்பிள்ளை மற்றும் மக்கத்துச் சால்வை புகழ் எஸ்.எல்.எம்.ஹனீபா இருவரையும் நேரில் சந்தித்து, நிகழ்வு குறித்து அவர்களுடன் கலந்துரையாடி வந்தனர். இரு படைப்பாளிகளும் வயது மூப்பின் காரணமாய் உடல்நலம் குன்றிய நிலையில் இந்த நிகழ்வில் அவர்கள் குறித்து கலந்துரையாடியமை பொருத்தமானதாய் அமைந்தது. எஸ்.எல்.எம்.கூட, சந்திவெளி படைப்பாளி பற்றி தான் இதுவரைஅறிந்திராதிருந்ததை வருத்தத்துடன் பதிவு செய்தார். அத்தோடு தன் இளமைக்கால தோழரான எச்.மெத்தியேஸ் அவர்களிடமும் நேரலை வழியே உரையாடி மகிழ்ந்தார். இதற்கு இந்த நிலா முற்றம் வழியமைத்துக் கொடுத்தது.

தற்போது, 10ஆவது ஆண்டுநிறைவுக் கொண்டாட்ட தினத்தில் - 10ஆவது நிலாமுற்ற நிகழ்வு இடம்பெறவுள்ளமை மிகவும் சிறப்பு. பேத்தாழை பொதுநூலகத்தின் இந்நிகழ்வு மேலும் வளர்ந்து தன் அடுத்த படியினை எட்டட்டும்.




# உயிர்த்த ஞாயிறு அஸ்தமித்தபோது...

ஜெ.ஸோ.அத்விஹா
வாழைச்சேனை இந்துக் கல்லூரி (தேசியப் பாடசாலை)

*அன்று ஆண்டவன் பேரில்*
*அழகாய் நடந்தது திருப்பலி -*
*அதை*
*சட்டென்று நிஜமாக்கியது*
*அன்று பலரின் பலி!*

*ஆண்டவன் உயிர்த்த தினத்தில்*
*ஆலமர விழுதுகள் பல*
*ஆங்காங்கே சில நொடியில்*
*ஆவியாய்*
*அஸ்தமனமானதேனோ??*

*களம் கண்டு களைத்துப் போய்*
*பத்தே வருடங்கள் ஆனதாலோ*
*அன்று மீண்டும் களம் கண்டு*
*இரத்தத்தால் தோய்ந்தாள் நம்*
*தாய்*

*துணையாய் வந்த*
*அமெரிக்கனை*
*துணை இழந்து அனுப்பி*
*வைத்தோமே!*
*எங்கு சொல்லித் தீரும் நம்*
*கடன்*
*இன்றே ஒன்று திரள்வோம்*
*உடன்!!!*

*நாற்றிசையும் நன்றாய்*
*நலிவுற்று*
*நடுத்தெரு வரை கேட்கிறது..*
*நம் தாயின் அழுகுரல்!!*
*இன்றேனும், சற்று*
*நிறுத்துவோம்!*

*காயங்கள் ஆறலாம் ஆனால்*
*நம் சோகங்கள் ஆறு வதில்லை*
*கணநேரம் கண் மூடினாலும்*
*எதிரே எரிகிறது தேவாலயம்!!!*

*அணைக்க வாரீர் பிரச்சினைத் தீ அதை தணிக்க வாரீர்- என்றும்*
*எல்லைகள் கடந்து அமைதி பரவட்டும் - எம் இலங்கை*
*அன்னையவள் இனிதே உறங்கட்டும்!!!!*

*சோகங்கள் கலைந்து - எங்கும் அமைதி மலரட்டும் இன்றே*
*அஸ்த்தமனமான ஞாயிறு*
*இனிதே உயிர்க்கட்டும்!!!*




**பா**லைநகரில் அப்போது பாடசாலை இருக்கவில்லை. அங்கிருந்து தியாவட்டவான் அரசினர் தமிழ்-முஸ்லிம் கலவன் பாடசாலைக்குத்தான் நாங்கள் வந்து போய்க்கொண்டிருந்தோம். தீவிர ஆயுதப் போராட்டம் நடந்துகொண்டிருந்த காலப்பகுதி அது. பாலைக்காட்டிலிருந்து சிங்களப்பள்ளிக் கூட மைதானத்தைக் கடந்துதான் (அங்கு ஒரு சிறிய அறைக்குள் ஒரு புத்தர் சிலை இருக்கும்) நானும் எனது உற்ற நண்பர்களான மைய்யன், மோகன், யாக்கூப், ராணி,திருமால், நூர்ஜஹான் போன்றோர் சகிதம் பள்ளிக்கூடம் செல்வது வழக்கம். அடிக்கடி சண்டை மூளும் இடத்தில் எங்கள் பாடசாலை அமைந்திருந்ததால் பாடசாலையின் இயக்கத்துக்கு முறையான நேர ஒழுங்குகள் எதுவும் பின்பற்றப்படுவதில்லை. பெரிதாக படிப்பும் நடைபெறுவதில்லை. மாணவர்கள் உட்பட ஆசிரியர்களும் அதைத்தான் விரும்பி இருந்தனர்.

மம்மி அக்கா என நாங்கள் அழைக்கும் பறங்கி இனத்தைச் சேர்ந்த ஒரு டீச்சர் மட்டும் சில ஆங்கிலப் பாடல்களை சொல்லித் தருவா. மம்மி டீச்சர் ஒரு டம்மி டீச்சர்தான். அவர் ஐந்து பாடல்களை திரும்பத் திரும்ப மூன்று முறை சொல்லி முடிக்கும் போது இடைவேளை பெல் அடிக்கும். மதியச் சாப்பாடு கிடைக்கும். உணவு கிடைக்கும் வரைக்கும் தான் மாணவர்கள் நல்ல பிள்ளைகளாக இருப்பார்கள். பிறகு தங்களது புத்தியை காட்டத் தொடங்கி விடுவார்கள். பிறகு மம்மி அக்காவால் ஒரு பாட்டைத்தானும் முழுமையாகப் பாட முடியாமல் போய்விடும். பின்னர் ஒளித்தோடும் கூட்டமொன்று எப்போதும் எங்கள் வகுப்பில் தயார் நிலையில் இருக்கும். மைய்யனும் மோகனும்தான் அந்தக் கூட்டத்துக்கு இணைத் தலைவர்களாக இருந்தனர். சாப்பாடு கிடைத்ததும் பாடசாலை சுற்றுப் புறத்தில் அந்த அணியைச் சேர்ந்த ஒருவரையும் காண்பது கடினம். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் நானும் இந்த அணியின் உறுப்பினராகி விடுவதுண்டு.

ஆனால் நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்கான தகுதியை நான் பெற்றிருக்கவில்லை. ஒளித்தோடுவதற்கு நான் காட்டும் தயக்கம்தான் அதற்குக் காரணம்.

மதிய உணவாக 'பெட்டிஸ்' வழங்கப்பட்டுக் கொண்டிருந்த நாட்கள் அவை. ஒரு நாள் மம்மி டீச்சர் இனி யாரும் ஒளித்தோடக் கூடாது என கடுமையாக எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தா. தனது கையிலிருந்த பெட்டீசால் மம்மி டீச்சர் மீது வீசி எறிந்து அவரது எச்சரிக்கைக்கு தனது எதிர்ப்பைக் காட்டினான் கூட்டத் தலைவன் மைய்யன். அந்த சம்பவத்தைக் கண்டித்து அதிபர் மைய்யனுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தார். அதன் எதிரொலியாக அன்று அவர் ஓட்டமாவடி வரைக்கும் தனது சைக்கிளை தள்ளிக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மறுநாளும் மைய்யனால் அதிபர் மீது ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. அதிர்ஸ்டவசமாக அதில் எந்தப் பாதிப்பும் அவருக்கு ஏற்படவில்லை.

எங்கள் வகுப்பில் அன்சார் மட்டும் கொஞ்சம் 'பொருளாதார' வசதி படைத்தவனாக இருந்தான். அவனது உம்மா மத்திய கிழக்கு நாடொன்றில் பணிப்பெண்ணாக இருந்தா. அவவனிடம் நீல நிற அரைச்சைக்கிள் ஒன்று இருந்தது. ஒரு சிறிய, பழைய சைக்கிளொன்று அவனிடமிருப்பது கிட்டத்தட்ட ஒரு ப்ளைட் இருப்பதற்கு சமமானதாக இருந்தது. அப்படிக் கதை விட்டுக் கொண்டிருந்தான். ஒருநாள் ஜீப்பில் யாரோ அவனைத் துரத்த இவன் அந்தச் சைக்கிளில் ஓடித் தப்பியதாகவும் ஜீப்பால் அவன்ட மயிரையும் புடுங்கேலாமப்போய்விட்டதாகவும் சொன்னான். இப்படித் தினமும் ஏதாவது ஒரு சாகசம் அவனைது சைக்கிளைக் கொண்டு நிகழ்த்திக் கொண்டிருந்தான்.

இந்த சைக்கிள் சர்கஸ்காரனுக்கு ஒரு நாள் திடீரென்று அவன் உம்மா வெள்ளை நிற ஒரு சோடி ஷூ அனுப்பி இருந்தா. பிறகு அதைப்பற்றி கதை விடத் தொடங்கினான். அதை அணிந்து கொண்டு வந்து 'மார சீன்' போட்டான். அந்த ளூழந வுக்கு மேலால் அவன் காலில் எப்படி மிதித்தாலும் அவனுக்கு வலிப்பதில்லையாம். யார் வேண்டுமானாலும் மிதிக்கலாம் என அன்சார் தினமும் சவால் விடுவதும் நாங்கள் மிதித்து தோல்வி காண்பதுமாக இருந்தோம். நாங்கள் ஒவ்வொருவராக அவன் காலில் ஏறி மிதித்துக் கொண்டு 'நோகுதா..நோகுதா' எனக்கேட்பதும் அவன் 'ம்ஹ்ம்...' என்று மறுப்பதும் தொடர்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் வகுப்பில் சற்றுப் பருமனாக இருந்த அசன் நன்றாக ஊண்டி மிதித்தபோது அது அவனுக்கு வலித்திருக்க வேண்டும். அன்சார் அதைக் காட்டிக்கொள்ளாமல் நெளிந்ததை நான் அந்தக் கணத்தில் பார்த்தேன். அதன் பிறகு அன்சார் அசனை மட்டும் தனியாக கூட்டிக்கொண்டு சென்று ஒரு பயத்தம் போலை வாங்கிக் கொடுத்தான். ஒரு பயத்தம் போலைக்கு சோரம் போன அசன் அன்றிலிருந்து அன்சாரின் காலில் மிதிப்பதில்லை.

அன்சாரின் Shoe வின் மகிமை நாளுக்கு நாள் வகுப்பில் உயர்ந்து கொண்டே போனது. இதனால் பலருக்கும் அதனை அணிந்து பார்க்கும் ஆசை ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அன்சார் ஒரு தொழில் நடவடிக்கைகயில் இறங்கினான்.

Shoe பொருந்தக்கூடியவர்கள் பாடசாலை விடும்வரை அவனது ஷூவை அணிந்துகொள்ளலாம். வாடகை இரண்டு ரூபாய். வாடகைக்கு ஷூ எடுத்துப் போட்டவர்களும் அன்சாரைப் போலவே வலிப் பரீட்சை நடத்தினர்.

'நோவலல்லுவாடா?" என அன்சாரும் அதட்டியாக கேட்பான் .

அவர்களும் 'ஓம்' என்று சொல்லிச் சமாளிப்பார்கள்.

ஆனால் எனக்கு அன்சாரின் ஷூவை விடவும் அவனது சின்னச் சைக்கிளே பிடித்திருந்தது. அதில் ஓடிப் பார்க்க எனக்கு ஆசை. சைக்கிளை ஓடிப்பார்க்கத் தரும்படி அவனிடம் கேட்டேன். அதற்கு அவன் ஸ்கூலிலிருந்து அந்தா தெரியிர போக்கு வரைக்கும் ஓடிப்பார்க்க ரெண்டு ரூபாய் கேட்டான். என்னிடம் ஒரு ரூபாய்தான் இருந்ததால் ஒரு ரூபாய்க்கு தரும்படி கேட்டேன். நாளை ஒரு ரூபாய் தரவேண்டுமென கடன் திட்டத்தில் சைக்கிள் ஓட்டத் தந்தான். நானும் கடன்திட்டத்தின் அடிப்படையில் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருப்பேன். அவன் காட்டிய போக்கை விட்டு ஒரு மீற்றரும் கூடுதலாக செல்லக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். கடன் கணக்கிலும் கடும் கறாராக இருந்தான்.

இனிமேல் சைக்கிள் அவனிடம் இரவல் பெறுவதில்லை என நான் முடிவெடுத்திருந்த அன்று அவன் காட்டிய போக்கைத் தாண்டி வேதக்கோயில் வரைக்கும் சென்று விட்டேன். பின்னால் நின்று சத்தமாக கூப்பிட்டுக் கொண்டே நின்றான். நானோ எதையும் கவனிக்கவில்லை. மிதி மிதி என மிதித்து வேதக் கோயிலடிக்குச் சென்று திரும்பி வந்தேன். கடுங்கோபத்தில் என்மீது சீறிப்பாய்ந்து வந்து என்னை ஓங்கி அறைந்த அன்சார் மீது எனது உற்ற நண்பர்களான் மோகனும் மையனும் செங்காட்டுப் புலி போல பாய்ந்து அன்சாரை நையையைப் புடைத்தனர். வாழ்க்கையில் அன்சார் அப்படி ஒரு அடியை அன்றுதான் வாங்கி இருப்பான். மறுநாள் அன்சார் எப்படியும் வாப்பாவைக் கூட்டி வருவான் என்ற அச்சத்தில் நாங்கள் மூவரும் அன்று பாடசாலைக்கு கட் அடித்துக் கொண்டு எங்கள் செங்கல் வாடிக்குச் சென்று கல்லுப் பிரட்டினோம்.

என்னிலும் இரண்டு வருடங்கள் கூடிய எனது சகோதரனுக்கும் அவனது சகபாடி அபூபக்கருக்கும் பள்ளிக்கூடம் செல்வதென்பது சிறைக்கூடத்துக்குச் செல்வதைப் போன்றது. பள்ளிக்கூடத்தில் கிடைக்கும் மதிய உணவைக் கூடப் புறக்கணிக்குமளவுக்கு பள்ளிக்கூடத்துக்கு கட் அடிப்பதில் இன்பத்தை அனுபவிப்பவர்கள் அவர்கள். எப்போது பார்த்தாலும் பள்ளிக்கூடத்துக்கு கட்டடிப்பதற்கென்றே இருவரும் விசேட திட்டங்கள் வகுப்பதும் இயங்குவதுமாகவே இருப்பார்கள் எனது சகோதரன் பள்ளிக்கூடம் வராமல் எங்காவது ஒளித்தால் நான் வீட்டில் சொல்லி விடுவேன் என்ற பயம் காரணமாக என்னை சமாளிப்பதற்கென்று இருவரிடமும் திட்டம் ஒன்று தயாராக இருந்தது. அப்போது புலிகள் இயக்கத்தில் தாஜிகான் என்றொருவர் இருந்தார்.

'இன்டெய்க்கு தாஜிகான் பள்ளிக்கூடத்துக்க புகுந்து எல்லாருக்கும் அடிக்கிறயாம்..இன்டெய்க்கு நாம பள்ளிக்கூடம் போனா நமக்கும் அடி விழும்' எனது சகோதரனும் அவன் சகபாடி அபூபக்கரும் எனக்கு கரடிவிட்டனர்.

நான் கொஞ்சம் பயந்த சுபாவம். தாஜிகான் ஏன் பள்ளிக்கூடத்துக்குள் புகுந்து சும்மா எல்லாருக்கும் அடிக்க வேண்டும் என்றெல்லாம் யோசிக்கத் தெரியாத பருவம். இரண்டுபேரும் சேர்ந்து என்னை இலகுவாக மடுத்து விட்டானுகள். பள்ளிக்கூடத்துக்கு சற்றுத் தள்ளி செயலற்ற நிலையில் ஒரு பேக்கரி இருந்தது. அந்த பேக்கரிக்குள் போய் ஒளிந்திருப்பதுதான் அவர்களின் திட்டம். கடந்த இரண்டு நாட்களாக அதுதான் அவர்களின் மறைவிடமாகச் செயற்பட்டு வந்தது.

'பக்கத்து வீட்டுக்காராக்கள் பனிஸ், தேத்தண்ணி எல்லாம் தருவாங்க"

என்று இருவரும் சுதி பிசகாமல் பொய் சொன்னார்கள். நானும் ஒரு எளிய மனக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். தாஜிகானின் அடியிலிருந்து தப்பும் அதேநேரம் தேத்தண்ணியும் பனிசும் இலவசமாக கிடைக்கும். நானும் சம்மதித்து அங்கே போனேன். பள்ளிக்கூடம் கலையும் வரை அந்த பேக்கரிக்குள் ஒளிந்துகொண்டிருந்து விட்டு பள்ளிக்கூடம் விடும் நேரம் பார்த்து திருட்டுத்தனமாகப் பதுங்கி வந்து பிள்ளைகளோடு பிள்ளைகளாக சேர்ந்து வீட்டுக்குச் செல்வது. இரண்டு நாட்கள் என்னை இப்படியே அலைக்கழித்தார்கள்.

எனக்கு பனிசோ, தேத்தண்ணியோ ஒரு மண்ணுங் கிடைக்கவில்லை. ஆனாலும் தாஜிகானின் அடியிலிருந்து தப்பித்துக் கொண்டோம் என்று ஒரு சிறு ஆறுதல் ஏற்பட்டது. இருந்தாலும் பனிசும் தேத்தண்ணியும் கிடைக்காதது பெருங்கவலையாகவும் ஒரு புறம் ஆத்திரமாகவும் இருந்தது. மறுநாள் இவர்கள் என்னை ஏமாற்றுகிறார்களோ என்ற சந்தேகம் எனக்குள் மெல்ல எழுந்தது. இரண்டு நாட்களாக பள்ளிக்கூடத்தில் கிடைக்கும் 'பெட்டீசை'யும் இவர்களால் இழந்துவிட்டேனே என்ற மன ஆதங்கம் கடுமையாக என்னை வாட்டத் தொடங்கியது. தாஜிகான் விசயத்தை மோகனிடம் மெல்ல கதை விட்டுக் கேட்டேன். அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், ஏரியாப் பொறுப்பாளராக அவனது மாமா இருப்பதனால் மாமாவின் அனுமதியின்றி தாஜிகான் உள்ளே புகுந்து அடிக்க முடியாதென்றும் அந்த இடத்திலேயே பெரியாள் பத்தினான் மோகன். உண்மையை புரிந்து கொண்ட நான், என்னை ஏமாற்றி இரண்டு நாட்கள் எனது 'பெட்டீசு'க்கு ஆப்படித்த இருவரையும் மாட்டிக்கொடுத்து செம அடி வாங்கிக் கொடுத்தேன். இதனால் அபூபக்கர் என் மீது மிகவும் கடுப்பாக இருந்தான்.

அன்று பள்ளிக்கூடத்திலிருந்து நானும், ராணியும் ஒளித்தோடி வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை எங்களை இடைமறித்த அபூபக்கர் அங்கிருந்த பனை மரமொன்றில் மரத்தில் படர்ந்திருந்த பலமான கொடியினால் என்னை கட்டி வைத்து அடித்தான். அச்சத்தில் நான் அலறிய அலறல் அந்தக் காட்டை ஊடறுத்துச் சென்ற ஒற்றையடிப் பாதையால் சென்று மறைந்தது. ராணி என்னை மீட்பதற்கு இயன்றளவு போராடினாள். எனது அதிர்ஸ்டவசமாக அன்று பள்ளிக்கூடத்திலிருந்து ஒளித்தோடி வந்த எனது உற்ற நண்பன் மோகன் எனது அலறலைக் கேட்டு ஒரு ஹீரோவைப் போல் ஓடி வந்து வந்த வேகத்தில் ஒரு சிறு பனங்கன்றின் மேலால் எம்பிக் குதித்து நேரடியாக அபூபக்கர் மீது பாய்ந்தான். அந்தப் பாய்ச்சல் விஜயகாந்த் பாய்வதைப் போலவே இருந்தது. அந்நாட்களில் எங்கள் கிராமத்தில் மின்சாரம் இல்லாத போதும் ஜெனரேட்டர் மூலம்

தொலைக்காட்சியில் படம் போட்டுக் காண்பிக்கும் ஒரு வீட்டுத் தியேட்டருக்கு மோகன் அடிக்கடி சென்று விஜயகாந்தின் திரைப்படங்களை அதிகம் பார்த்து வருபவனாக இருந்தான்.

தியாவட்டவான் தமிழ்-முஸ்லிம் அரசினர் கலவன் பாடசாலையில் அது வரைத் தன்னிகரில்லாச் சண்டியனாக இருந்து வந்த அபூபக்கர் அப்போது நிலைகுலைந்து கீழே விழுந்ததை நான் முதன் முதலாகப் பார்த்தேன். அபூபக்கர் என்னை அடித்த அதே கருக்குச்சீவாத பனை மட்டையால் மோகன் அவனை நையைப்புடைத்தான். அடிதாங்க முடியாத அபூபக்கர் அலறிக் கொண்டு உயிர் தப்பி ஓடினான். அந்தச் சம்பவத்துக்குப் பிறகு இனி தாஜிகானுக்கும் பயப்படுவதில்லை என உள்ளூர நினைத்தேன்.

அன்று மோகனும், ராணியும் எனக்காக மிகவும் வருத்தப்பட்டார்கள். எனக்காக ராணி அபூபக்கருடன் மல்லுக்கட்டிய போது ஒரு நாள் எனது பெட்டீசை ராணி கடன் கேட்டபோது நான் கொடுக்க மறுத்தது என் நினைவுக்கு வந்து என்னை உறுத்தியது. நாளைக்கு எனது பெட்டீசை ராணிக்குத் தருவதாக வாக்குறுதியளித்தேன்.

எங்கள் பள்ளிக்கூடத்தில் மம்மி அக்கா தவிர வேறும் பல பாடகர்கள் இருந்தார்கள். "அதோ ஒரு பறவை கப்பல் பறக்குது பார்" என்றொரு பாடலை நாள் தவறாது பாடி வரும் ஒரு ஆசிரியரும் எங்கள் பள்ளிக்கூடத்தில் இருந்தார். அவரது அந்தப்பாடலால் விமானத்தை கப்பல் என்று அழைக்கும் ஒரு தலைமுறையை அவர் உருவாக்கினார். அறிவுலக அயோக்கியத் தனங்கள் இப்படித்தான் ஆரம்பிக்கப்படுகின்றன போலும். அதனால் மாணவர்கள் அவரைப் பறவைக்கப்பல் மாஸ்டர் என்று அழைக்கத் தொடங்கி இருந்தனர்.பறவைக்கப்பல் மாஸ்டருக்கு ஒருபோதும் கோபம் வந்து நாங்கள் பார்த்ததில்லை.

இப்படிக் கலகலப்பாக போய்க்கொண்டிருந்த எங்கள் பள்ளிக்கூடத்துக்குள் திடீரென்று பூதம் வந்ததைப் போல் ஒரு அடிதடி மாஸ்டர் மாற்றலாகி வந்தார். அவர் எங்கள் கோட்டப் பாடசாலைகளில் அடிதடிக்குப் பிரபலமானவர். சுருக்கமாகச் சொல்லப்போனால் இன்னுமொரு விஜயகாந்த். ஏற்கனவே எங்கள் பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் சார்பில் ஒரு விஜயகாந்த் இருந்தான். இப்போது ஆசிரியர்கள் சார்பிலும் ஒரு விஜயகாந்த் வந்திருக்கிறார். இப்போது இங்கே இரண்டு விஜயகாந்த். ஒரு குகைக்குள் இரண்டு சிங்கம்.

இந்த விஜயகாந்த் மாஸ்டர் போகுமிடமெல்லாம் அடிதடியில் இறங்கி பிள்ளைகளின் கையை எலும்பை முறித்து விட்டு பிறகு அங்கிருந்து இன்னொரு பள்ளிக்கூடம் இடம் மாற்றப்படுவார். அவர் பிள்ளைகளுக்கு கிட்டத்தட்ட விஜயகாந்த் பாணியில் பறந்து பறந்து அடிப்பவராகவே இருந்தார். எங்கள் பள்ளிக்கூடத்திலிருந்தும் அவர் இடமாற்றப்படும் வரை அவரது விஜயகாந்த் பாத்திரத்தை சிறப்பாக வகித்துக் கொண்டிருந்தார்.

துரதிஸ்டம் எங்கள் வகுப்புக்கு அவர்தான் வகுப்பாசிரியர். எனது அதிஸ்டம் வகுப்பில் எனக்கு மட்டும்தான் வாசிக்கத் தெரியும். என்னை முன்னுக்கு வந்து வாசிக்கச் சொல்லிவிட்டு அவர் பார்த்துக்கொண்டிருப்பார். பிள்ளைகள் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டு நான் வாசிப்பதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். எவராவது இடையில் கதைத்தால் அலேக்காக அவனைத் தூக்கி 'மாமியார்ர வீட்டப் பார்த்தியாடா...பார்த்தியாடா.." என அவனது தலையை தனது நெற்றியில் அடித்து தூக்கி அவனது கதிரையை நோக்கி எறிவார். இதுதான் அவரது அடி. விஜயகாந்த் அடி.

நான் வாசிக்கும் போது ஒரு தடவை 'ஔவையாரை' ஒலவையார் என வாசித்தேன். அப்போது எனக்கு 'ஔ' வுக்கு 'அவ்' என உச்சரிப்பது தெரியாது. அவர் அதைத்திருத்தாமலே இருந்தார். அப்போது அவர் மேசையில் தாளம் போட்டுக் கொண்டு "கனவு காணும் வாழ்க்கை யாவும் கலைந்து போகும் கோலங்கள்..."என்ற பாடலை முணுமுணுத்தபடி கனவு கண்டு கொண்டிருந்தார்.

ஒருநாள் மாணவ விஜயகாந்த் மோகனை விஜயகாந்த் மாஸ்டர் கடுமையாக அடித்து நொறுக்கினார். அவனைப் பிரம்பினால் சகட்டுமேனிக்கு கடுமையாக அடித்தார். அந்த அடியை பார்த்து வகுப்பே அச்சத்தில் உறைந்திருந்தது. அவன் அழுது கொண்டு ஏரியாப் பொறுப்பாளராக இருந்த அவனது மாமாவை அழைத்து வரச் சென்று விட்டான்.

சற்றைக்கெல்லாம் ஒரு மஞ்சள் நிற உழவு இயந்திரம் பள்ளிக்கூடத்தின் முன்னால் வந்து நின்றது. மோகனும் ஏரியாப் பொறுப்பாளரான அவனது மாமாவும் அதிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தனர். மோகன் நேரடியாக எங்கள் வகுப்பறையை நோக்கியே அவரை அழைத்துவந்து கொண்டிருந்தான்.

மோகன் விஜயகாந்த் மாஸ்டரை அடையாளங் காட்டினான். அப்போது இந்த இயக்கத்தின் செயற்பாடுகளில் தமிழ்-முஸ்லிம் உறவு சிறப்பானதாக இருந்தது. இருசாராரும் அந்த இயக்கத்தின் உயர் பதவிகளில் இருந்தார்கள்.

"நீ என்ன மனிசனா..மாடா..?" ஏரியாப் பொறுப்பாளர் மோகனின் சட்டையைக் கழற்றிக் காண்பித்துக் கொண்டே ஆக்ரோசமாகக் கேட்டார்.

மோகனின் உடலெங்கும் பிரம்படியின் தழும்புகள் சிவப்புக் கோடுகளாய்ப் பாரித்திருந்தது. எனது பெஸ்ட் பிரெண்ட்டின் உடலில் சிவப்புத் தழும்புகள் எனக்குள் சற்றுக் கிலேசத்தை ஏற்படுத்துவதைப் போல் உணர்ந்தேன். ஏரியாப் பொறுப்பாளருக்கும், விஜயகாந்துக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. விஜயகாந்த் மாஸ்டர் எனக்கு எவனுக்கும் பயமில்லை என்று வாயால் சொல்லிக் கொண்டு திரிந்ததை இப்போது செயலிலும் காட்டிக் கொண்டு நின்றார். ஆனால் ஏரியாப் பொறுப்பாளர் மாஸ்டரின் வயிற்றில் தொப்புள் பகுதியை பலமாகப் பிடித்து திருகிய போது, "ஆ.." என்று குனிந்தார். அப்போது வகுப்பறை மேலும் அச்சத்தில் உறைந்தது. மாஸ்டரும் பொறுப்பாளரின் கையைப் பிடித்து முறுக்க முயற்சித்த போதும் பொறுப்பாளர் உதைத்த உதையில் தெறித்துக் கொண்டு விழுந்தார்.

அவரால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கூட அந்தக் காட்சியை பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். என்ன இருந்தாலும் எங்கள் குருவை அடிப்பது எங்களுக்கு அழுகையை வரவழைப்பதாக இருந்தது. நானும் இன்னும் சிலரும் பரிதாபத்தில் தேம்பி அழுததை பயத்தில் அழுவதாக பொறுப்பாளர் நினைத்திருக்க கூடும். அதிபர் ஏரியாப் பொறுப்பாளரை பாடசாலைக்குள் வந்து ஆசிரியரை அடிக்க முடியாது என்றும் இதற்காக தான் மேலிடத்திற்குப் போகப் போவதாகவும் எச்சரித்தார்.

"அப்ப இதற்கென்ன நியாயம்?' என ஏரியாப் பொறுப்பாளர் அதிபரிடம் மோகனைக் காண்பித்துக் கேட்டார்.

"ஏன் மாஸ்டர் உங்களுக்கிந்த தேவல்லாத வேல..?" என்று விஜயகாந்த் மாஸ்டரையும் அதிபர் அப்போது கடிந்து கொண்டார். அதற்கு பிறகு ஏரியாப் பொறுப்பாளர் விஜயகாந்த் மாஸ்டரை கடுமையாக எச்சரித்து விட்டு கிளம்பி விட்டார். பொறுப்பாளர் கிளம்பிய பிறகுதான் பதுங்கி இருந்த ஏனைய ஆசிரியர்கள் வெளிப்பட்டார்கள்.

சில நாட்களுக்குப்பின் விஜயகாந்த் மாஸ்டர் இங்கிருந்தும் மாற்றலாகிச் சென்றுவிட்டார். அவர் சென்றது கிட்டத்தட்ட எல்லோருக்கும் ஒரு கொண்டாட்டமாகவே இருந்தது. இப்போது பெட்டீசுக்குப் பதிலாக நல்ல சுவையான பிஸ்கட் எங்களுக்கு மதிய உணவாக வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. எனினும் நாங்கள் சற்றும் எதிர்பாராத விதமாக எங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து தமிழ் மாணவர்கள் பிரிக்கப்பட்டு விட்டனர். எனது உற்ற நண்பர்களான மோகன், திருமால், ராணி போன்றவர்கள் இல்லாத ஒரு பள்ளிக்கூடமாக அது மாற்றப்பட்டு விட்டது. அருகிலிருந்த சிங்களப் பள்ளிக்கூடம் தமிழ் பள்ளிக்கூடமாக மாறியது. எனது நண்பர்கள் அங்குதான் சேர்க்கப்பட்டார்கள். போர் உக்கிரமடைந்ததையடுத்து அந்த சிங்களப் பள்ளிக்கூடம் தன் சிங்கள அடையாளத்தை தமிழ் அடையாளமாக மாற்றிக் கொண்டது. அரசினர் தமிழ்-முஸ்லிம் கலவன் பாடசாலையான எங்கள் பள்ளிக்கூடம் எங்களை மட்டுமே கொண்ட பள்ளிக்கூடமாயிற்று.

மதிய உணவாக எனக்குக்கிடைத்த பிஸ்கட்டுகளை மோகனுடனும் ராணியுடனும் நான் பகிர்ந்துண்ண நினைத்தபோதும் அது என்னால் முடியாததாக இருந்தது. ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் சந்தரப்பங்களிலிருந்து நாங்கள் தூரமாகிவிட்டிருந்தோம். இப்படியே பல நாட்கள் கழிந்ததில் எங்கள் முகங்கள் ஒருவருக்கொருவர் மறந்து போயிற்று. பள்ளிக்கூடத்தினுள்ளேயே எங்கள் உறவுகள் மடிந்து விட்டன. அதற்குள்ளேயே எங்கள் கனவுகளும் மடிந்தன. எங்கள் வாழ்வும் அதன் இயல்பை இழந்து போனது.




# குடியால் என் குடி?...

'இளஞ் சைவப்புலவர்' க.சிவதர்சன் எம்.ஏ
ஆசிரியர், கிண்ணையடி

**அப்பா!**
சுட்டெரிக்கும் சூரியனின்
சுடுவெயிற் கண்ட உன் தேகம்
சிந்திய வியர்வை
சிந்தையில் அடங்கா....

கடின உழைப்பால்
களைத்த நீ களைப்பைப் போக்க
நாடினாய் மதுவை....

சிறுதுளி பெருவெள்ளம் போல்
பெருகியது உன் குடிப்பழக்கம் -
அதனால்
குறுகியதுநம் பொருளாதாரம்
வறுமை நம்மைத் தேடிவந்தது...

**அம்மா...!** சிந்தித்தாய்
என் மகன் வயிறார
உண்ண வேண்டும்
நாலு எழுத்தாவது
படிக்க வேண்டும்..

வெளிநாடு செல்வதைத் தவிர
வேறு வழியில்லை
என்னைச் சிறுவர் இல்லத்தில்
சேர்த்து விட்டுச் சென்றுவிட்டாய்....

அம்மா உன் சூட்டில்
ஆறரை வரைஉறங்கினேன்
எவ்வாறு? விழிப்பது நாலரைக்கு
விழித்தேன்...
படிக்க அல்ல, பயத்தால்.

கட்டிற் படுக்கை விசிறிக் காற்று
குளியலறை
அத்தனையும் இருந்தது....

ஆதரவு தேடினேன்
அன்பிற்காய் ஏங்கினேன்
இங்கிருக்கும் அனைவரும்
என்னை பெற்றவர்
என்பதை அறியாதவனாய்....

வலிகளைச் சுமந்து
வரிசையில் நின்றேன்
உணவிற்காய்- என்
உள்ளம் நீ ஊட்டியதையே
மீட்டியது....

உப்பில்லாப் பண்டங்குப்பையிலே
என்றிருந்தேன்- இங்கு
என் தட்டிலே இருந்தது
நாபுசிக்க மறுத்தது
வயிறு, அதை ஏற்க மறுத்தது


இளமையில் தனிமை
கொடியது அம்மா!
ஒவ்வொரு நிமிடமும்
கனதியாகிறது..
கண்கள் உனைக் காணாததால்..

அம்மா என்றால்
அமிர்தம் வடியுமல்லவா?
உனை அழைக்க
முடியவில்லை - நீ
அயல் நாட்டில் உள்ளதால்....

அம்மா நான்
உன் மடிசாய வேண்டும்
உனைகட்டி அழவேண்டும்
உன் சூட்டில் உறங்க வேண்டும்

செல்லமாய் நீ என்னை
நோக்க வேணும்
உன் முகம் பார்த்து
என் உதடு மலரவேணும்
எனக்காய் உன் கைகள்
சமைப்பதை - என் நா
ருசிக்கவேணும்....

இத்தனை எதிர்பார்ப்புகளுடன்
ஏக்கம் நிறைந்து நகர்கிறது
உன் மகனின் வாழ்க்கைப் பயணம்
கண்களாற் கதறுகிறேன்
காலம் தாழ்த்தாமல் வந்துவிடு..




"நிலு.... நிலு.... எழும்பு நேரம் ஆயித்து..."

"ஸ்கூல் போறலயா நீ... எழும்பு...." எனத் தனது தங்கையை எழுப்புகிறாள் சுமித்தா. அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளை முடித்துவிட்டு தனக்கும் தன் தந்தை மற்றும் தங்கைக்கும் சேர்த்து மதிய உணவினை சமைத்து முடித்து விட்டு பாடசாலை செல்லத் தயாராகும் வேளையில் தான் தனது தங்கை நிலுவையும் பாடசாலை செல்ல எழுப்பினாள்.

தரம் 07 இல் கல்வி பயிலுகிறாள் நிலு தனது ஊரிலே உள்ள பாடசாலையில் நிலு கற்கிறாள். ஆனால் சுமித்தாவோ தனது ஊரில் இருந்து 4 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கிறாள்.

"அக்கா.... கொஞ்ச நேரம் தூங்குறனே..." இது நிலுவின் குரல்.

"ஏய்...! இண்டைக்கு நீ தானே வகுப்புச்சுத்தம் எண்டு சொன்னா... தூங்கின போதும் எழும்பு... எழும்பு..."

என தங்கையை துரிதப்படுத்திய வாறே தன் தந்தை குமாருக்கு தேநீரைக் கொண்டு கொடுத்தாள்

இவளது தந்தை குமார் அந்த ஊரிலே 'நம்பர் வன் குடிகாறன்' எனப் பெயர் பெற்றவர். நன்றாக உழைப்பவர் அதே அளவு நன்றாகவே குடிப்பவரும் கூட குடும்பத்தில் சண்டைக்கும் சச்சரவு க்கும் குறைவில்லை.

இதனாலேயே சுமியின் தாய் வெளிநாட்டுக்கு கப்பலேறினாள். சுமி தரம் 10இல் பயிலும் போதே அவளது தலையில் குடும்பப் பொறுப்பைத் திணித்து விட்டு தாய் கமலா வெளிநாடு சென்று விட்டாள். குடும்பத்தை நிர்வகிப்பதோடு கல்வி யிலும் சிறந்து விளங்கினாள்.

"நிலு.... வீட்ட பூட்டி மல்லிகை பூமரத்துக்கு கீழே திறப்ப வச்சிட்டு போ... எனக்கு நேரம் ஆயித்து..." சாப்பாடு கட்டி வச்சிருக்கன் மறந்திடாம எடுத்துப் போ"

எனக் கூறிவிட்டு தனது ஈருளிக்கு இயக்கம் கொடுத்து மிதித்தாள். எவ்வளவு பொறுப்புக்கள் இருப்பினும் பாடசாலைக்கு மட்டும் நேரத்துக்குச் சென்று விடுவாள்.

சைக்கிள் ஓட்டத்திலும் பார்க்க அவளது மன எண்ண ஓட்டம் நீண்டு கொண்டே சென்றது. தமது பிள்ளை களை நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என எண்ணி தாய் கமலா வெளிநாடு சென்றதால் தந்தையால் தம் பிள்ளைகள் படும் துன்பத்தை அவள் தாய் அறிந்திருக்கவில்லை.

வேலை முடிந்து வருகையில் அளவுக்கதிகமாகவே குடித்துவிட்டு தம் பிள்ளைகளை அடிப்பதற்கு துரத்துவார். தனது தங்கையை கையில் பிடித்தவாறு பக்கத்து வீடுகளில் ஒளித்து இருந்து விட்டு தந்தை தூங்கியதும் பதுங்கிப் பயந்து வீட்டுக்கு வருவாள் . மூத்த சகோதரி படிக்கும் காலத்திலேயே காதல் நோய் தொற்றி பிறிதூர் சென்று விட்டாள்.

"அக்காவப் போல தான் தங்கச்சியும் இருப்பா அம்மாவும் பக்கத்துல இல்ல... அப்பனும் குடிகாறன் இவளும் யாராவது இழுத்துத்து ஓடிடுவாள்..."

என ஊராரின் தூற்றல்கள் தான் அவள் கல்வியில் முழுக் கவனத்தையும் செலுத்தக் காரணமாய் இருந்தது.

பாடசாலை முடிந்து வீடு வந்ததும் உணவு உண்டுவிட்டு அவளும் தங்கை நிலுவும் எவ்வித பிரத்தியோ வகுப்புக்களுக்கும் செல்லுவதில்லை மாறாக அவர்கள் செல்வது அயல் வளவில் உள்ள பேத்தாழை பொது நூலகத்திற்கே...

அவள் படும் கஷ்ட நிலைமைக்கு மன ஆறுதல் தரும் இடமாக இருப்பது அந்த நூலகமே... மாலை ஆகும் வரை நூலகத்திலே இருப்பாள். தங்கையை சிறுவர் பகுதியில் விட்டு விடுவாள் அங்கு கார்டூன்கள் காணொலியாக போட்டுக் காட்டப்படும் அத்தோடு சிறுவர் கதைப் புத்தகங்களையும் வாசிக்க வைப்பாள்.

தனக்கு தரப்பட்ட வீட்டுப் பாடங்களையும் அங்கயே செய்து முடித்து விடுவாள் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், பெரியார் வரலாறு, பொது அறிவு நூல்கள் என ஒன்றையும் அவள் விட்டு வைப்பது இல்லை. பின் வீடு திரும்பி இரவு

உணவு சமைத்து விட்டு தன் தந்தை குடித்து விட்டு வரக்கூடாது என இறைவனைப் பிராத்தித்த வண்ணம் இருப்பாள்.

"ஏன்டி... சசி... அங்க பாரு சுமித்தா வாறாள். வரமாட்டாள் போல என்டியே... அந்தா வாறாள்..."

என தோளில் டையையும் கையில் இரு கொப்பிகளையும் சுமந்து வந்த சுமித்தாவை அவளது வகுப்பு சக மாணவியான சங்கவி காட்டினாள் .

"ஓம் டி... இவளாவது ஸ்கூலுக்கு வராம விடுறதாவது.... இதால தான் இவள் வகுப்பில முதலாம் பிள்ளையா வாறாள்..." என சசி கூறினாள்.

"இல்லடி சங்கவி...அவள் வசதியில்லா தவள் என்றதால டீச்சர் மார் அவளுக்கு மார்க்ஸ் கூட கூட போட்டு குடுக்காங்கடி... வகுப்புக்கும் போகாம ஸ்கூலுக்கு மட்டும் வந்து அவள் எப்படி டி அவளோ... மார்க்ஸ் எடுக்க ஏலும்..."

என சசி கூறினாள் பொதுவாக வகுப்பில் ஒரு மாணவி நல்ல பெறுபேறு பெற்றால் சக மாணவர் களுக்கு பொறாமை ஏற்படுவதும் சகஜமே... அந்த வகுப்பில் சுமித்தா வுடன் பழகுவதற்கு ஒரு சில மாணவர்களே இருந்தனர். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தோர் இவளோடு பேசுவதும் இல்லை. அவளை ஏளனம் செய்வதிலேயே குறியாய் இருப்பர். எனினும் அதை நினைத்து அவள் ஒரு போதும் வருந்துவதே இல்லை.

வகுப்பறை எங்கும் பெரிய இரைச்சலோடு மாணவர்கள் அங்கும் இங்கும் திரிந்த வண்ணம் இருந்தனர். வகுப்பாசிரியர் வரும் அரவம் கேட்க பேசாது சென்று தத்தமது இடங்களில் அமர்ந்து அமைதி ஆயினர். பாடம் ஆரம்பமானது.

"செயற்கரிய யாவும் நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவும் காப்பு..."

"இந்தக் குறளுக்கான பொருள் தெரிஞ்சவங்க சொல்லுங்க பார்ப்பம்" என ஆசிரியர் வினவ அதற்கு சுமித்தாவின் கைகளே உயர்ந்தன.

ஏனையோர் குனிந்த வண்ணம் இருந்தனர் ஆசிரியர் சுமித்தாவை முன்வருமாறு கூறி அக் குறளுக்கான கருத்தைக் கூறும்படி கூறினார்.

"நட்பைப் போல் செய்து கொள்வதற்கு அருமையான செயல் எதுவுமில்லை அதைப்போல் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பாதுகாப்பாக இருப்பது நல்ல நட்பாகும். நல்ல நட்பு என்றுமே வெற்றி தரும். எனக்கும் ஆயிரக்கணக்கான நண்பர்கள் இருக்கின்றனர். நான் வெற்றி பெற எனக்கு வழி காட்டுவது எனது நண்பர்களே..." எனக் கூறி முடித்தாள் சுமித்தா.

"பார்த்தியா டி... அவளுக்கு ஆயிரம் நண்பர்களாம் பொய் சொல்றத்துக்கும் ஒரு அளவு இல்லயா? இந்த வகுப்பிலையே அஞ்சு ஆறு பேர்தான் அவளுக்கு பிரண்ஸ் இருக்காங்க அதுக்குள்ள அவக்கு ஆயிரம் பிரண்ஸ் ஆம்..." என சசியும் கங்காவும் முணுமுணுத்தபடி பேசிக்கொண்டனர்.

ஆசிரியர் கைதட்டி பாராட்டிய வண்ணம் "சுமித்தா வெரி குட். இந்த திருக்குறள் ஏற்கனவே நீ படிச்சிரிக்கையா?" எனக் கேட்டார்.

"ஓம் ரீச்சர் எனக்கு இருக்கிற நண்பர்களுள் திருக்குறளும் ஒன்று" எனக் கூறினாள். ஆசிரியரோடு சேர்ந்து மாணவர்களும் வியப்பால் தமது புருவங்களை உயர்த்தினர் "என்ன சுமித்தா சொல்றா...." என ஆசிரியர் கேட்டார். "நான் நண்பர்கள் எண்டு சொன்னது ஆயிரக்கணக்கான புத்தகங்களைத் தான். எனது வெற்றிக்கு உறுதுணையா இருப்பதும் இந்த புத்தகங்கள் தான். நான் மேலதிக எந்த

வகுப்புக்கும் போகாம வகுப்புல முதலாவது வரக் காரணமும் இதுதான். ஸ்கூல் விட்டதும் நான் போறது நூலகத்துக்கு தான்.

அங்க எனக்குத் தேவையான எல்லா வகையான புத்தகங்களும் இருக்கும். என்னை ஏளனம் செய்யவோ கிண்டல் செய்யவோ அங்க யாரும் இல்லை. அந்த நூலகத்தில இருக்கிற புத்தகங்கள் எனக்கு நல்ல நண்பனாக, ஆசானாக, ஏன் என் தாயாகவும் என்னை வழிப்படுத்துறது புத்தகங்கள் தான்" எனக் கண்களில் நீருடன் கூறி முடித்தாள் சுமித்தா.

அனைவரும் கை தட்டினர் "பாத்திங்களா... பிள்ளைகள்? இவள் எந்த வகுப்பும் போகாம நல்ல கெட்டிக்காரியா வரக் காரணம் பல வகையான புத்தகங்களை இவள் படிப்பதனால் தான். இது புரியாத சில பிள்ளைகள் அவளது ஏழ்மையையும், தாழ்மையையும் பார்த்து டீச்சர்ஸ் மார் பாவத்துல மார்க்ஸ் போடுறதா பேசியிருக்கீங்க..." என ஆசிரியர் கூறியதும் சசி, சங்கவி மற்றும் சில மாணவர்கள் தலையை தொங்கப் போட்டுக் கொண்டனர்.

"இவளப் போல நல்ல மார்க்ஸ் எடுத்து கெட்டிக்காரியா வரணும் எண்டா நூலகம் போங்க நிறைய புத்தகங்கள் வாசிங்க. ஏளனம் செய்யாதீங்க எல்லாரும் ஒற்றுமையா இருங்க..." என ஆசிரியர் கூறினார்.

பாடம் முடிந்து ஆசிரியர் வெளியே சென்றதும் சில மாணவர்கள் சுமித்தா விடம் சென்று பேசினர் அவளிடம் பொறாமை கொண்ட மாணவர்கள் சுமித்தாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். அவளோடு நூலகம் வருவதாகவும் கூறினர். சுமித்தாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி... ஒரு மாணவனை மட்டுமல்ல எல்லா மாணவர்களையும் வழிப்படுத்தும் நல்ல தாய்க்கு சமமானது நூலகம். பயன் படுத்துவோம் பயன் பெறுவோம்....




# சமூக வலை தளங்களுக்குள் மா(வா)ழும் இன்றைய சமூகம்

'இளஞ் சைவப்புலவர்'
**பு.கிருஷாந்**
B.A. (Hons) in Sociology
கல்குடா

**வி**ஞ்ஞான தொழினுல்நுட்ப கண்டு பிடிப்புக்களின் மறுமலர்ச்சியின் விளைவாக உருவாக்கப்பட்ட அதி உயர் கண்டுபிடிப்பே இணையம் ஆகும். இதன் உருவாக்கமானது கணினி தொழிநுட்பத்தில் ஒரு புதிய மாற்றத்தினை ஏற்படுத்தியது. 'உலக அளவில் பல கணினி வலையமைப்புக் களின் கூட்டிணைப்பான, பெரும் வலையமைப்பினை இவ் இணையம் குறிக்கின்றது.' இவ் இணைய வளர்ச்சியின் விளைவாக உருவாக்கப் பட்ட அதிநவீன தொடர்பாடல் தொழினுட்பமே **சமூக வலைத் தளங்கள்** ஆகும். வெகுஜன ஊடகங்களில் ஓர் நவீன பரிமானமாக இது காணப்படுகின்றன. சமூக வலைதளம் என்பது **'ஒத்த கருத்து உடையோர் அல்லது செயற்பாடு கொண்டோரின் சமூகத்தை வளர்க்கவும், அவர்களிடையே உள்ள சமூகப் பிணைப்புக்களை வெளிப் படுத்தவும் வழிசெய்கின்ற ஓர் இணைய சேவைத்தளம் அல்லது வலை தளம் ஆகும்'.** இவ்வகையான இணையத் தளங்கள் சமூகத்தை எப்போதும் ஒன்றாக இணைத்து வைத்திருத்தலை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளன.

மனித சமூகம் இன்று இவ்வலைத் தளங்களின் செல்வாக்கிற்குள் ஆட்பட்டு விட்டன, ஏனெனில் **கவர்ச்சி கரமான மனித இயலாக** சமூக வலைத் தளங்கள் காணப்படுகின்றன. மனித மூளையானது உடலில் ஓர் சமூக உறுப்பு (Social Organ of the body) ஆகும். அவ்வகையில் சமூக வலைதளமும் மனித மூளையின் செயற்பாடும் ஒருங்கிணைந்தவையாக காணப் படுகின்றன. இதன் கண்டுபிடிப்பு மூளையினாலேயே ஏற்படுத்தப் பட்டது. அதனாலேயே மூளையின் செயற்பாட்டிற்கு அமைவாக இது கட்டமைக்கப் பட்டுள்ளது. எனவே தான் சமூக வலைத்தளங்கள் மனிதர்களை இலகுவாக கட்டுப் படுத்துகின்றன.

கடந்த ஆண்டில் இயங்குநிலை பயனர்களாக (Daily Active Members) உலக அளவில் 3.484 பில்லியன் மக்கள் காணப் பட்டதுடன், இலங்கையில் அது 6.20 மில்லியன் பயனர்களாகவும் காணப் பட்டது. Facebook, Twitter, Instagram, Youtube, Massanger, Whats app, Viber, Line, Skype மற்றும் IMO என்பன முதல் நிலை வலை தளங்களாகவும் அதிக பயனர் களை கொண்டவையாகவும் காணப் படுகின்றன.

இவை சமூக பொருளாதார அரசியல் கலாசார மற்றும் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த அனைத்து விடயங்களையும் ஒரே தளத்தில் பெறும் பல்வேறு வசதிகளை சமூக வலைத்தளங்கள் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அதே வேளை கவர்ச்சிகரமான பொழுது போக்கு அம்சங்களையும் கொண்டதாகவும் காணப்படுகின்றது. நாகரிக மனிதர் களின் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக சமூக வலைத்தள பாவனையானது மாறி விட்ட இந்நிலையில் சமூக வலைத் தளங்களினுடனேயே தங்களின் பொழுதினை நகர்த்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்கள் எவ்வளவு நன்மை தரக்கூடியதாக காணப்படு கின்றதோ அதே அளவு தீமையும் தரவல்லது. அதனை பயன்படுத்தும் விதம் மற்றும் சுய கணக்குகளை (Profile)பாதுகாப்பாக வைத்திருத்தல் போன்றவை அவசியமான ஒன்றாகும்.

இன்றைய வலைத்தள பயனாளர்கள், அதிலும் குறிப்பாக இளைய சமூகத்தினர் அதிகமாக இவற்றிற்கு அடிமையானவர்களாகவே மாறி வருகின்றனர். இச்செயலிகள் (Apps) அனைத்துமே இலவசமாக தர விறக்கம் செய்ய முடிவதோடு ஸ்மார்ட் போன்களிலும் செயற்படக் கூடிய வகையில் இலகுபடுத்தப் பட்டுள்ளமை மற்றும் நாளுக்கு நாள் செயலிகளில் புதிய வசதிகளினை அறிமுகப்படுத்தல் (App Update) என்பன இதன் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்துள்ளது.

இதன் அதீத பாவனையானது பல்வேறு சமூக, உடல், உள ரீதியான தாக்கத்தினை இன்று ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன. மனிதர்களுக்கு இடையிலான தொடர்பு என்பது தற்காலத்தில் நேரடியாக நிகழ்வதை விட சமூக வலைத் தளங்களிலேயே அதிகமாக ஏற்படுத்தப்படுகின்றது.

இது ஒரு பக்கம் அறிவியல் வளர்ச்சியாக இருந்தாலும் சமூக பிறழ் நடத்தைக்கும் அடிப்படையாக அமைந்து விடுகின்றது. யாரானாலும் எவ்வாறான கருத்துக்களையும் பகிரமுடியும் எனும் போது சமூக விரோதச் செயற்பாடுகள் மற்றும் தனிப்பட்ட பழிவாங்கல்கள் மிக இலகுவாக மேற்கொள்ளப்படுகிறது.

கருத்துக்களின் பரவலினை உடனடி யாக சமூக வலைதளங்களில் கட்டுப் படுத்துவது சிரமமான ஒன்றாகும். அதற்கான போதிய தெளிவு அனைவரிடத்திலும் இல்லை. கடந்த காலங்களில் இலங்கையில் அசாதாரண சூழ்நிலைகளின் போது இச்செயலிகள் முற்றாக முடக்கப் பட்டிருந்தமை இங்கு குறிப்படத் தக்கது.

சமூக வலைத்தள பாவனையாளர் ஒருவர் காலையில் எழுந்ததும் செயலிகளில் (Apps) சஞ்சரித்தே தனது நாளினை தொடங்குகின்றார், அதுபோலவே அன்றைய நாள் வலைத் தளங்களினுடனேயே முடிவடைகின்றது. இன்று இது சாதாரணமானதொரு செயற்பாடாகி விட்டது. ஆனால் எம்மில் பலருக்கு தெரியாத ஒரு விடயம் யாதெனில் இச்செயற்பாடு **“Social Media Anxiety Disorder”** எனும் உளவியல் ரீதியிலான தாக்கத்தினால் ஏற்படுவ தாகும். அதாவது ஒரு நாளில் ஏதோ ஒரு காரணத்திற்காக மீண்டும் மீண்டும் செயலிகளை பார்வை இடுகின்றோம்.

உதாரணமாக:- Facebookஇல் அடிக்கடி Timeline I பார்வை இடுகின்றோம், புகைப்படங்களை பதிவேற்றம் செய்த பின் அதற்கான Reaction மற்றும் Comment என்பவற்றை பார்க்கின்றோம். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் அச்செயலியே உங்களை அழைக்கி ன்றது.

எவ்வாறெனில் Notification Sound கேட்கும் போது நீங்கள் உடனடியாக அச்செயலிக்குள் நுழைகின்றீர்கள்.

இச்செயலிகள் எவ்வாறு தன்பால் நம்மை ஈர்த்து கட்டுப்படுத்துகின்ற தெனில், எமது மூளையில் மகிழ்ச்சியை தூண்டக் கூடிய Dopamine, Oxytocin எனும் ஓமோன்களை சுரக்கச் செய்கின்றது. இதனாலேயே சமூக வலை தளங்களை பயன்படுத்தும் போது தன்நிலை சார்ந்த ஒரு மகிழ்வு நிலையினை உணர்கின்றோம்.

இலங்கையில் 2019 ஆண்டின் புள்ளி விபர (மூலம்: napoleoncat.com) தகவலின் படி Facebook பயனாளர்கள் 6479000 ஆக காணப்படுவதுடன் அதில் 66.9% ஆண்களும் 33.1% பெண்களும் அடங்குகின்றனர். 18–4 வயதுக்குட்பட்டோரின் பயன்பாடு 27.9% மற்றும் 25–34 வயதுக்குட்பட்டவர்களின் பயன்பாடு 35.7% ஆகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தங்களுடைய அன்றாட நடவடிக்கை, தனிப்பட்ட பிரச்சினைகள், உணர்வு வெளிப்பாடுகள் என்பவற்றை சமூக வலைத் தளங்களில் பதிவேற்றம் செய்து ஆறுதல் அடைய முயற்சிக்கின்றனர். சமூக வலைத்தள செயலிகளும் அவ்வுணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருப்பதனால் இலகுவாக பயனர்கள் தங்களது பிரச்சினை, உணர்வுகள் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கான தளமாக அமைகின்றது. ஆனால் அதுவே அவர்களின் உளவியல் ரீதியிலான தாக்கத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

ஒருவருக்கு தனி ஒரு கணக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்று எந்த விதிவிலக்கும் இன்மையினால், போலி கணக்குகளின் பாவனை அதிகமாகி குற்றச்செயல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இலகுவாக இடம் பெறுகின்றன. இலங்கையில் மொத்த Facebook கணக்குகளில் 20% போலி கணக்குகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவை சமூகத்தில் பிரச்சினைகளை மேற்கொள்ளவும், பிறழ்வுகளை ஏற்படுத்தவும் பயன்படுகின்றன. அதிகமான பெண்கள் இதுபோன்ற போலி கணக்குகள் மூலமே ஏமாற்றப்படுகின்றனர்.

சமூக வலைத்தளங்களில் சுய கணக்கினை (Profile) பேணுபவர்கள் தங்களினுடைய Profile idஐ கவர்ச்சியானதாக வைத்திருக்க பல்வேறு வேலைகளைச் செய்கின்றனர். மற்றவர்களை கவரும் வகையில் தமது சுய கணக்கு இருக்க வேண்டும் என எண்ணுகின்றனர். சமூக வலைத் தளத்தில் தங்களினை தனித்துவமான ஒருவராக நிலைநாட்ட முயற்சிக்கின்றனர்.

நிஜ வாழ்க்கையில் சமூக வலைத் தளத்திலும் மனிதர்களின் பிரதிபலிப்புக்கள் மாறுபட்டதாக காணப்படுகின்றன. இதற்காகவே பல ஆபத்தான இடங்களில் புகைப்படங்களை எடுக்கின்றனர். இதனால் உயிர் இழப்புக்கள் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

தற்காலத்தில் இடம்பெறுகின்ற விவாகரத்துக்களில் சமூக வலைத் தளங்களினால் ஏற்படுபவையும் காணப்படுகின்றமை வேதனைக்குரிய விடயமாகும். கணவன் – மனைவிக்கு இடையிலான விரிசல் அதிகரிக்கவும், தகாத உறவுகள் ஏற்படவும் வலைத் தளங்கள் காரணமாகின்றன. நேரடி இடைவினை மூலமான புரிந்துணர்வு குறைவடைவதனால் சமரசமாவதற்கான சந்தர்ப்பங்கள் அற்றுப் போகின்றன.

பெரும்பாலான பெற்றோர்கள் சமூக வலைத் தளங்களுக்கு அடிமையாக

காணப்படுவதனால் அவர்களை பார்த்து வளரும் குழந்தைகளும் இலகுவாக அதனையே பழகிக் கொள்கின்றனர். அது மட்டுமன்றி பிள்ளைகளுடன் செலவிடும் நேரம் குறைவதனால் அவர்கள் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் க.பொ.த. சா.தரத்தில் சித்தி யடைந்தவுடன் நிபந்தனையாக அல்லது பரிசாக ஸ்மார்ட் போன் பெற்றோரால் பதின்ம வயதினருக்கு கொடுக்கப்படுகின்றது. ஆனால் அவர்கள் அதனை சரியான முறையில் பயன்படுத்துகிறார்களா என்பதனை கவனிப்பதில்லை. இது மாணவர்கள் கல்வியில் இருந்து தடம் புரண்டு தவறான பாதையில் செல்ல வழி சமைக்கின்றது.

இன்றைய இளையோர் சமூகமானது தமது சுய மனக் குமுறல்களை சமூக வலைதளங்களின் ஊடாக தேற்றிக் கொள்ள எத்தனிக்கின்றனர். அதற்கு உதாரணமாக 'தனிமையாக உணர்கின்றேன்', 'அன்பு ஒன்றுதான் அனாதை' போன்ற வாக்கியங்கள் வலைத் தளங்களில் உலாவுவதனை காணலாம். அதற்கு பல்வேறு நபர்கள் ஆறுதல் அளிக்கும் வகையில் கருத்துக்களை பதிவிட்டாலும் ஒரு சிலர் அதனை கேலிக்கு உள்ளாக்கவும் செய்கின்றனர். இறுதியில் அது அவர்களின் மன அழுத்தத்தினை மேலும் அதிகரிக்கும் ஒன்றாகவே மாறிவிடுகின்றது.

சமூக வலைத்தளங்களின் தோற்றத் தோடு உருவாகிய குற்றச்செயலே "இணைய குற்றங்கள்" (Cyber Crimes) ஆகும். மற்றும் வலைத்தள திருடர்களினால் கணக்குகள் Hack செய்யப்பட்டு அபகரிக்கப் படுவதும் தவறான வழிகளில் சமூக வலைத் தளங்களை பயன்படுத்தி துஸ்பிரயோ கங்களை செய்வதும் இன்று அதிகரித்து வரும் குற்றச் செயல்களாக காணப்படுகின்றது.

இது பல்வேறு மன உளைச்சல் மற்றும் தற்கொலைகள் நடக்க காரணமாகி விடுகின்றது.

அனைத்து செயலிகளிலும் சுய கணக்கினை பாதுகாப்பதற்கு வழிகள் உள்ளன. ஆனால் நாம் எவரும் அதனை சரியான முறையில் கையாள்வது இல்லை. நாம் இன்று அதிகமாக பயன்படுத்தும் IMO செயலியானது இலகுவாக Hack செய்யக்கூடிய ஒன்று என்பது எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?

இச் சமூக வலைதளங்கள், இணையம் மற்றும் இலத்திரனியல் உபகரணம் மூலமே தொழிற்படக் கூடியது. Smartphone, மடிக்கணினி, கணினி போன்றவற்றை குறிப்பிட முடியும். இவை பல்வேறு நிறுவனங்களினால் தயாரிக்கப்படுகின்றன. அதற்கேற்ப இச்சாதனங்களின் தரம் வெவ்வேறு பட்ட நிலைகளில் அமைந்திருக்கும். இச் சாதனங்கள் மனித உடலிற்கு தீங்கு விளைவிக்கும் தன்மை கொண்டவையாகவும் காணப் படுகின்றன.

கதிர் வீச்சலைகளினால் இணைக்கப் படும் இச்சாதனங்கள் எப்போதும் மறைநிலை அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடியவை. அனேகமான ஆய்வு முடிவுகள் எந்நேரமும் மனித உடலுக்கு அருகாமையில் இவ் இலத்திரனியல் உபகரணங்கள் இருப்பதனை தவிர்த்தல் வேண்டும் என எச்சரிக்கின்றது. அதன் தாக்க மானது புற்றுநோயினை ஏற்படுத்தக் கூடிய தன்மை கொண்டவை.

தொடர்ச்சியாக சாதனங்களின் ஒளித் திரையினை குறித்த இடைவெளியில் பார்ப்பதன் மூலம் கண் சார்ந்த பிரச்சினைகள், தலைவலி, கண் எரிச்சல் போன்ற நோய்கள் இதன் மூலம் ஏற்படுகின்றன. நீல நிற ஒளிக் கற்றைகளின் தாக்கமானது இரவு வேளைகளில் அதிகமாக பாதிக்கிறது.


ஸ்மார்ட்போன்களை பயன்படுத்து பவர்கள் சரியான முறையில் ஒளித்திரை சரி செய்கையினை மேற்கொள்வதில்லை. இது சிறியவர் கள் முதல் பெரியவர்கள் வரை பார்வைப் புலனை வெகுவாக பாதிக்கின்றது.

செய்திகளை பரிமாறவும், அரட்டை அடிக்கவும் பல்வேறு செயலிகளை பயன்படுத்துகின்றனர். குறிப்பாக ஸ்மார்ட் போன் பாவனையாளர்கள் தட்டச்சு செய்வதற்கு தமது இரு பெருவிரல்களை மாத்திரமே பயன் படுத்துகின்றனர்.

இவ்வாறான தொடர்ச்சியான பயன் பாட்டினால் பெருவிரலின் தசை பாதிப்படையும் ஒரு புதுவகை நோய் ஏற்படுகின்றது.


இதனை வைத்தியர்கள் **‘Smart phone thumb’** எனும் பெயரில் அழைக்கின்றனர். இவ்வாறு பல்வேறு உடல், உள ரீதியான தாக்கங்களினை இவ் வலைத்தளங்கள் ஏற்படுத்து கின்றன.


சுருங்கக்கூறின் ‘இரு முனைகளும் கூர்மையாக உள்ள ஒரு கத்தியை போன்றதே சமூக வலைத்தளங்கள்’. மிகவும் எச்சரிக்கையாகவும், புத்தி சாதுரியமாகவும் கையாள்வதன் மூலம் எமக்கான பாதிப்பினை தவிர்த்துக் கொள்ளலாம். நாம் எதனைப் பயன்படுத்துகின்றோம், எதற்காகப் பயன்படுத்துகின்றோம் மற்றும் இது பாதுகாப்பானதா என்பதில் அக்கறை கொண்டு செயற்படுவது தனிமனித கடப் பாடாகும். ஏனெனில் தனிமனித குழுக்களின் சேர்க்கையே சமூகம். எனவே தனிமனித பிறழ்வு சமுதாய பிறழ்விற்கு காரணமாகி விடும். ஆதலால் எமது எழுச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் இவ் வலைத்தளங்களை சரியான முறையில் பயன்படுத்தி நன்மையடைந்து கொள்வோம்.












வாரியிழுத்த
கலையுலகின் காதலியே!

வெண்ணுடல் மீது- கருமையள்ளி
பூசிக்கொள்ளும் மடல் விழியே!

உனை....
ஒரு தலையாய்க் காதலிக்க
பல தலைகள் கவிழ்ந்திருக்கும்!

உலகில் ஒரு தலைக் காதல்
வெல்லும்
ஒற்றைக் கதை: இங்கே
நிகழ்ந்திருக்கும்!

நீ பேசா வார்த்தைகளில்
வசப்பட்டு சிறையிருக்க!

வரம் பெற்ற வாலிபங்கள் என்றும்
முதுமையினை துறந்து நிற்கும்!

உன் அழகில் விழுந்த விழி
எழ மறுக்கும் சேதி என்ன?

நீ சொல்லும் சேதி கோடி
அதில் எதை எடுத்து நானும்
சொல்ல!

அவை...
புதுக்கதைகள் புனைந்து வரும்
புதுமைகளும் புரிந்து வரும்!

பழங்கதைகள் சொல்கையிலே
வாழ்ந்தது போல் உள்ளுணர்வு
ஊறும்!

சாதனைகள் தாங்கி நிற்பாய்
வேதனையும் வாங்கி நிற்பாய்!
புன்னகையின் சுவாசம் செய்வாய்
புயல் சோகம் வீசிச் செல்வாய்!

காகிதையே!
கோல் பிடித்து போர் புரிய
உன் மேனியென்ன போர்க்களமா?

ஆயுதத்தின் கூர்மை வெல்ல
அதில் வாழ்வதென்ன அதிசயமா?
காவியங்கள் தான் நிறையும்
நாவல் பல நாதமிடும்!

புதுமை பல வந்த போதும்
உன் புலமை முன்பு
தோற்றே போகும்!

அறிவே!
நூல் இடையைக் காணவில்லை
நீ நூல் தானே நூதனமே!

நூலகமாய் வாழுகின்ற
பூவுலகின் பூரணமே!




கட்டுரை

# கற்றல் செயற்பாடுகளில் மொழித்திறனின் தாக்கம்

திருமதி. விஜிதா முருகவேள்
ஆசிரியர் (PGDE, MEd),
மட்/ககு/ வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம்

இன்றைய கல்வி உலகில் பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் அமுல்படுத்தப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது. இருந்தபோதிலும் கற்றல் அடைவுகளில் குறிப்பிடத்தக்களவு உயர்நிலை இல்லாத நிலையே காணப்படுகிறது. மாணவர்களின் கற்கும் சந்தர்ப்பங்கள் இன்று பல்வேறு கோணங்களில் திசை திருப்பப்படுகிறது. நவீன தகவல் தொழிநுட்ப வளர்ச்சி, போதைப் பொருள் பாவனை, கலாசார சீரழிவுகள் போன்றவற்றில் மாணவர்கள் ஈடுபாடு கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மாணவரின் கற்றல் மீதான நாட்டமும் குறைவடைந்து செல்கிறது.

இதற்கு முக்கிய காரணமாக அமைவது ஆரம்ப நிலையிலேயே மாணவர்கள் மொழித்திறன் விருத்தி தேர்ச்சி பெறாமையாகும். எமது நாட்டின் எழுத்தறிவு வீதம் உயர்வாக காணப்பட்டாலும் முறைசார் பாடசாலைகளில் நுழையும் மாணவர்களில் கணிசமான பங்கினர் பொதுக் கல்வியை நிறைவு செய்யாத நிலையில் இடைவிலகுகிறார்கள். கல்வியமைச்சு ஆய்வுகளின்படி ஆரம்பப் பிரிவு முடிவதற்குள் 6.3% மாணவர்களும் இடைநிலைப்பிரிவு முடிவதற்குள் 10% மாணவர்களும் க.பொ.த.சாதாரண தரத்துடன் 45% மாணவர்களும் பரீட்சையில் தவறி இடை விலகுகின்றனர். இவ் இடைவிலகலில் அதிகளவு தாக்கம் செலுத்துவது மாணவரின் மொழித்திறன் காணப்படுவது ஆய்வுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. கற்றல் என்பது நீண்ட காலமாக மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒரு செயற்பாடாகும். கற்றலை வரையறுப்பது இலகுவானதல்ல. சாதாரணமாக சில திறமைகளை அல்லது தகவல்களை முறையாகப் பெற்றுக்கொள்வது கற்றல் எனக்கூற முடியும். திறமை, முதிர்ச்சி, கற்கும் முறை, கற்றலுக்கான ஆயத்தம், அறிவுமட்டம் போன்ற பல்வேறு காரணிகள் கற்றலில் செல்வாக்கு செலுத்துகின்றன. எனினும் மாணவர்கள் கற்றலில் நாட்டம் கொண்டாலே குறித்த இலக்கை சிறப்பாக எய்த முடியும்.

பாடசாலைக் கல்வியை பொறுத்த அளவில் ஆரம்பக்கல்வி மிக முக்கிய இடம் பெறுகிறது. ஆரம்பக்கல்விப் பிரிவைப் பொறுத்தவரை மொழி, கணிதம். சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள், சமயம், ஆங்கிலம், இணைப் பாடவிதான செயற்பாடுகள், செயற்பட்டு மகிழ்வோம் உடலியக்கச் செயற்

பாடுகள் போன்ற பாடங்கள் இருந்த போதிலும் மொழிப்பாடத்திற்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

ஏனெனில் மொழிப்பாடத்தில் சிறந்த அடைவு மட்டத்தை பெறும் மாணவர்களே ஏனைய பாடங்களில் தமது கற்றல் செயற்பாட்டை திருப்திகரமாக மேற்கொள்கிறார்கள். ஆயினும் மொழிப்பாடத்தில் தங்கிய நிலையில் உள்ள மாணவர்கள் ஏனைய பாடங்களிலும் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் மாணவர்களின் கற்றல் நிலமைகள் மேம்படுத்தப்பட வேண்டுமாயின் அவர்களது தாய்மொழி விருத்தி செய்யப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தளவில் தமிழ் மொழியானது அதிகமான பாடசாலைகளில் தாய் மொழியாகும். ஏனைய பாடங்களை கற்பதற்கான ஊடகமாகவும் அமைந்து உள்ளதால் மொழித்திறன் விருத்தி பின்னடையுமானால் மாணவரின் கற்றல் அடைவுகளும் கீழ் நிலை நோக்கியே காணப்படும். மாணவர் களின் கற்றல் அடைவுகளுக்கும் மொழித்திறனுக்கும் இடையே நேரடித் தொடர்பு இருக்கும் என கருதப் படுகிறது.

மொழித்திறனைப் பொறுத்தளவில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் நான்கு துறைசார் திறன்களையும் குறித்து நிற்கும் பதமாகும். முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம்வரை கற்றல் செயற்பாடுகள் யாவும் தமிழ்மொழியில் அமைவதனால் தமிழ்மொழியின் இந்நான்கு திறன்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. மொழித் தேர்ச்சி மட்டத்தில் நான்கு திறன்களும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த செயற்பாடாகும். ஆதலால் இவற்றில் ஒரு திறனில் மட்டும் ஏற்படும் தாக்கம் கூட மாணவர்களது பரீட்சை புள்ளிகளின் பின்னடைவுக்கு காரணமாக அமையலாம். (மரியா றொசாரியோ, (2013) மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கும் கற்றுக்கொண்ட விடயங்களை சரளமாக விளங்கி அவ்விடயங் களை வெளிப்படுத்தும் போது எழுத்துத்திறன் குறைபாடு காரணமாக தெளிவற்ற நிலையிலும் விளங்காத நிலையிலும் எழுத்துக்கள் அமைவதனால் பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்றனர். அல்லது தாழ்நிலைப் புள்ளிகளை பெறுகின்றனர். இது மொழிப் பாடத்திற்கு மட்டுமல்ல ஏனைய பாடங்களுக்கும் பொதுவானதே. தவணைப் பரீட்சைகளில் அல்லது பொதுப்பரீட்சைகளில் இவ்வாறான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பின்னணியை ஆராயும்போது இவ்வுண்மையை தெரிந்து கெள்ளலாம்.

எனவே இவ்வாறான நிலையில் மாணவர்களது மொழித்திறன் தொடர்பில் எதிர் நோக்கும் பிரச்சினை களை இனம்காண வேண்டிய தேவை ஏற்படுகிறது. அந்த வகையில்

- மாணவரின் குடும்பச் சூழல்,
- மாணவரின் சமூகச் சூழல்
- பெற்றோர்களது கல்வித்தரம்˙
- பெற்றோர்களது பொருளாதார நிலை
- தொடரான கற்றல் நிலைமையின்மை

- மாணவரிடம் காணப்படும் உடல், உள குறைபாடுகள் ( பார்வை, கேள்வி, பேச்சு, இயக்கம்)
- உறுதியற்ற மன எழுச்சி
- முதிர்வுக்கு முன்னரான கற்பித்தல்
- பாடசாலைச் சூழல்
- கற்பிக்கும் ஆசிரியர் தொடர்பான காரணிகள்
- எழுதுதல், வாசித்தல் தொடர்பாக ஆரம்ப வகுப்புகளில் போதியளவு பயிற்சியின்மை
- எழுத்துக்களில் மொழிக் குறியீடுகளை பயன்படுத்தல் தொடர்பாக விளக்கமின்மை
- எழுத்துக்களின் அடிப்படை அமைப்பு பற்றி தெளிவின்மை ஆகிய காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.

மொழித்திறன் குன்றிய மாணவர்களின் ஏனைய பாடஞ்சார் திறன்களை வளர்ப்பதும் சிரமமாகும்.

பிள்ளைகளுக்கு மொழி தொடர்பில் வழங்கப்படும் தேர்ச்சியானது ஏனைய பாடங்களை கற்பிப்பதற்கும் சமூகத்திறன், ஆளுமைத்திறன், மனப்பாங்கு வளர்ச்சி போன்ற பல்வேறு உளத்திறன்களின் விருத்திக்கும் துணை நிற்கின்றன.

எனவே எழுத்துக்களை பிழையின்றி எழுதவும் எழுதியவற்றை திறம்பட வாசிக்கவும் வாசித்த விடயத்தை நன்கு கிரகித்துக் கூறவும் மொழித் திறன்களே துணை நிற்பதனால் இத்திறனை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சமகாலத்தில் மொழியாழுகைத் திறனில் மாணவர்களிடம் பின்னடைவு காணப்படுவதாக கல்வியியலாளர்களினால் கூறப்பட்டு வருகிறது. இப்பிரச்சனை யானது. ஆரம்பப் பிரிவு தொடக்கம் உயர்தரப்பிரிவு வரையிலும் காணப்பட்ட போதிலும் அதன் தாக்கமானது ஆரம்பப் பிரிவிலேயே ஆரம்பமாவதுடன் அதிகளவில் காணப்படுவதாக அவதானிக்க முடிகிறது. இதன் காரணமாகவே மாணவர்கள் ஆரம்பப் பருவத்திலேயே கற்றலில் ஆர்வமின்மை பாடசாலை வரவு ஒழுங்கின்மை அடைவு மட்ட வீழ்ச்சி, ஆசிரியர் மாணவர் முரண்பாடு அதனைத் தொடர்ந்து இடைவிலகல் போன்ற பாதகமான பல்வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்துவதனை அறிந்து கொள்ளலாம்

மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறன்களையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தி செம்மைப்படுத்தும் செயன்முறையாக கல்வி விளங்குகின்றது. மாணவர்களின் எல்லாத் திறமைகளையும் செம்மையாக அமைப்பதற்கு மொழித்திறன் என்பது மிக முக்கியமானதாகும். தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்துவதற்கு மொழித்திறன் மிகவும் சரியானதாய் அமைய வேண்டும். தாய் மொழியில் தேர்ச்சி அடைந்து கொள்பவர்களே ஏனைய மொழிகளையும் கற்று சிறப்பு பெறுகின்றனர்.



கவிதை

# வாசிப்பை நேசிப்போம்

க.மூலக்ஷினி
மட்/ககு/வாழைச்சேனை இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)

உலகில் விடியல் எங்குள்ளது தேடுங்கள்
ஆயிரம் ஆயிரம் கண்கள் ஒருமித்துத் தேடினாலும்
அன்பு உள்ளங்களில் ஊற்றெடுக்கும் விடியல்
இளைய தலைமுறையின் வாசிப்பில் மலரும்!

இளமையில் கல்வி சிலையில் எழுத்து அது பழமொழி
ஈன்றெடுக்கும் அன்னையின் கருவறையில்
உருவாக வேண்டும் உத்தம வாசிப்பு
காலத்தை வெல்லும் கனியமுது அதுவாகும்!

சிறாரின் சிந்தனைத் துளியாய் வாசிப்பு
தேசத்தை வெல்லும் சிகரத்தைத் தாங்கும்
உறவுகளை மதிக்கும் உள்ளத்தை தூய்மையாக்கும்
சாதனை படைக்கும் தன்னம்பிக்கை பிறக்கும்!

எதிர்கால வாழ்வை செழிப்பாய் மாற்றும்
உள்ளத்தில் அமைதி அருவியாய் ஊற்றும்
தென்றலாய் கலைகளும் கரும்பாய் இனிக்கும்.
வீறு கொண்டு எழு துணிவு பிறக்கும்!

நாட்டின் விருத்தியும் நலனும் ஊடுருவும்
வீட்டின் அடிமை நிலை ஒழியும்
பாரினில் பைந்தமிழ் பொங்கிப் பெருகும்
மனித குலத்தின் மக்கு எனும் தொனி அடியோடு அழியும்!

மாண்பும் அறமும் அமுதமாய் ஒளிரும்
பண்பாடு கலாச்சாரம் பக்குவமாய் துளிர்க்கும்
சொக்கத்தின் வாசல் தனை திறக்கும் திறப்பாவோம்
சேவை புரிதலினை துல்லியமாய் மாற்றுவோம்!

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்பது முதுமொழி
அதுவே இளையவனை சாதனையாக்கும் என்பது புதுமொழி
பதற்றம் நீங்கும் பக்குவம் பிறக்கும்
நேர்மை மிளிறும் நிஜங்கள் உருவாகும்!

மானம் காக்கும் மனித குலம் உருவாகும்
மகிமை போற்றும் சமூகம் உருவாகும்
ஆக்கமும் ஊக்கமும் அடித்தளமாய் அமையும்
அறிவும் ஆற்றலும் ஆறாய் பெருகும்!

கோபம் கொண்ட பிள்ளை குணவானாய் மாறுவான்
குமுறல் கொண்ட பிள்ளை தெளிவைத் தேடுவான்
ஆசைகள் அடக்குவான் ஆறுதலாய் மாறுவான்
சிந்தையில் தெளிவும் திடமும் கொள்வான்!

சிறுவர் உரிமை சமகாலத்தில் வலம் வரும்
தேடலும் ஆற்றலும் தேசத்தில் சிறக்கும்
துஷ்பிரயோகங்கள் சின்னா பின்னமாய் அழியும்
பாரதியின் உரிமைக் குரல் பரவலாய் திரியும்!

பதற்றமான சிறுவரை பண்பான வாசிப்பும்
குழப்பமான சிறுவரை குறிப்பான வாசிப்பும்
அடக்கமான சிறுவரை அமைதியான வாசிப்பும்
ஆக்கும் போற்றும் ஆழமாக நேசிக்கும்!

மனித நேயங்களை மங்காமல் காக்கும்
குற்றம் குறைகளை தீயாய் எரிக்கும்
எதிர் கால வாழ்வை ஒளிமயமாக்கும்
சின்னஞ் சிறாரின் சிறப்பான வாசிப்பு!






# மட்டக்களப்பில் சஞ்சிகை வளர்ச்சி

**சிவராசா ஓசாநிதி**
ஆராய்ச்சி உதவியாளர்
RIC AHEAD Project
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மட்டக்களப்புப் பிரதேசம் வடக்கில் கோறளைப்பற்று பிரதேச செயலகம், கிழக்கில் மட்டக்களப்பு நகர், தெற்கில் போரதீவுப்பற்று, மேற்கில் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மட்டக்களப்பில் உள்ளடங்கும் வெருகல், கதிரவெளி, வாகரை, பனிச்சங்கேணி, ஓட்டமாவடி, வாழைச்சேனை, கல்குடா, சித்தாண்டி, வந்தாறுமூலை, ஏறாவூர், தாண்டவன் வெளி, கல்லடி, சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, மண்முனை, செட்டிபாளையம், பளுகாமம், களுவாஞ்சிக்குடி, போரதீவு, பட்டிருப்பு, மண்டூர், குருமண்வெளி, கல்லாறு, துறைநீலாவணை, என்னும் பிரதேசங்களில் வெளிவந்த சஞ்சிகைகளே இங்கு நோக்கப்படுகின்றன.

இங்கு மட்டக்களப்புச் சஞ்சிகைகளை தனியாள் சஞ்சிகை, கல்வி ஸ்தாபன சஞ்சிகை, உள்ளூராட்சி திணைக்களச் சஞ்சிகை, மாவட்ட செயலகச் சஞ்சிகை, கூட்டுறவுச் சங்க சஞ்சிகை, காகித ஆலைச் சஞ்சிகை, கமநல அபிவிருத்தித் திணைக்கள ஊழியர் நலன்புரிச் சங்கச் சஞ்சிகை, சமூகத் தொடர்பு நிலையச் சஞ்சிகை, அரச சார்பற்ற திணைக்களச் சஞ்சிகை, சுதந்திர ஆய்வு வட்டச் சஞ்சிகை, பிரதேச செயலகச் சஞ்சிகை என்றவாறு பாகுபடுத்தி நோக்கப்படுகிறது. தனியாள் சஞ்சிகைகளாக, 'பாரதி'(1947), 'பாடுமீன்'(1960), 'தலைவன்'(1969), 'மலர்'(1970), 'தாரகை' (1981), 'களம்' (1983), 'சுமைதாங்கி' (1983), 'வயல்' (1986), 'பிரணவம்'(1980), 'படி' (1993), 'சுவைதிரள்' (1993), 'உதயம்'(1994) 'கவிதேசம்'(2003), 'பூவரசு' (1994), 'அரங்கம்' (1995), 'போது' (1998), 'குரல்' (1999), 'மறுகா' (2004), 'கா'(2005), 'செங்கதிர்' (2008), 'கதிரவன்' (2008) 'தென்றல்'(2009) 'மகுடம்'(2012) என்னும் சஞ்சிகைகள் காணப்படுகின்றன.

'பாரதி' என். செபரத்தினத்தினத்தால் மண்டூரிலிருந்து வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகை குறித்து செ. யோகராசா பின்வருமாறு கூறுகிறார். "குறிப்பிட்ட இலட்சியங்களுக்கு அப்பால் ஆர்வம் காரணமாகவே 'பாரதி' சஞ்சிகை வெளியிடப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் கூட, ஆழமானதொரு சமூக

நோக்கு 'பாரதி'க்கு இருந்துள்ளமையை சஞ்சிகையின் மகுட வாசகத்தின் மூலம் அறியமுடிகின்றது. "சாதிச் சண்டை போச்சோ, உங்கள் சமயச் சண்டை போச்சோ" என்ற பாடலடிகளே அம்மகுட வாசகமாகிறது.

சமகால உலக, இலங்கைச் செய்திகள், இலங்கையின் சமூக, அரசியல் பிரச்சினைகள் என்பன ஆசிரியர் பக்கங்களூடாகவும் அவ்வப்போது படைப்புக் களுக்கூடாகவும் வெளியிடப்பட்டள்ளமை இதற்குச் சான்றாகிறது. (யோகராசா, செ., 1999) 'பாரதி'யில் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என்பன இடம்பெற்றுள்ளன. கட்டுரைகளில் கலை சார்ந்த உதாரணமாக 'லலித படிப்பு' (மு.கணபதிப்பிள்ளை), 'தலைவனைத் தொடர்ந்து தருமந்தானே' (மயிலன்) என்னும் கட்டுரைகளும் விஞ்ஞானம் சார்ந்த உதாரணமாக 'அணு—கோ' (கோணேசப்பிள்ளை) என்னும் கட்டுரையும், மற்றும் சமூகம் சார்ந்த உதாரணமாக 'தீண்டாமையின் திரு.நடனம்' (செல்வநாயகம்) என்னும் கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. சிறுகதைகளில் கணிசமானவை காதல் சார்ந்ததாக அமைகிறது. உதாரணமாக 'விதத்தில் புதுயுகம்' (பாஞ்சாலி), 'சதிகாரி' (எம்.எம்.சாலிஹ்) என்னும் சிறுகதைகள். கவிதைகள் தமிழர் கடமை சார்ந்தாக அமைகிறது. உதாரணம் 'கோஸ்' என்னும் கவிதை. இவ்வாறு கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என்பன 'பாரதி'யில் இடம்பெற்றுள்ளன.

'பாடுமீன்' நீலாவணனை ஆசிரியராகக் கொண்டு துறைநீலாவணையில் இருந்து வெளிவந்தது. கவிதைகள், சிறுகதைகள் என்பன இதில் இடம்பெற்றுள்ளன. கவிதைகளுக்கு உதாரணமாக 'வெளுத்துக்கட்டு' என்னும் கவிதையையும், சிறுகதைகளுக்கு உதாரணமாக 'மூக்குத்தி' (சா. தருமலிங்கம்),'கூத்து', என்னும் சிறுகதைகளையும் குறிப்பிடலாம். அதேபோன்று கட்டுரைகள், மற்றும் கேள்வி பதில்கள், ஓவியங்கள் என்பனவும் இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

'மலர்' இரா.நாகலிங்கத்தினால் (அன்புமணி) வெளியிடப்பட்டது. "உள்ளத்தினிலே உண்மை பொழிய உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்." என்னும் மகுட வாசகத்தைக் கொண்டுள்ளது. ('மலர்' :1970) 'ஒரு அனுபவம்', 'என்னைக் கவர்ந்த பாத்திரம்','வீசும் தென்றல்','ரீங்காரம்' என்ற தலைப்புக்களில் வாசகர்களை ஊக்குவிக்கும் விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

'தாரகை' கண. மகேஸ்வரன் என்பவரால் வெளியிடப்பட்டது. கலை இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் வெளிவந்தன. உதாரணமாக 'தரையும் தாரகையும்' (ப.நீலகண்டன்), நூல் விமர்சனம் உதாரணமாக 'இரு பார்வைகள்' முதலியன இடம்பெற்றுள்ளன. 'பாரதி சிறப்பிதழ்', 'கவிதைச்சிறப்பிதழ்' முதலிய சிறப்பிதழ்களும் வெளிவந்துள்ளன. க.கைலாசபதி, எஸ்.பொ, டானியல் முதலியோரின் படங்கள் 'தாரகை'யில் இடம்பெற்றுள்ளன.

'களம்' இலக்கிய காலாண்டுச் சஞ்சிகையாகும். வீ.ஆனந்தன், உமா வரதராஜன், சோலைக்கிளி, முருகபூபதி, கோகிலா மகேந்திரன், சாருமதி, எம்.எச்.எம். அஷ்ரப் தாமரைச்செல்வி. பைஸ்தின், மண்டூர் அசோகா, ஹனிபா, சண்முகம் சிவலிங்கம், ஞானரதன், அ.ஸ. அப்துல்ஸமது என இலங்கையின் பிரபல எழுத்தாளர்கள் இதில் எழுதியுள்ளார்கள்.

கலை இலக்கியப் போட்டிகளையும் 'களம்' நடாத்தியது. உதாரணமாக றோஸ் பற்றி நினைவுச் சிறுகதைப் போட்டி, சட்டத்தரணி ந.சின்னையா நினைவுக் கவிதைப்போட்டி என்னும் போட்டிகளைக் குறிப்பிடலாம்.

'களம்' ஏழு சஞ்சிகைகளுடன் நின்று விட்டாலும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளதென அன்புமணி 'தமிழலை' பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். "தேசிய மட்டத்தில் ஒரு உண்மையான ஸ்தானத்தை 'களம்' நிச்சயம் பிடிக்கும் என்ற நம்பிக்கை துளிர்விட்ட சமயத்தில் 'களம்' மீண்டும் நின்று விட்டது. எவ்வாறாயினும் ஈழத்து இலக்கிய உலகில் ஆழமான அடிச்சுவட்டை 'களம்' விட்டுச் சென்றுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை." (அன்புமணி, தமிழலை: 2003.09.27)

'சுமைதாங்கி' ரீ.பாக்கியநாயகத்தினால் வெளியிடப்பட்ட கிறிஸ்தவ மாதச் சஞ்சிகை. 1983 ஏப்ரல் தொடக்கம் 1985 மே வரை 18 சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. (அன்புமணி, தமிழலை: 2003.09.20) வாசகர் கலந்து கொள்ளும் பகுதிகளாக 'வெண்பாப் போட்டி', 'வானவில்', 'வேத அறிவுப் போட்டி', 'சிறுகட்டுரைப் போட்டி' முதலியனவும் இச்சஞ்சிகையில் இடம் பெற்றன.

'வயல்' சாருமதி யோகநாதன் என்பவரால் வெளியிடப்பட்டது. மார்க்சிசப் பார்வை கொண்டது. இச்சஞ்சிகை தோழர் கிருஷ்ணக் குட்டியின் நினைவாக சிறப்பிதழ் ஒன்றையும் வெளியிட்டது. 1986 முதல் 1988 வரை 4 சஞ்சிகைகள் மட்டுமே வெளிவந்துள்ளன. (அன்புமணி, தமிழலை: 2003.09.20) 'படி' வெ.தவராசாவினால் வெளியிடப்பட்டது. 'படி' மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த சஞ்சிகைகளை விட வேறுபட்ட விடயங்களைக் கொண்டு வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக சிங்கள மொழி சஞ்சிகைகளில் வெளிவந்த ஆக்கங்களை மொழி பெயர்த்து வெளியிட்டமை, புலம்பெயர் தமிழர்களால் எழுதப்பட்ட தொகுப்புக்கள் தொடர்பாக 'தூர வெளிச்சங்கள்' எனும் தலைப்பில் அறிமுகங்கள் மற்றும் விமர்சனங்களை வெளியிட்டமை, 'மெசேயின் டயறி' எனும் தலைப்பில் ஆனந்தனினால் மலையாள மொழியில் வெளிவந்த சிறுகதைகள் மற்றும் சில முக்கிய விடயங்களை மொழிபெயர்த்து பிரசுரித்தமை என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கன. ஐந்தாவது சஞ்சிகை எவ்.எக்ஸ்.சி. நடராசாவின் சிறப்பு மலராக வெளிவந்தது.

'சுவைத்திரள்' சி.தர்மகுலசிங்கத்தினால் வெளியிடப்பட்ட நகைச்சுவைச் சஞ்சிகை ஆகும். இது 1963இல் கொழும்பிலிருந்து வெளிவந்த 'சிரித்திரன்' பாணியில் அமைந்த சஞ்சிகையாகும். 1993 முதல் 2000 வரை 18 சஞ்சிகைகள் வெளிவந்துள்ளதாக அறிய முடிகின்றது. (அன்புமணி, தமிழலை: 2003.09.20) தர்மகுலசிங்கம் 'கவிதேசம்' எனும் சஞ்சிகையையும் வெளியிட்டுள்ளார். 'கவிதேசம்' கவிதைகளுக்கான சஞ்சிகையாகும். இச்சஞ்சிகையின் இலக்கு குறித்து ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார். "எத்தனை ஆண்டுகள் 'கவிதேசம்' வந்தது என்பது வரலாறாக இருக்காது.

அதில் சொல்லப்பட்ட ஒரு சில கவிதையாவது எதிரேறிச் செல்லட்டும். அடுத்த தலைமுறைக்கு! அதுவே 'கவிதேச'த்தின் இலக்கு" (தர்மகுலசிங்கம், சி.,'கவிதேசம்': 2003). பல எழுத்தாளர்களது கவிதைகள் இதில் இடம் பெறுகின்றன. உதாரணமாக 'பலகால்' (நகுலன்), 'விபுலானந்தர் வாய்மொழிகள்', 'ஐந்துலாம்படி' (கல்லடி கதிர்காமு), 'விடியலை நோக்கி' (து.பிரபாஹ்) ஆகியோர்களின் கவிதைகளைக் குறிப்பிடலாம்.

'உதயம்' உஷாதேவி சிவதாசனால் வெளியிடப்பட்டது. 'உதயத்தின்' நோக்கம் குறித்து ஆசிரியர் (உஷாதேவி சிவதாசன்) கூறுவது குறிப்பிடத்தக்கது. "கலை இலக்கியம் இல்லாத வாழ்க்கை ஆலயங்களே இல்லாத வனாந்தரங்கள் போலவும், உப்பில்லாப் பண்டங்கள் போலவும் உப்புச்சப்பற்று சூனியமாய் தோன்றும். எனவே மக்கள் நலன் கருதி, வாசகர்களிடையே வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்த வேண்டுமெனும் குறிக்கோளுடன் 'உதயம்' பவனி வருகிறான். (உஷாதேவி சிவதாசன். 'உதயம்': 1994). நேர்காணல்களுள் உதாரணமாக கோமல் சுவாமிநாதன், கா. சிவத்தம்பி ஆகியோருடனான நேர்காணல்களும், கவிதைகளுள் உதாரணமாக 'பொய்கை பொங்குகிறது' (நீலாவணன்), 'மழை' (சுனர்ந்தினி) என்னும் கவிதைகளும், கட்டுரைகளுள் உதாரணமாக 'தொலைக் காட்சியில் பரதக்கலை' (கி.பி.அரவிந்தன்), 'அரங்கேற்றம்' (து.குருசாமிஐயர்) என்னும் கட்டுரைகளையும் குறிப்பிடலாம்.

'பூவரசு' வாசுதேவன் லோரன்ஸினால் வெளியிடப்பட்டது. 'அரங்கம்' இரா.தவராசாவினால் வெளியிடப்பட்டது. இருமாதச் சஞ்சிகையாக வெளியிடப் பட்ட 'அரங்கம்' மாணவர்களுக்கு பயன்பெறும் விடயங்களைத் தாங்கி வெளியிடப்பட்டது. ஆசிரியர் தான் கற்ற விடயங்களை மிகப் பொருத்தமாக இச்சஞ்சிகையில் சேர்த்துக் கொண்டார். சிவவாக்கியம் என்ற பெயரில் இடம்பெற்ற தத்துவக் கருத்துக்கள் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தன.

'போது' வாகரைவாணனால் (அரியரத்தினம்) வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகை குறித்து அன்புமணி பின்வருமாறு கூறுகிறார். "1998இல் ஆரம்பமாகிய 'போது' இதுவரை 31 சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. 'ஆளும் வளரணும் அறிவும் வளரணும்' என்னும் பட்டுக் கோட்டை கல்யாணசுந்திரத்தின் கவிதை வரிகளை மகுட வாசகமாகக் கொண்ட 'போது' அதற்கமைவான கதை, கவிதை, கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. தமிழ் உணர்வுகளையும், தமிழ் அறிவையும் வளர்க்கும் வகையில் இதன் ஆக்கங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது."(அன்புமணி, தமிழலை: 2003.09.20)

'மறுகா' த. மலர்ச்செல்வனினால் வெளியிடப்பட்டது. இளந்தலை முறையினருக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இச்சஞ்சிகை அமைந்துள்ளது. இதன் நோக்கம் குறித்து முதலாவது இதழில் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. "குண்டுச்சட்டிக்குள் குதிரையோடிக் கொண்டிருக்கும் மாந்தர்களைக் கண்ணைக்கட்டி காட்டில விடுவது எமது நோக்கமல்ல. மின்மினியை உருவாக்கி அதனூடே இயங்க வேண்டியுள்ளது. இல்லை யெனில் மலிவான எழுத்தும், சக்திT.V, சக்தி F.M, தென்றலும் பரம்பரையினரின் மண்டைக்குள் களிகளைப் பரப்பி விடும் இச்செயற்பாடு தான், மெல்ல மெல்ல நிகழ்ந்து வருகிறது.

(மாந்தர்களுக்கு போதை ஊட்டும் சின்னத்திரைகள் மந்தைகளாக உருவாக்கி வருவது வேறு விடயம்.) இவற்றிலிருந்து இளையதலைமுறையினரை விடுவிப்பதையும் நவீன தமிழின்பால் அக்கறை ஏற்படுத்துவதையும் 'மறுகா' பிரதானமாகக் கொள்ளும்." ('மறுகா', நவம்பர்- டிசம்பர்: 2004)

'கா' நவரட்ணராஜாவினால் வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகையின் நோக்கம் பின்வருமாறு அமைகிறது. 'கா' அனைத்துச் சாத்தியப்பாடுகளுக்குமான திறவு கோலாக வெளிவருகிறது. புதிய உடைப்புக்களுக்கும், புதிய வடிவங்களுக்கும் உள்ளடக்கங்களுக்குமான முயற்சியாகவும் திகழும்." ('கா', ஒகஸ்ட்: 2005) குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என்பன இதில் இடம்பெற்றுள்ளன. கவிதைகளுக்கு உதாரணமாக வாசுதேவனின் 'எச்சமிடுவது விடுத்து', த.மலர்ச்செல்வனின் 'போர்வீரன் நாறிய நாள்', ஜெயசீலனின் 'புரிதல்' என்னும் கவிதைகளையும், கட்டுரைகளுக்கு உதாரணமாக ராசாத்தியின் 'வயிரவன் சடங்கு', தேவடியானின் 'எங்கள் மரபும் தொன்மையும்' ஆகியோர்களின் கட்டுரை களையும், சிறுகதைகளும் உதாரணமாக 'சி.வி வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே' என்னும் சிறுகதையையும் குறிப்பிடலாம்.

'செங்கதிர்' கோபாலகிருஷ்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப் பட்டது. "இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை" என்ற மகுடவாசகத்தை முன்னிலைப்படுத்தி வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் முதலாவது சஞ்சிகையில் அதன் நோக்கம் குறித்து பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "கலை இலக்கியச் செயற்பாடுகளினூடாக மனிதம் மலரவும் மானுடம் ஓங்கவும் 'செங்கதிர்' உழைக்கும்" (செங்கதிர்: ஜனவரி, 2008). இலங்கையின் பல எழுத்தாளர்களுக்கு களமமைத்துக் கொடுத்தது. உதாரணமாக செ. குணரத்தினம், ஏ. பீர்முகம்மது, பத்மாசோமகாந்தன், திலகபாமா, சேயோன் ஆகியோர்களுக்கு களமமைத்துக் கொடுத்துள்ளதைக் குறிப்பிடலாம்.

'கதிரவன்'(2008) சஞ்சிகை த.இன்பராசாவினால் புதுக்குடியிருப்பிலிருந்து வெளியிடப்பட்டது. புதிய படைப்பாளிகளையும், மூத்த படைப்பாளி களையும் இனங்காட்டியுள்ளது. உதாரணமாக க.மோகன்ராஜ், ந.சறோஜினி, ச.ஜெகரூபன் ஆகிய புதிய படைப்பாளிகளையும், த.பூபாலசிங்கம், த.கோபாலகிருஷ்ணன் என்னும் மூத்த படைப்பாளிகளையும் இனங் காட்டியுள்ளது.

'தென்றல்' கிருபாகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "தேசிய பல்சுவைக் குடும்பச் சஞ்சிகையாகும். முத்திங்கள் இதழாக வெளிவரும் இச்சஞ்சிகையில் ஆய்வுக் கட்டுரைகள், குறுக்கெழுத்துப் போட்டிகள், புலமைப்பரிசில் வினாவிடைகள், குடும்ப மருத்துவம் பற்றிய தகவல்கள், நாட்டாரியல், நகைச்சுவை என்னும் விடயங்கள் வெளிவருகின்றன.

'மகுடம்' மைக்கல்கொலினை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகையாகும். ஒவ்வோர் ஆண்டினதும் இறுதி காலாண்டுச் சஞ்சிகை சிறப்பிதழ்களாக வெளிவருகிறது. உதாரணமாக மலையகச் சிறப்பிதழ்(2012), தமிழ்தூது தனியநாயகம் அடிகளது சிறப்புமலர்(2014), கே. டானியல் சிறப்பு மலர், சி.மௌனகுரு சிறப்புமலர் என்னும் சிறப்பிதழ்களைக் குறிப்பிடலாம்.

*மலையக சிறப்பிதழ் மலையக மக்களின் பண்பாட்டுக் கோலங்களை கட்டுரைகளினூடாக வெளிப்படுத்தியுள்ளது. உதாரணமாக 'நடேசய்யர் வாழ்வும் பணியும்' (அந்தனி ஜீவா) என்னும் கட்டுரையைக் கூறலாம். அத்தோடு ஆய்வு நூல் வெளியீடுகளையும் இவ்விலக்கிய வட்டம் மேற்கொண்டு வருகிறது. உதாரணமாக 'கிழக்கிலங்கை தமிழ் மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியம்'(2017) என்னும் நூலைக் குறிப்பிடலாம். இவ்வாறான தனியாள் சஞ்சிகைகள் மட்டக்களப்புச் சஞ்சிகைகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.*

*கல்வி ஸ்தாபனச் சஞ்சிகைகளை பல்கலைக்கழகச் சஞ்சிகைகள், பாடசாலைச் சஞ்சிகைகள் எனப் பாகுபடுத்தப்படுகிறது. குறிப்பாக மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து பல சஞ்சிகைகள் வெளிவந்தன. கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தினால் 'வெளி' (1998), 'நெய்தல்'(2014) என்னும் சஞ்சிகைகளும், தமிழ்ச்சங்கத்தினால் 'தழல்' என்னும் சஞ்சிகையும், கல்விசாரா ஊழியர்களால் 'கிழக்கொளி'(1990) என்னும் சஞ்சிகையும், புவியியல் பீடத்தினால் 'புவியருவி', மற்றும் 'கிழக்குப் புவியியலாளன்'(2012), என்னும் சஞ்சிகைகளும், இந்துப் பண்பாட்டுக் கழகத்தினால் 'சனாதனம்'(2008) என்னும் சஞ்சிகையும், விஞ்ஞான பீடத்தினால்* 'Blossom', *என்னும் சஞ்சிகையும், வணிக முகாமைத்துவ பீடத்தினால் 'இலக்கு'(1998), மற்றும் 'கூர்மை' என்னும் சஞ்சிகைகளும், சமூக விஞ்ஞான கற்கைத் துறையினால் 'மெய்ம்மை'(2016) என்னும் சஞ்சிகையும் வெளிவந்துள்ளன.*

*கிழக்குப் பல்கலைக்கழகம் விபுலானந்த அழகியற் கற்கை நிறுவகத்திலிருந்து 1991இல் 'சுருதி' என்னும் சஞ்சிகை வெளிவந்தது. இது இசை மற்றும் நடனம் என்னும் கலைகளின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் வெளிவந்தது. "இசைவளர் விபுலாநந்த இன்பருட் திருவடியில் இசைமிகு 'சுருதியை அர்ப்பணிப்வோமே" ('சுருதி', 1996) என்பதன் மூலம் இதனை அறியலாம். இசை நாடகப்பள்ளியில் இருந்து (குருக்கள்மடம்) 'வியளம்'(2013) என்னும் சஞ்சிகை வெளிவந்தது. இச்சஞ்சிகை சிறுவர்கள், இளைஞர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கும் கொண்டாடுவதற்குமான களமாக அமைந்தது. அரசினர் ஆசிரியர் கலாசாலையிலிருந்து 'கலைச்செல்வி' என்னும் சஞ்சிகையும், மட்டக்களப்பு தேசிய கல்லூரியிலிருந்து 'வித்தியாசாகரம்' என்னும் சஞ்சிகையும், மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து 'வித்தியா' என்னும் சஞ்சிகையும் வெளிவந்துள்ளது.*

*மட்டக்களப்பின் பல பாடசாலைகளிலிருந்தும் சஞ்சிகைகள் வெளி வந்துள்ளன. மட்./ புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை 125ம் ஆண்டு நினைவு மலராக 'சிசிலிய ராகங்கள்'(2002) என்னும் சஞ்சிகையை வெளியிட்டது. இச்சஞ்சிகை மாணவரின் சிந்தனையை சீர்செய்து சரிபார்க்கும் களமாக அமைகிறது. (அருள்மதியா (அதிபர்), 'சிசிலிய ராகங்கள்: 2012). மட்./இந்துக்கல்லூரியில் இருந்து 'பரணி' மற்றும் 'விஞ்ஞானச்சுடர்' என்னும் சஞ்சிகைகளும், மட்./ வின்சன் தேசிய பாடசாலையிலிருந்து 'பேழை'(1977) என்னும் சஞ்சிகையும் வெளிவந்து உள்ளன. 'பேழை' என்னும் சஞ்சிகை மாணவர்களின் பண்பை வெளிப்படுத்துவதோடு பழமையையும், புதுமையையும் இணைக்கும் கருத்துச் செறிவுள்ள பெயராகவும் பிறந்துள்ளது.*

*சிவானந்தா தேசிய பாடசாலையில் இருந்து 'சிவானந்தன்' என்னும் சஞ்சிகையும், மட்./மெதடிஸ்த மத்திய கல்லூரியிலிருந்து 'ஜெயகேசரி'(1946), 'இளைஞன்' (1947), 'யுவன்' (1948), 'பரணி' (1960), 'ஒளிச்சுரம்'(1997), செம்மை' (1988) என்னும் சஞ்சிகைகளும், மட்./புனித மிக்கேல் கல்லூரியிலிருந்து 'றுகரம்', 'உயிர்', 'பாடுமீன்'(2015) என்னும் சஞ்சிகைகளும், மட்./ஓட்டமாவடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து 'உதய நிலா' என்னும் சஞ்சிகையும், மட்./செங்கலடி மத்திய கல்லூரியிலிருந்து 'கோல்'(2000) என்னும் சஞ்சிகையும், மட்./வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து 'உதயன்' (2007) என்னும் சஞ்சிகையும், மட்./கறுவாக்கேணி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 'புத்தொளி' என்னும் சஞ்சிகையும், மட்./வந்தாறுமூலை ஸ்ரீ மகாவிஷ்ணு வித்தியாலயத்திலிருந்து 'ஏர்' (1998) என்னும் சஞ்சிகையும், மட்./வாழைச்சேனை இந்துக்கல்லூரியிலிருந்து 'செவ்வாழை' என்னும் சஞ்சிகையும், மட்./புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயத்திலிருந்து 'கலையருவி'(2010) என்னும் சஞ்சிகையும், மட்./மயிலம்பாவெளி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 'மயூரம்'(2013) என்னும் சஞ்சிகையும், மட்./ககு/ வட்டவான் கலைமகள் வித்தியாலயத்திலிருந்து 'கலைப்பேழை'(2015) என்னும் சஞ்சிகையும் மட்டக்களப்பிலுள்ள பாடசாலைகளிலிருந்து வெளிவந்தன.*

*உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து உள்ளூராட்சி வாரத்தினை சிறப்பிக்கும் வகையில் 2003ம் ஆண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் உள்ளூராட்சி சிறப்பு மலர் வெளிவந்தது.*

*மாவட்ட செயலகத்திலிருந்து த.மலர்ச்செல்வனினால் 'களப்பு' (2011), 'பெட்டகம்' (2013), 'எழுகதிர்' (2013) என்னும் சஞ்சிகைகள் வெளிவந்தன. 'களப்பு' ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளில் வெளிவந்தது. உதாரணமாக 2013இல் பாரம்பரிய உணவும் இனக்குழு வாழ்வியலும்' என்னும் தொனிப்பொருளில் வெளிவந்துள்தைக் குறிப்பிடலாம். 'பெட்டகம்' மட்டக்களப்பின் பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை உதாரணமாக ஏடு, அகப்பை, அரிக்கிமில, விசிறி, பன்பாய், உரல், சங்கு, மத்தளம், வடிகல், மண்டா போன்ற பொருட்களை ஆவணப்படுத்தும் நோக்கில் வெளிவந்தது.*

*கூட்டுறவுச் சங்க சஞ்சிகையாக 'மலரும் வாழ்வு' என்னும் சஞ்சிகை வெளிவந்தது. காகித ஆலைச் சஞ்சிகையாக 'காகிதமலர்', கமநல அபிவிருத்தித் திணைக்களச் ஊழியர் நலன்புரிச் சங்கச் சஞ்சிகையாக 'கமநலம்'(2007) என்னும் சஞ்சிகைகளும் வெளிவந்தன.*

*சமூகத்தொடர்பு நிலையச் சஞ்சிகையாக 'தொண்டன்'(1969) என்னும் சஞ்சிகை வெளிவந்தது. இது கிறிஸ்தவசமய சமூக இலக்கியச் சஞ்சிகையாக அமைந்தது. 1969இல் இதன் ஆசிரியராக* J.A.G.*ரட்ணகுமார், 1980களில் அந்தனிஜான் அழகரசன், 2003களில் மலர்வேந்தன் ஆகியோர்கள் இதன் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளனர். தற்பொழுது(2018) ரமேஷ் கிறிஸ்டி என்பவர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இச்சஞ்சிகை குறித்து எதிர்மன்னசிங்கம் அவர்கள் கூறுவது குறிப்பிடத்தக்கது.*

"'தொண்டன்' கிழக்கிலங்கையில் சஞ்சிகைகள் அரிதாக இருந்த காலத்தில் அவ்வெற்றிடத்தை நிரப்பியதோடு விரிந்த சஞ்சிகையாக ஆரம்பத்திலிருந்து தற்போது இலக்கியம், அரசியல், நகைச்சுவை, முதலான பல் அம்சங்களையும் தாங்கி வெளிவருகின்றது." ( எதிர்மன்னசிங்கம், எஸ்., 2014)

அரச சார்பற்ற அமைப்புக்களான மன்று அமைப்பின் மூலம் 'சூழல் சுடர்' சஞ்சிகையும் சூரியா பெண்கள் அமைப்பின் மூலம் 'பெண்'(1991) சஞ்சிகையும், பாண்டிருப்பு அகரம் சமூக அமைப்பின் ஊடாக 'விருந்து' என்னும் சஞ்சிகையும், கண்ணகி இலக்கிய கூடத்திலிருந்து 'கூடல்'(2011) என்னும் சஞ்சிகையும் வெளிவந்தது. இவற்றுள் 'பெண்' சஞ்சிகை பெண்ணிலைவாதக் கருத்துக்களைப் பரவலாகக் கொண்டு வெளிவருகிறது. 'தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய் உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்' என்னும் மகுடவாசகத்தைத் தாங்கி இது வெளிவருகிறது. இச்சஞ்சிகையின் முக்கிய நோக்கமானது இன்றைய வாழ்க்கைக் கட்டுமானத்தில் பெண்கள் பல்வேறுபட்ட தளங்களில் தமது ஆளுமைகளைப் பதித்துக்கொண்டும், பல பிரச்சினைகளை எதிர்கொண்டுமிருக்கிறார்கள். இவற்றை வெளிப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.('பெண்':1996).

மட்டக்களப்பு சுதந்திர ஆய்வு வட்டம் 'மொழிதல்' என்ற ஆய்வுச் சஞ்சிகையை 2014இல் இருந்து வெளியிட்டு வருகின்றனர். இச்சஞ்சிகையின் ஆசிரியராக சி.சந்திரசேகரம், வ.இன்பமோகன் ஆகியோர்கள் உள்ளனர். இச்சஞ்சிகை ஆண்டுக்கு இரு இதழ்கள் என்ற அடிப்படையில் வெளியிட்டு வருகின்றது. இச்சஞ்சிகையில் அரசியல், சமூகவியல், கலை, இலக்கியம், பண்பாடு, மானிடவியல், தத்துவம், வரலாறு, சமயம், முதலானவை தொடர்பான நுண்ணிய ஆய்வுக் கட்டுரைகளை உட்கொண்டு வெளிவருகின்றது.

பிரதேச செயலகச் சஞ்சிகைகளை நோக்கும்போது மட்டக்களப்புப் பிரதேசத்தில் 14 பிரதேச செயலகப் பிரிவுகள் காணப்படுகின்றன. அவையாவன கோறளைப்பற்று வடக்கு (வாகரை), கோறளைப்பற்று வாழைச்சேனை, கோறளைப்பற்று மத்தி (முஸ்ஸிம்), கோறளைப்பற்று மேற்கு (முஸ்ஸிம்), கோறளைப்பற்று தெற்கு (கிரான்), ஏறாவூர்பற்று (தமிழ்) செங்கலடி, ஏறாவூர் பற்று நகர் (முஸ்லிம்), மண்முனை வடக்கு (மட்டக்களப்பு), காத்தான்குடி (முஸ்லிம்), மண்முனைப் பற்று (ஆரையம்பதி), மண்முனை மேற்கு (வவுணதீவு), மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை), போரதீவுப்பற்று (வெல்லாவெளி), மண்முனை தென் எருவில் பற்று (களுவாஞ்சிக்குடி) என்பன.

கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலகத்திலிருந்து 'வாகை'(1998) என்னும் சஞ்சிகை வெளிவந்தது. இச்சஞ்சிகையின் நோக்கம் குறித்து பிரதேச செயலாளர் ராகுலநாயகி பின்வருமாறு கூறுகிறார். "இச்சஞ்சிகை கலையும் கலாசாரமும் ஒன்றிணைந்த வாழ்க்கை ஒரு மனிதனை பண்படுத்துவதற்குரிய வாய்ப்பை அளிக்கின்றது. பண்பான மனிதர்களின் கூட்டம் ஒரு சமூகத்தை பரிணமிக்கின்றது. அந்த வகையில் வாகரைப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கலைஞர்கள் மாணவர்களின் ஆக்கங் களையும் கௌரவிக்கப்படுகின்ற கலைஞர்களின் விபரங்களையும் தாங்கி வருவது சிறப்பம்சமாகும்". (ராகுலநாயகி,'வாகை': 2014).

*கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்திலிருந்து 2000ஆம் ஆண்டு முதல் 'இளம்பரிதி' எனும் சஞ்சிகை வெளிவந்தது. இச்சஞ்சிகையின் ஒன்பதாவது இதழ் (2012-2013) கோறளைப்பற்று கடந்து மாவட்ட மட்ட வரலாற்றின் வேர்களான இடங்களின் பெயர்களைத் தாங்கி வெளிவந்தது.*

*கோறளைப்பற்று மத்தி (முஸ்ஸிம்) பிரதேச செயலகத்திலிருந்து 'வாழை மடல்' (2013) என்னும் சஞ்சிகை வெளிவந்தது. முஸ்லிம் எழுத்தாளர்கள் பலரது ஆக்கங்கள் இச்சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக ஏ.பீ.எம். இத்ரீஸ், எஸ்.எல்.எம். ஹனீபா, ஜிப்ரி ஹாசன், ஓட்டமாவடி அறபாத் ஆகியோர்களின் ஆக்கங்களைக் குறிப்பிடலாம். கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச செயலகத்திலிருந்து 'மருதோன்றி' என்ற சஞ்சிகை வெளிவந்தது. கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலகத்திலிருந்து 'குறிஞ்சி' என்ற சஞ்சிகை வெளிவந்தது.*

*ஏறாவூர்ப்பற்று (தமிழ்) செங்கலடி பிரதேச செயலகத்திலிருந்து 'நானிலம்'(1997) என்னும் சஞ்சிகை வெளிவந்தது. 2017இல் வெளிவந்த சஞ்சிகையில் மட்டக்களப்புப் பிரதேச மக்களின் நாட்டார் தெய்வ வழிபாடுகள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக பெரியதம்பிரான் வழிபாடு, சுடலை வைரவர் வழிபாடு, வதனமார் வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு, வைரவர் வழிபாடு, நாகதம்பிரான் வழிபாடு, குமாரர் வழிபாடு என்னும் வழிபாடுகளைக் குறிப்பிடலாம். ஏறாவூர்ப்பற்று நகர் பிரதேச செயலகத்திலிருந்து 'தோழன்'(2000), 'இனசமதி'(2012) என்னும் சஞ்சிகைகள் வெளிவந்தன. 'இனசமதி' என்னும் சஞ்சிகை "சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு ஆகியவற்றினூடாக இனங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டுக்காக உழைக்கும் சந்ததியினரை உருவாக்க முடியும்." ('இனசமதி': 2013) என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. காத்தான்குடி பிரதேச செயலகத்தில் இருந்து 'ஸம் ஸம்'(2006) என்னும் சஞ்சிகை வெளிவந்தது.*

*மண்முனைப்பற்று(ஆரையம்பதி) பிரதேச செயலகத்திலிருந்து 'சிகரம்' என்னும் சஞ்சிகை வெளிவந்தது. மண்முனை மேற்கு(வவுணதீவு) பிரதேச செயலகத்திலிருந்து 'அகணி' என்னும் சஞ்சிகை வெளிவந்தது. 2013இல் வெளிவந்த இச்சஞ்சிகை அதிகளவான வவுணதீவுப் பிரதேசக் கலைஞர்களை இனங்காட்டியுள்ளது. உதாரணமாக ந.சுந்தரலிங்கம், மு.கணேசமூர்த்தி, கி. தவராசா, கு.பிரபாகரன், லீ.முத்துக்குமார், க.மயில்வாகனம், கு.டிலானி, மாரிமுத்து, இ.பற்றீசியா ஆகியோர்களைக் கூறலாம். மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) பிரதேச செயலகத்திலிருந்து 'சுயம்பு'(2012) என்னும் சஞ்சிகையும், போரதீவுப்பற்று (வெல்லாவெளி) பிரதேச செயலகத்திலிருந்து 'மருதம்' என்னும் சஞ்சிகையும், மண்முனை தென் எருவில் பற்று (களுவாஞ்சிக்குடி) பிரதேச செயலகத்திலிருந்து 'எழுவான்' என்னும் சஞ்சிகையும் வெளிவந்துள்ளது. மண்முனை வடக்கு (மட்டக்களப்பு) பிரதேச செயலகத்திலிருந்து 'தேனகம்'(1993) சஞ்சிகை வெளிவந்தது. இச்சஞ்சிகை 1993 தொடக்கம் 2017 வரை இருபத்துநான்கு சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன.*

*இவ்வாறு மட்டக்களப்புப் பிரதேச சஞ்சிகைகளை வெளியீட்டின் அடிப்படையில் வகைப்படுத்தி நோக்குவதனூடாக ஈழத்துச் சஞ்சிகை வளர்ச்சியில் மட்டக்களப்புச் சஞ்சிகைகளின் பங்களிப்பு முக்கியமாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*



கட்டுரை

# கல்வியின் பண்புத்தர விருத்தியில் ஆசிரியர் வாண்மை விருத்தி

சின்னத்தம்பி முருகவேள் அதிபர் (BEd,PGDM)

ஒரு சமூகத்தின் விருத்தியானது புலமைசார் விருத்திபெற்ற மனித மூலவளத்திலேயே தங்கியுள்ளது. அறிவு மையப் பொருளாதாரத்தில் குறிக்கப்பட்ட சமூகம் தன்னைப் பொருத்தப்பாடு அடையச் செய்வதற்கு புலமைசார் விருத்தி பெற்ற மனித மூலவளம் இன்றியமையாதது. அறிவுப் பொருளாதார கட்டமைப்பிற்கு ஆராய்ச்சியும் புத்தாக்க ஆற்றலும் அமையப்பெற்ற சுறுசுறுப்பான மனித மூலவளம் அவசியம்.

ஒவ்வொரு குடிமகனையும் ஆக்கபூர்வமான முறையில் சிந்தித்து செயற்பட்டு உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுத்தருகின்ற விதத்தில் உழைக்கக்கூடிய ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்க வேண்டும். மாணவர்கள் தனித்து புத்தக அறிவினைக் கொண்டவர்களாக அல்லாது தொழில்சார் திறன்களை உடையவர்களாக உருவாக்கப் படல் வேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும்போதே இருக்கின்ற தொழிநுட்பங்களை புத்தாக்கம் செய்து தேவைக்கேற்ற முறையில் பயன்படுத்தி சமூகத்தில் பொருளாதார நிலையைப் பலப்படுத்தலாம். இவ்வாறான உயர் அறிகைசார் (Higher Order cognitive skill) உயர்நிலைப்பட்ட சிந்தனைகளையும் (Higher order thinking skill) வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களையே சாரும். அதாவது கல்வியின் பண்புத்தர விருத்தியும் காலத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்ட பங்களிப்புக்களும் பிரதானமானவை.

கல்வியின் பண்புத்தர விருத்தியென்பது தனித்து பௌதீக அபிவிருத்தியை மட்டும் கருத்திற் கொண்டதாக அமையாது உள, ஆன்மீக வளர்ச்சியுடன் கூடிய மனித வாழ்க்கையின் பண்பை மேம்படுத்தக்கூடிய பல்வேறு உத்திகளை உள்ளடக்கிய செயற்கருமத் தொடராகும். இன்றைய கல்வித்துறையில் பண்புசார் தன்மையின் உள்ளடக்கம் செயற்சாதனை (Performance), நம்பிக்கைத் தத்துவம் (Reliability), உரிய இலட்சணம் (features), ஆக்கக் கூற்றுக்கேற்ற

தாயிருத்தல் (conformance), கால பாவனை Derability, தொடர் பயன்பாட்டிற்குரியது (Serviceability), அழகுணர்வு (Aesthetic) பொருளாதாரத் தன்மை (Ecconomic) ஆகிய இயல்புளை கொண்டதாகும்.

இத்தகைய பண்புசார் இயல்புகள் மாணவர் மத்தியில் தற்துணிவு (Assertative) சுயமாக வேலை செய்யும் ஆற்றல், சுய மதிப்பீடு, சுய முகாமைத்துவம், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், நேர்மனப்பாங்கு, வாழ்க்கை நீடித்த கற்றல், சமூக கலாசார புரிந்துணர்வு, நெகிழ்ச்சியுடமை குழுவாக இணைந்து செயற்படல், தொடர்பாடல் திறன் ஆகிய தேர்ச்சிகள் மேம்படுத்தப்படும் வகையில் உருவாக்கப் படவேண்டும்.

அந்த வகையில் கல்வியின் பண்புத்தர விருத்தியில் பங்களிப்பு செய்கின்ற காரணிகளுள் ஆசிரியரின் தொழில்சார்ந்த தகமைகள், வாண்மைசார் திறன்கள், கற்றல்-கற்பித்தலுக்கான சிறந்த திட்டமிடல்கள் வினைத்திறன் மிக்க கற்பித்தல் -கற்றல் செயற்பாடுகள் போன்றவை பிரதான இடத்தைப் பெறுகின்றன.

அவற்றிலும் ஆசிரியர் தொழில்வான்மை விருத்த முதன்மையான கருப் பொருளாகின்றது. ஒரு நாட்டில் ஆசிரியர்கள் எத்தரத்தில் உள்ளனரோ அத்தரத்திலேயே அந்நாட்டின் கல்வி அறிவும் காணப்படும் என்பது பொதுவான கருத்தாகும். ஆசிரியர்களுக்கு இளம் தலைமுறையினரை உருவாக்கும் முக்கிய பணியொன்று உள்ளது. எதிர்காலத்தை பொறுப்புடன் நம்பிக்கையுடன் நோக்குபவர்களாக மட்டுமன்றி அர்த்தமுள்ளதாக உருவாக்கும் வகையில் இளம் தலைமுறையினரை கட்டியெழுப்ப வேண்டும். சர்வதேசத்தின் புதிய சவால்களுக்கு முகங்கொடுத்து புரிந்துணர்வு மற்றும நவீன மயமாக்கல் சிந்தனையுடன் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் இளைஞர் சமூகத்தை உருவாக்க வேண்டும். அந்த வகையில் இன்றைய கல்விச் செயற்பாடுகளின் நடைமுறைகளை மீளமைக்க வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கு அவசியமாக இருப்பதுடன் கல்வியில் பண்புத்தர விருத்திக்கு தேவையான தேர்ச்சிகளை ஆசிரியர்கள் அடையும் வகையில் தொழில்வாண்மையினை விருத்தி செய்வது கட்டாயமானதாகும்

கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனுடையதாக்குவதில் ஆசிரியர் வகிபங்கு இன்றியமையாதது. கற்றலில் “தற்துணிவு” (Asserctative) தொழிநுட்பம் இணைய வழியாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ள இன்றைய காலகட்டத்தில் கற்றலுக்கு பிறர்மீது ஆளிடைத் தொடர்பாக முற்று முழுதாக தங்கியிருக்கும் நிலையில் இருந்து கற்போர் விடுவிக்கப்படுகின்றனர். அதே வேளை அளவுக்கு அதிகமான தகவல்களும் அறிவும் இணையத்தளம் வழியாக வரும் போது அவற்றை முகாமை செய்யும் திறனை வளர்க்கும் ஆற்றலை

கற்பித்தலில் முன்னெடுக்க வேண்டிய தேவையில் புதிய ஆசிரியத்துவம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பாடசாலைகளின் உயிர் நாடியாக விளங்கும் மாணவர்களுக்கு பண்புசார் விருத்தியுடைய சிறந்த கல்வியை வழங்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்ததாகும். நவீன எண்ணிமச் சூழலில் பேனாவும் கடதாசியும் கைவிடப்பட்டு விசைப்பலகையுடன் தொழிற்படும் நிலைத்தோற்றம் பெற்றுவருகின்றது. அத்துடன் நீண்ட நேர விரயத்துடன் தேடப்பட்ட தகவல்களும் அறிவும் மிக விரைவாக கைக்குள் வந்துவிடும் செயற்பாட்டை இணையம் தந்துள்ளது.

மிகப்பெரிய நூலகம் கைக்குள் கொண்டு வரப்பட்டு திரையோடு உறவாடும் புதிய கற்றல் முறையொன்று உருவாக்கம் பெற்றுள்ளது. முன்னர் நிலவிய கற்றல் பற்றிய சிந்தனைகளும் எடுகோள்களும் மாற்றமுறத் தொடங்கியுள்ள இன்றைய இளைய சந்ததியினை வளப்படுத்த இன்றைய ஆசிரியர்கள் தமது சொந்த வாண்மைசார் அறிவையும் தொழில்சார் திறன்களையும் தொடர்ச்சியாக வளர்த்துச் செல்ல வேண்டியவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாத தாகும். அத்துடன் ஆசிரியம்சார் செயல்முறைகளை இற்றைப் படுத்துபவர்களாகவும் வாண்மைக் கல்வியூடாக தம்மைப் புதுப்பிக்க வேண்டியுள்ளவர்களாகவும் தமது கற்பித்தல் தொழில் பற்றி மீள்சிந்தனை உடையவர்களாகவும் காணப்படும் போதே கல்வியில் பண்புத்தர விருத்தியை அடைய முடியும்.




***(நம் தாய்த்தமிழின் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினம் - டிசம்பர் 11. நமது நூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு டிசம்பர்-10, அத்தோடு பாரதியின் 100ஆவது நினைவு ஆண்டு நிறைவும் இவ்வருடம் அமைந்துள்ளமை சிறப்பு)***





# நூலகம் தந்த கோமகன்!

**எஸ்.ஏ.ஸ்ரீதர்** - நூலக சேவகர்







***நான்*** *க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்த பின்னர், **2001**ஆம் ஆண்டில் முதன்முறையாக வாழைச்சேனை பொதுசன நூலகத்தில் அங்கத்துவராக சேர்ந்து கொண்டேன். என்னுடைய அங்கத்துவ இலக்கம் **372**. பல வருடங்களாய் சாப்பிடாமல் இருந்த ஒருவன். ஒரே தருணத்தில் அனைத்து வித சாப்பாடும் கிடைத்தால் எப்படி தவிப்பானோ, அத்தகைய நிலை எனக்கு நூலகத்திலுள்ள நூல்களைக் கண்டதும்! வாழைச்சேனை பொது நூலகத்தில் என்னுடைய கை படாத நூல்களே கிடையாது என்பார்கள். எந்த நூல் எங்கு உள்ளது என என்னிடம் கேட்பார்கள். அப்படி புத்தகங்கள் மீது கிறுக்குப் பிடித்து திரிந்தேன். இந்தப் பசி திடீரென உண்டானதல்ல.*

*சிறுவயது முதலே வாசிப்பின் மீது பித்தாகி பாடசாலைக்கு சென்று வந்த பின்னுள்ள நேரங்களில் எனது சகபாடிகளுடன் எங்கள் கிராமத்தில் இருந்த வெட்டை வெளிகளெல்லாம் சுற்றித் திரிவோம். அங்கொன்றும் இங்கொன்றுமாய் வேலியோரங்களில் சிக்கியுள்ள பத்திரிகைத் துண்டுகளை பொறுக்கி இரு காற்சட்டைப் பைகள் உள்ளும் நிரப்பிக் கொள்வோம் . பின்னர் வீடுவந்து அவற்றினை பரப்பி, விரித்து தேவையானதை வாசித்து மகிழ்வோம்.*

*வியாழக்கிழமை தோறும் தந்தையார் வாங்கி வருகின்ற தினமுரசு பத்திரிகையினை அவர் படித்து முடித்து விட்டு வெளியே செல்லும் வரை காத்திருந்து ஒன்று விடாமல் வாசிப்பேன்! அயலில் இருந்த காகித ஆலை உத்தியோகத்தரான பாலையா மாமாவிடம் சென்று, இந்தியா டுடே இதழ்களை இரவல் வாங்கி வந்து படிப்பேன். என்னுடைய வாசிப்பிற்கு எது கிடைத்தும் தீரவில்லை. அடுத்த வீதியில் இருந்த கந்தசாமி மாமா குடும்பத்தினர் கிறிஸ்தவர்கள். அவர்களிடம் பைபிளைக் கூட இரவல் பெற்று வந்து அதையும் ஒரு கதைப் புத்தகம் எனப் படித்திருக்கின்றேன்.*

என்னுடைய வாசிப்பு தாகம் கண்ட தந்தையார் அந்நாட்களில் வாழைச்சேனை சந்தையில் காதரின் கடையில் இருந்து முகமூடி வீரர் மாயாவியின் கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார். நிறைய மாயாவி கதைப் புத்தகங்கள் வாங்கி படித்து சேகரித்திருந்தோம்.

இப்படி வாசிப்பின் மீது தீராக்காதல் கொண்ட எனக்கு எப்போதும் என்னைச் சுற்றி புத்தகங்கள் இருக்க வேண்டும் என ஆசைப்பட்டேன். நான் மரணிக்கும் போது கூட புத்தகங்களின் நடுவில் தான் கடைசி மூச்சினை விட வேண்டும் என சிறுவயதில் நினைப்பேன்.

வாழைச்சேனை பொதுநூலகத்தில் அங்கத்துவனாகச் சேர்ந்த பின், படித்து முடிந்ததும் நூலகப்பணி அல்லது ஆசிரியப்பணி இரண்டில் ஒன்றுதான் எதிர்காலம் என ஆசைப்பட்டேன். இந்தப் புத்தகங்கள் மீது காதல் அதிகரித்ததால் பாடசாலைப் புத்தகங்களில் கவனம் செல்லவில்லை. 2008இல் நூலகவியல் கற்கைக்கு விண்ணப்பித்தேன். வகுப்புக்களுக்கும் சென்று வந்தேன். பின்னர், பொருளாதாரத் தேடல்கள், இல்லற வாழ்க்கை என தொடர்வதற்கு என் முயற்சி போதவில்லை என்றே நினைக்கின்றேன்.

பொருளீட்ட ஒரு தொழில் பார்த்தாலும், அங்கேயும் புத்தகங்களும் அச்சுமாய் என் கனவு விரிந்து கொண்டே சென்றது. விவேகானந்தரின் வாக்கியம் ஒன்று எப்போதும் என் நெஞ்சில் இருக்கும். "எந்த விடயத்தை நீ அடைய வேண்டும் என விரும்புகிறாயா! அதற்காக தினமும் 10 நிமிடங்களாவது ஒதுக்கு. 10 வருடங்களில் நீ அதுவாகவே ஆகிவிடுவாய்! எல்லா ஆற்றலும் உன்னுள்ளேயே உள்ளன. உன்னால் எதையும் சாதிக்க முடியும்!" பாடசாலைக் காலத்தில் ராமகிருஸ்ண மிஷனின் புத்தகக் கண்காட்சியில் நான் வாங்கிய புத்தகத்தில் படித்த விடயங்கள் இவை. வருடங்கள் கணக்கில்லை! ஆனாலும் என் கனவை நனவாக்க தேவதூதன் வந்தார். ஆம்! 2001ஆம் ஆண்டு நூலகத்தில் அங்கத்துவனானது முதல் அங்கு பணியாற்ற வேண்டும் என ஆசைப்பட்டேன். 2011இல் அது நிறைவேறியது. அதனை நிறைவேற்றிய தேவதூதன் எங்கள் அண்ணன்! கிழக்கின் முதல் முதலமைச்சர் கௌரவ. சிவ.சந்திரகாந்தன் அவர்கள்! தனது கனவாக அவர் உருவாக்கிய பேத்தாழை பொதுநூலகத்தில் பணி வழங்கி, நூலகப் பணியினை கனவாகக் கொண்டிருந்த ஒருவனுக்கு அந்தக் கனவினை நனவாக்கினார். ஆம், 2011, நவம்பர்-01ஆம் திகதி கௌரவ. சிவ.சந்திரகாந்தன் அவர்களது கரங்களினால் நூலக உதவியாளர் நியமனக் கடிதம் பெற்றேன். இன்று, இப்பணிக்கு வந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

"நீங்க நிறைய வாசிக்கிற நீங்களாம் என, இப்ப வாசிக்கிற இடத்திலயே வேல. நிறைய வாசியுங்கள்" எனத் தோளைத் தட்டிக் கொடுத்தார். அதற்கு முன் தொலைவில் பார்த்து வியந்த அந்த மனிதன் நேரில் அதுவும் அருகில் முதன்முறையாக நான் கண்டபோது என்னிடம் அவர் பேசிய வார்த்தைகள் இவை.

என் பாடசாலைக் காலத்தில் எனது பிறந்த மண்ணான வாகரையினைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவன் எனக்கு உற்ற தோழனாக இருந்தான். தன்னுடைய சைக்கிளில் என்னை ஏற்றிக் கொண்டு வித்தை காட்டி என்னை விழவைத்ததால் உண்டான காயத்தினால் உண்டான தழும்பு இப்போதும்

என் கைளில் உள்ளது. அவன் தனது வீட்டில், பழைய றங்குப் பெட்டியில் இருந்த பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற பழம்பெரும் நூல்களை எல்லாம் என் கண்ணில் முதன் முதல் காட்டியவன்! அவன் பெயர் ரமேஸ்குமார்! அவனுடைய இளைய சகோதரன் வினோத்! அவனும் என்னுடைய இளைய சகோதரனும் வகுப்புத் தோழர்கள்! இந்த பணி எனக்குக் கிடைத்ததில் பெரும்பங்காற்றியவன் வினோத் (பவித்திரன்).

பேத்தாழை பொதுநூலகத்தின் 10ஆவது ஆண்டு விழா சிறப்பு மலரில் என் கதையினைக் கூற விழையவில்லை. என் போன்ற எத்தனையோ பேரின் கனவுகளை நனவாக்கிய எங்கள் மதிப்பிற்கும் பாசத்திற்குமுரிய கௌரவ. சிவ.சந்திரகாந்தன் அண்ணனின் பணிகளுக்கு சாட்சியாய் எனக்குத் தெரிந்த விடயங்களை பதிவு செய்கின்றேன்.

பேத்தாழை பொது நூலகத்தில் பணி கிடைத்தவுடன், நூல்கள் கொள்வனவு செய்யும் போது என்னென்ன நூல்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். என்னென்ன சஞ்சிகைகள் பெறப்பட வேண்டும். நூலகத்தில் உள்ள சுவர்களில் எல்லாம் அறிஞர்களின் படங்களும் அவர்கள் பற்றிய குறிப்புக்களும் அடங்கிய பதாதைகள் தொங்க விடப்படவேண்டும் என எனக்குத் தெரிந்த விடயங்களை சிறு புத்தகமாக்கி முதலமைச்சர் அவர்கள் நூலக வேலைகளை பார்வையிட வந்த போது, அவரிடம் காண்பித்தேன் அதனை தன்னுடைய உதவியாளரிடம் கொடுக்கச் சொன்னார்.

பின்னர், சிறுவர் நூலகத்திற்கு சில வகையான நூல்களைப் பெற்றால் சிறப்பாக இருக்கும் எனக் கோரிக்கை வைத்தேன்! அவற்றை செயலாக்கும் வாய்ப்பினை எனக்கே வழங்கினார். சிறுவர் நூலகத்தில் நான் ஆசைப்பட்ட நூல்களை கொண்டு வந்து சேர்க்க முடிந்தது. புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக புத்தகப்பட்டியலை தயார் செய்யுமாறு என்னைப் பணித்தார். நாட்கணக்காக இணையத்தின் மூலம் நூல் பட்டியல்கள் தயார் செய்து கொடுத்தேன். நூலகத்திற்கு வருகின்ற நூல்களில் தேவையற்ற, பொருத்தமற்ற நூல்களைத் திருப்பி அனுப்பினேன். நூல்களுக்காக அவர் வழங்குகின்ற பணத்தினை வீணாக்குவதற்கு எவ்விதத்திலும் நான் துணை போகக் கூடாது என்பதில் கவனமாய் இருந்தேன்.

பின்னர், ரூ.10 இலட்சத்திற்கு நூல்கள் கொள்வனவுக்காக என்னையும், பேத்தாழை கிராம அபிவிருத்திச் சங்கத்துப் பிரதிநிதி ஒருவரையும் இந்தியாவிற்குச் சென்று புத்தகங்களைத் தேர்வு செய்யுமாறும் அவற்றை இங்கே கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைத் தான் செய்வதாகவும் பணித்தார். ஆனால். அது நிறைவேறாமலே போனது. அந்தப் பணத்திற்காக நாம் வழங்கிய புத்தகப்பட்டியல்களுக்கான நூல்கள் இங்கே வந்து சேர்வதற்கு காலதாமதம் ஆனது.

புத்தக இறக்குமதியாளர் தனது நிறுவனத்திற்கு கப்பல் மூலம் வந்த புத்தகங்கள் துறைமுகத்தில் தீப்பிடித்து எரிந்தாக தெரிவித்தார். அப்போது தேர்தல் காலம், இந்தப் பணத்தினை முதலமைச்சர் ஊழல் செய்துவிட்டார் என எதிர்க் கட்சியின் ஒரு முக்கிய உறுப்பினர் நமது ஊரிலேயே பிரச்சாரம் பண்ணித் திரிந்தார். ஆனாலும், புத்தகத்திற்காக வழங்கப்பட்டிருந்த பணத்திற்குரிய பெருமளவு புத்தகங்கள் பெறப்பட்டிருந்த நிலையில், மீதிப்புத்தகங்கள் தமிழ்நாட்டில் இருந்து வந்து சேர்வதற்கிடையில்!

நூலக விசயத்தில் கூட அரசியல் செய்தனர். ஆனாலும், இப்பணியில் ஈடுபட்டிருந்த எங்கள் மீது கௌரவ முதலமைச்சர் கோபப்படவில்லை. விரைவாக புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். (பின்னர் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சி மற்றும் பூபாலசிங்கம் புத்தகசாலைகளில் மீதித் தொகைக்குரிய புத்தகங்களை கொள்வனவு செய்யுமாறு புத்தக நிறுவனத்தினர் எம்மைக் கேட்டுக்கொண்டனர். அதன்படி நாங்கள் புத்தகங்களைப் பெற்று நூலகத்திற்கு கொண்டு வந்தோம். இதன்போதுதான் இலங்கையின் பழைய வரலாறு தொடர்பான பெறுமதி மிக்க ஆங்கில நூல்களையும் கொள்வனவு செய்து வந்தோம்.)

உண்மையாக தான் நேசித்து உருவாக்கிய ஒரு அறிவாலயத்தின் பணிக்காக தான் ஒதுக்கீடு செய்த நிதியினை ஊழல் செய்து விட்டார் என வீண்பழி சுமத்திய போதும்! அந்தப் பேர் தனக்கு ஏற்படக் காரணமானவர்கள் மீது அவர் கோபப்படவில்லை. மாறாக உண்மை நிலை அறிந்து செயற்பட்டார். அதனால் தான் இன்று அவர் இந்த இடத்திலும் அவர்மீது வீண்பழி சுமத்தியோர் இன்று எங்கே என்ற இடத்திலும் உள்ளனர். ஓரளவு படித்த, வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த என்போன்ற எத்தனையோ இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி இன்று அவர்களும் சமூகத்தில் கௌரவமாய் வாழ வழிசெய்து தந்திருக்கிறார். நமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களைக் கூட பணத்திற்காய் விற்பனை செய்த நமது அரசியல்வாதி கள் மத்தியில், சமூகத்தின் நலனில் உண்மையான அக்கறையுடன் செயற்பட்டு வரும் ஒப்பற்ற தலைவராய் விளங்குகிறார் சிவ.சந்திரகாந்தன் அவர்கள்.

ஒருமுறை விகடன் பதிப்பாக வெளிவந்த 'பிரிட்டானிக்கா தமிழ் கலைக்களஞ்சியம்' புத்தகங்கள் வெளிவந்திருந்த சமயம். விலை சற்று அதிகமாக இருந்தது. ஆனாலும், நூலகத்திற்கு தேவை என்று நினைத்தால் நமது பிள்ளைகளுக்கு பயன்படுமாக இருந்தால் தேவையான புத்தகங்களை கொள்வனவு செய்யுங்கள் என ஊக்கப்படுத்தினார்.

எம்மில் நம்பிக்கை வைத்து எங்களை வழிநடத்தினார். பின்னர், மாகாணசபை உறுப்பினராய் இருந்த காலகட்டத்தில் கூட குறுகிய கால அழைப்புக்களை ஏற்று, எமது பணியினை ஊக்கப்படுத்தவேண்டும் என்பதற்காக நூலகத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றி சிறப்பித்தார்.

அவர் சிறையில் இருந்த பொழுதுகூட புத்தகங்களுடன் தான் இருந்தார். அவர் சிறையில் இருந்த பொழுதுதான் தன்னுடைய 'வேட்கை' நூலினை எழுதி முடித்தார். அவர் படிப்பதற்குத் தேவையான அரசியல், வரலாற்று நூல்கள் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு விற்பனைக்கு வந்தவுடன் உடனடியாக கொள்வனவு செய்யப்பட்டு அவரிடம் வழங்கப்பட்டன. இந்த விடயத்தினை நாங்கள் நூலகத்திற்காக நூல்கள் கொள்வனவு செய்வதற்கு பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு சென்றபோது அங்கு பணிபுரிகின்ற ஒருவர் மூலம் தெரிந்து கொண்டோம். சிறையில் அவரைச் சந்தித்த போது அவர் எங்களிடம் கேட்டுக் கொண்டதும் புத்தகங்களைப் பற்றித்தான், நமது பிரதேசத்திலுள்ள எழுத்துத்துறையில் ஆர்வம் உள்ளவர்களை ஒன்றிணையுங்கள்.

எதிர் காலத்தில் அவர்களது படைப்புக்களை நூல்களாக்கி ஆவணப் படுத்த வேண்டும் எனவும். அப்போதும் ஒரு மூத்த படைப்பாளி தன்னிடம் கொடுத்திருந்த தன்னுடைய படைப்புக்களின் பிரதிகளை நூலாக்குவது தொடர்பிலும் தான் பேசுவதற்கு என்னையும் பிரகாசையும் அழைத்திருந்தார்.

பேத்தாழை பொதுநூலகத்தினை உருவாக்கி முடித்த பின்னர், மட்டக்களப்பில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் ஒரு மிகப்பெரிய நூலகத்தினை உருவாக்க வேண்டும் என்கின்ற ஆசையுடனேயே மட்டக்களப்பில் பொதுநூலகக் கட்டிடப் பணியினை ஆரம்பித்தார். பின்னர். இடையில் அவர் சிறைப்படுத்தப்பட்டிருந்த காலகட்டத்தில் கட்டிடப் பணி இடைநடுவே நின்றுபோனது! தன் சமூகத்தின் மீது கொண்ட பற்றினாலும், தன் போராட்ட காலத்தில் தான் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மூலமும் கல்வி, அறிவில் நம் சமூகம் மேம்பட வேண்டியதன் முழுமையான அர்த்தம் உணர்ந்து அவர் ஆரம்பித்த பணியினை அவர் சிறையில் இருந்து வெளியில் வருவதற்கிடையில் தாம் முடித்து பேர்வாங்க வேண்டும் என்கின்ற பேராசையில் பலரும் முயன்றனர்.

ஆனால், காலம், இயற்கை என ஒன்று உண்டு.

“இதனை இதனால் இவன்முடிப்பன் என்றாய்ந்து தான்” இயற்கையும், காலமும் ஒரு பணியினை ஒருவனிடத்தே வழங்கும் அது புரியாதவர்கள் எத்தனை முயற்சித்தாலும் அது நடக்காது. கௌரவ.சிவ.சந்திரகாந்தன் அவர்கள், சிறையில் இருந்தவாறே மக்களின்அமோக ஆதரவுடன் தேர்தலில் வெற்றிபெற்று, வட-கிழக்கில் போட்டியிட்ட தமிழர்களுள் அதிக வாக்குகளைப் பெற்று மக்கள் நாயகனாய் வெளியில் வந்து, இடைநிறுத்தப் பட்டிருந்த நூலகக் கட்டுமானப் பணியினை முழுமூச்சில் ஆரம்பித்திருந்தார். அதன் போது ஒரு கலந்துரையாடல் நிகழ்வுக்கு பிரகாசையும் என்னையும் வாழைச்சேனையில் இருந்து அழைத்திருந்தார்.

அங்கு வந்திருந்த தொழினுட்ப கலைஞர்கள், கட்டிட கலைஞர்கள் ஆகியோருக்கு மட்டக்களப்பு நூலகம் எவ்வாறு அமைய வேண்டும் என விவரித்தார். அந்தக் கனவும் விரைவில் நனவாக வேண்டும்! கொரோனா சூழலில் இருந்தும், பொருளாதார நெருக்கடிகளில் இருந்தும் நாடு மீண்டவுடன் நூலகம் முழுமை பெற்று திறக்கப்படும். இது எனது துறைசார்ந்து என்னுடைய அவா. அவர் மூலம் தமது எத்தனையோ இன்னல்களுக்கு விடிவுகாண காத்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் ஒருவனாய்!

அவரது பணிகளை மட்டும் அல்லாது! அவரது வாசிப்பு! அறிவு! புத்தகங்கள் மீது அவர் கொண்டுள்ள காதல்! இதையெல்லாம் நேரில் பார்த்து வாயைப் பிளந்திருக்கிறேன். நான் மிக அண்மைக்காலத்தில் நூலகப் பணி நிமித்தம் எம்மை அழைத்திருந்த போது, அங்கு அவர் பேசப்பேச மெய்மறந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். நூலகத்தில் வேலை செய்வதால் நிறையப் படித்திருப்பார்கள் என எண்ணிக் கொண்டு எம்மிடம் அவர் உலக வரலாற்றில் இருந்து உள்ளூர் வரலாறு வரை! தர்க்க ரீதியாக



ஆதாரங்கள், தகவல்களுடன் பேசியதை கேட்ட போது! என்னவென்று சொல்வேன்! தேர்ந்ததொரு அறிஞனின் வரலாற்று இலக்கியச் சொற்பொழிவு அது! எத்தனை பேருக்கு இந்த வாய்ப்பு கிடைக்கும் எனத் தெரியவில்லை. எங்களுக்கு அது கிடைத்தது.

அவர் பேசப்பேசத்தான் என் மனதில் ஒரு விடயம் ஓடியது "வரலாறு ஒரு புதிய தலைவனைப் படைக்கிறது! அந்தத் தலைவன் ஒரு புதிய வரலாற்றையே படைக்கிறான்" அந்தத் தலைவனின் முன்னால் தான் நாம் இருக்கிறோம் என்பதை உணர்ந்தேன். தானாய் உருவாகுபவர்களை ஞானி என்போம்! காலம் உருவாக்குபவர்களை தலைவர்கள் என்கிறோம்! அந்த இரண்டுமாய் எம் முன்னே ஒருவர் இருக்கிறார். எத்தனைபேர் எத்தனை அவதூறு பேசினாலும்! அரசியலுக்கும் சுயலாபத்திற்குமாய் எத்தனை பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றினாலும்! வரலாறு ஒர் நாள் சொல்லும் எங்கள் நூலகம் தந்த கோமகனின் சிந்தனை வெல்லும்!

இன்று கொண்டாட வேண்டியது பேத்தாழை பொது நூலகத்தின் 10 ஆண்டு நிறைவினை மட்டுமல்ல! அந்த நூலகத்தினையே நமக்காக உருவாக்கித் தந்த இந்த தமிழனையும் தான்!




***இது அவரது 39வது பிறந்த தினத்திற்காய் எங்கள் நூலகத்தினால் வழங்கப்பட்ட நினைவுச்சின்னம் இதிலுள்ள வரிகள் நான் எழுதியது!***




MEDIA UNIT
PETHALAI PUBLIC LIBRARY

பேத்தாழை பொதுநூலகத்தின்
**MEDIA UNIT** வெளியீடு

ISSN 2820-2058
9772820205002